# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20/= பக்கங்கள்: 28 | சுடர் 31 | கதிர் 254 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆடி 22, சனிக்கிழமை 06.08.2016


**முன்னாள் போராளிகள் விடயத்தில் அரசின் நகர்வு என்ன?**

பக். 13

# ராணுவத்தினரும், பொலிஸாரும் புலனாய்வாளர்களுமே பொறுப்பு

## குற்றவாளிகளை பன்னாட்டு நீதிமன்றங்களுக்கு அனுப்பவேண்டும் மக்கள் கருத்தறியும் குழுவிடம் வடமராட்சியில் எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 6

இறுதிப் போரில் என்ன நடந்தது என்ற உண்மை மக்களுக்குத் தெரியும். உறவுகள் யாரிடம் கையளிக்கப்பட்டார்கள் – யாரிடம் அவர்கள் சரணடைந்தார்கள் என்ற உண்மை மக்களுக்குத் தெரியும். எல்லாவற்றுக்கும் இராணுவமும் பொலிஸாரும் புலனாய்வு பிரிவினருமே பொறுப்பாளிகள். அவர்கள் விசாரிக்கப்படவேண்டும். போர்க்குற்றங்கள் தொடர்பில் விசாரணை செய்யப்பட்டு, குற்றவாளிகளாக இனங்காணப்படுவோர் பன்னாட்டு நீதிமன்றங்களுக்கு அனுப்ப வேண்டும். இலங்கை நீதிபதிகளை நம்புவதற்கு தமிழர்கள் ஒரு போதும் தயாரில்லை.

மக்கள் கருத்தறியும் செயலணியிடம் நேற்று இவ்வாறு வலியுறுத்தப்பட்டது. போர்க்குற்ற விசாரணை எப்படி இடம்பெறவேண்டும், நீதி மற்றும் நல்லிணக்கப் பொறிமுறை எப்படி அமைய வேண்டும் என்று மக்கள் கருத்தறியும் செயலணி வடமராட்சி கிழக்கில் தனது அமர்வை நடத்தியது. அமர்வு மருதங்கேணி பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. செயலணியிடம் கருத்துத் தெரிவித்த வடமராட்சி கிழக்கை சேர்ந்த அருட்தந்தை வேலுப்பிள்ளை மிதுசிகன் தெரிவித்ததாவது:

மக்கள் நம்பியது – அலைந்தது போதும். பக். 23

**போரின் பின்னரும் தொடரும் கொடூரங்கள்**

## மக்கள் தெரிவித்தவற்றைக் கேட்ட எமக்கே ஆற்றுப்படுத்தல் தேவை

*முல்லை. வலயச் செயலணியினர் தெரிவிப்பு*

முல்லைத்தீவு, ஓக. 6.

போருக்குப் பின்னரும் இடம்பெறுகின்ற கொடூரங்கள் தொடர்பில் மக்கள் தெரிவித்த கருத்துக்களைக் கேட்ட எமக்கே ஆற்றுப்படுத்தல் தேவைப்படும் என நினைக்கின்றோம்.

இவ்வாறு தெரிவித்தனர் நல்லிணக்கப் பொறிமுறை குறித்த மக்கள் கருத்தறியும் முல்லைத்தீவு வலயச் செயலணியினர்.

போர்க்குற்ற விசாரணைகளை எவ்வாறு முன்னெடுப்பது, காணாமற்போனவர்கள் தொடர்பான அலுவலகத்தை அமைப்பது தொடர்பில், மக்களின் கருத்தறியும் செயலணியினர் நாடு முழுவதும் அமர்வுகளை நடத்தி வருகின்றனர். இதற்கமைய இந்தச் செயலணியின் வலயச் செயலணியினர் முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த எட்டு நாள்களாக அமர்வுகளை நடத்தினர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த மாதம் 26ஆம் திகதி ஆரம்பமான அமர்வுகள் நேற்றுமுன்தினம் வரை நடைபெற்றன. மக்கள் கருத்தறியும் அமர்வின் இறுதியில் முல்லைத்தீவு மக்களுடைய எதிர்பார்ப்பு தொடர்பில் செயலணியினர் தெரிவித்ததாவது:

கரைதுறைபற்று, துணுக்காய், ஒட்டுசுட்டான், மாந்தை கிழக்கு, புதுக்குடியிருப்பு மற்றும் மணலாறு ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் இடம்பெற்ற மக்கள் கருத்தறியும் அமர்வுகளின் போது முன்னிலையாகிய மக்கள், போரின்போதும் அதற்குப் பின்னரும் தமக்கு இழைக்கப்பட்ட பக். 23

## சொந்தக் காணி உள்ளோரை உடன் மீளக்குடியமர்த்துங்கள்

*வலி. வடக்கு இடம்பெயர்ந்தோர் விவகாரத்தில் பாதுகாப்பு அமைச்சிடம் கோரிக்கை*

யாழ்ப்பாணம், ஓக. 6

வலி. வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களில் சொந்தக் காணிகளைக் கொண்டிருக்கும் மக்களை உடன் மீளக்குடியமர்த்த நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் இந்தக் கோரிக்கையை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சியிடம் விடுத்தார்.

இது தொடர்பான கடிதம் பாதுகாப்பு அமைச்சுக்கு நேற்றைய தினம் கிடைக்கப் பக். 23

## மக்கள் கருத்து

- எம் பிள்ளைகளின் நெஞ்சில் ஏறி நிற்பவர்களுடன் என்ன நல்லிணக்கம்?
- சுயலாப அரசியலுக்காக இனவாதத்தைத் தூண்டும் சிங்கள அரசியல்வாதிகள் தண்டிக்கப்படவேண்டும்.
- நல்லாட்சி அரசு மீதான எதிர்பார்ப்பு பொய்த்து விட்டது.
- காணாமற்போனோரைத் தேடிக் கண்டறியும் பலம் அதற்கான அலுவலகத்திற்கு இருக்கவேண்டும்.
- இழந்த பிள்ளைகளை உதவிகளால் மீட்க முடியாது.
- போர் தவிர்ப்பு வலயம் மீதும் மருத்துவமனை மீதும் குண்டு வீசியவர்கள் தண்டிக்கப் படவேண்டும்.
- பன்னாட்டு நீதிபதிகள் முன்பாகவே விசாரணை நடக்க வேண்டும்.
- போர் வெற்றிக் கொண்டாட்டங்கள் நிறுத்தப்பட வேண்டும்.

## சங்கானை இளைஞன் விபத்தில் பரிதாபச் சாவு

*மோட்டார் சைக்கிள் – பஸ் மோதிய விபத்தில்*



யாழப்பாணம், ஓக. 6

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ்ஸும் மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில், மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காரைநகர் வலந்தலைச் சந்திக்கு அண்மையில் நேற்றுக் காலை நடைபெற்ற இந்த விபத்தில் சங்கானை தேவாலய வீதியைச் சேர்ந்த ரவிகரன் (வயது – 21) உயிரிழந்தார். யாழ்ப் பாணத்திலிருந்து காரைநகர் சாலையை நோக்கிப் பஸ் சென்ற போதே விபத்து பக். 23

## குமாரபுரம் கொலைத் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்க

*ஜனாதிபதியிடம் வலியுறுத்து*

மூதூர், ஓக. 6

திருகோணமலை, குமாரபுரம் படுகொலை தொடர்பான தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் மேன்முறையீடு செய்ய சட்டமா அதிபருக்கு பணிப்புரை விடுக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் வலியுறுத்தப்பட்டது.

1996ஆம் ஆண்டில் பெப்ரவரி 11 ஆம் திகதி திருகோணமலை, குமாரபுரத்தில் 26 பொதுமக்கள் தெஹிவத்தை முகாமைச் சேர்ந்த இராணுவத்தினரால் துப்பாக்கிப் பிரயோகம் செய்து கொல்லப்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. கொல்லப்பட்டவர்களில் கர்ப்பிணித் தாய் ஒருவரும் 16 வயதுடைய மாணவி ஒரு வரும் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் கொல்லப்பட்டார்கள் என்பதும் செய்திகள் மூலம் தெரியவந்தது.

நீண்டகாலமாக இழுபட்டுக் கொண்டுவந்த இந்த வழக்கு கடந்த மாதத்தில் முடிவுக்கு வந்து தீர்ப்பும் வழங்கப்பட்டது. குற்றஞ்சாட்டப்பட்ட இராணுவத்தினர் எதுவித குற்றமும் அற்றவர்களாக்த் தீர்ப்பளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர். ஆயினும் இருபது வருடங்களாக நீதியை எதிர்பார்த்திருந்த குமாரபுரம் மக்கள் இந்தத் தீர்ப்பினால் ஏமாற்றமடைந்துள்ளனர் என கிழக்கு மாகாண சபை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினரும் கல்வி அமைச்சருமான சி.தண்டாயுதபாணி, ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

(விரிவு பக்கம் 04)

## நல்லூர் ஆலய திருவிழாவில் பாதுகாப்புக்கு 750 பொலிஸார்

யாழ்ப்பாணம், ஓக. 6

நல்லூர் கந்தனின் திருவிழாவில் 750 பொலிஸ் உத்தியோகத்தர்கள் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்படுவார்கள். அதிகளவில் பெண் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரட்ண.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

நல்லூர் கந்தனின் வருடாந்த பெருந்திருவிழா நாளைமறுதினம் 8ஆம் திகதி ஆரம்பமாகி செப்ரெம்பர் 2ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. நல்லூர் உற்சவத்தின்போது, பல பாகங்களில் இருந்தும் பக்தர்கள் முருகப்பெருமானின் அருளைப் பெற வருகை தருவார்கள். இதனால் காங்கேசன்துறை பொலிஸார் சிறப்பு பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்படுவார்கள். வடக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் இருந்தும் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்படுவர். நல்லூர் ஆலய உற்சவத்தின் போது, பெண் அடியார்களின் பாதுகாப்புக் கருதி பக். 23

## நல்லிணக்கச் சூழல் இன்னும் வடக்கில் ஏற்படவேயில்லை

*எவ்வாறு அதனைக் கொண்டுவரப் போகிறீர்கள்? ஐரோப்பிய ஒன்றியத்திடம் விக்கி கேள்வி*

யாழ்ப்பாணம், ஓக. 6

அமைதியையும் நல்லிணக்கத்தையும் கொண்டு வருவதற்கான சூழல் வடக்கு மாகாணத்தில் ஏற்படாத போது, எவ்வாறு அதனைக் கொண்டுவர யோசிக்கின்றீர்கள்?

இவ்வாறு ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பு அதிகாரி யோடி கரஸ்கோ முனாஸிடம் கேள்வி எழுப்பினார் வட மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன். பக். 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முச்சந்தி முரளி**



# நந்திக்கடலில் தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் இளைப்பாற இடமில்லை

## வட்டுவாகல் பாலத்தில் ஓய்வெடுப்பதால் விபத்துக்கள் ஏற்பட வாய்ப்பு என மக்கள் அச்சம்



முல்லைத்தீவு, ஓக. 6

முல்லைத்தீவு - வட்டுவாகல் பாலத்தின் இருபுறமும் கடற்படையினர் முகாமிட்டுள்ளனர். நந்திக்கடலில் இரவு வேளைகளில் தொழில் ஈடுபடும் மீனவர்கள் பாலத்திலேயே படுத்து உறங்கி விடுகின்றனர். இதனால் விபத் துக்கள் ஏற்படுவதற்கான வாய்ப் புகள் உள்ளன. எனவே மீனவர்களுக்கு ஏற்ற வசதிகளை அமைத்து கொடுக்க வேண்டும். இவ்வாறு கோரிக்கை விடுக்கின்றனர் முல்லைத்தீவு மக்கள்.

பரந்தன் - முல்லைத்தீவு வீதியின் முக்கியமான பாலமாக இந்த வட்டுவாகல் பாலம் உள்ளது. அதன் ஊடாகத்தான் முல்லைத்தீவுக்கான போக்குவரத்துக்கள் இடம்பெறவேண்டும். இந்தப் பாலம் ஒடுக்கமானது. போரினால் பாலம் சேதமடைந்து காணப்படுவதனால், அதனூடான போக்குவரத்துக்கள் மிகவும் நிதானமாகவே மேற்கொள்ளப்படுகின்றன. இரவு வேளைகளிலும் இந்தப் பாலத்தினூடகவே போக்குவரத்துக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

பாலத்தின் இருமுனையிலும் கடற்படையினர் பெரியளவிலான முகாமை அமைத்துள்ளனர். வட்டுவாகல் நந்திக்கடலில் வீச்சுவலை மீன்பிடித்தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் ஓய்வெடுப்பதற்கு இடவசதிகள் இல்லாது, களைப்பாறுவதற்காக வட்டுவாகல் பாலத்தின் மீது வந்து அமந்து விடுகின்றனர். ஓய்வெடுக்கும் போது சிலர் களைப்பில் பாலத்திலேயே தூங்கிவிடுகின்றனர். இதனால் விபத்துக்கள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் அதிகம் உள்ளன.

விபத்துக்கள் ஏற்பட்டதன் பின்னர் இதுபற்றி சிந்திக்காது, முன்னரே இதற்கான முடிவுகள் எட்டப்படவேண்டும். முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களுடைய வாழ்வாதாரங்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களுடைய உயிருக்குப் பங்கம் ஏற்படுவதை எவரும் அனுமதிக்க முடியாது. எனவே உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

"தமது வாழ்வாதாரத்துக்காக தொழில் ஈடுபடும் மீனவர்கள் வலைகளை வீசிய பின், இளைப்பாறுவதற்காக பாலத்தில் தங்குகின்றார்கள். ஆற்றின் இரு பகுதிகளிலும் கடற்படையினர் நிலைகொண்டுள்ளதால் தொழில் ஈடுபடுபவர்கள் கரைகளில் நின்று தொழில் செய்ய அனுமதியில்லை. அதன் காரணத்தால் பாலத்தில் இருந்தவாறே தொழிலில் ஈடுபடுகிறார்கள்" என செல்வபுரம் கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினை தொடர்பில் ஆராய்வதற்காக அண்மையில் மாவட்டத்துக்கு வருகைதந்த மீன்பிடி அமைச்சர் மகிந்த அமரவீர, வட்டுவாகல் பகுதிக்கும் சென்றிருந்தார். அப்பகுதியில் தொழில் ஈடுபடும் மீனவர்கள் ஆற்றின் இரு மருங்கும் தொழில் செய்ய அனுமதி வழங்கும்படி கேட்டபோது, அமைச்சரால் அனுமதி வழங்கப்பட்டது. (வ-21,ரி7)

# கணவனைக் கொன்ற சிப்பாய்க்கு ஆயுள் தண்டனை வழங்கவேண்டும்

## செயலணியிடம் மனைவி வலியுறுத்து

"எனது கணவனைக் கொன்ற இராணுவச் சிப்பாய் அடையாளம் காணப்பட்டால், அவருக்கு ஆயுள் தண்டனை வழங்க வேண்டும்."

இவ்வாறு செயலணியிடம் தெரிவித்தார் கிளிநொச்சியைச் சேர்ந்த குடும்பத்தலைவி யோகேஸ்வரி.

போர்க்குற்ற விசாரணையை எவ்வாறு மேற்கொள்வது மற்றும் காணாமற்போனோர் அலுவலகத்தை அமைப்பது தொடர்பில் மக்கள் கருத்தறியும் செயலணியின் இரகசிய அமர்வு நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்றது. இதில் அழைக்கப்பட்ட இலக்கு குழுக்களின் பெண் தலமைத்துவ குடும்பம் சார்பாகக் கலந்து கொண்டு அவர் தமது கருத்துக்களைப் பதிவு செய்தார்.

இதன்போது குடும்பத்தலைவி யோகேஸ்வரி தெரிவித்ததாவது:

நான் எனது குடும்பத்துடன் வவுனியா- கிடாச்சூரியில் வசித்து வந்தேன். கணவர் வேலை செய்வதற்காக மறவன்குளத்துக்குச் சென்று வருகையில், 2004ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28ஆம் திகதி புதுக்குளம் பகுதியில் வைத்து இராணுவத்தினர் சுட்டனர். கண வனுடன் சென்ற மற்றைய நபர் தப்பி வந்து தகவல் வழங்கினார். நான் வைத்தியசாலைக்குச் சென்று பார்த்தபோது, கணவர் இறந்துவிட்டார். கணவனின் உடலைத் தர மறுத்தனர்.

எல்.ரீ.ரீ.ஈ. என ஒத்துக்கொண்டால் உடலைத் தரமுடியும் என இராணுவத்தினர் கூறினர். நான் அதற்கு ஒத்துக்கொள்ளவில்லை. அவருக்கும் புலிகளுக்கும் தொடர்பு இல்லை என்று சொன்னேன். பின்னர் நீதிவானின் உத்தர வுக்கு அமைய கணவனின் உடலைப் பெற்றேன். தற்போது மிகவும் வறுமையில் வாழ்ந்து வருகின்றேன். 2005ஆம் ஆண்டு கிளிநொச்சிக்கு வந்து குடியமர்ந்தேன். வீடுகளுக்குச் சென்று கூலி வேலை செய்துதான் இரண்டு பெண் பிள்ளைகளையும் கடைசிமகனையும் வளர்த்து வருகின்றேன். இதுவரைக்கும் அரசினால் எந்தவித உதவிகளும் வழங்கப்படவில்லை. சுழந்திக் கொடுப்பனவும் வழங்கப்படவில்லை. கணவனை இழந்த நான் குடும்பத்தை கொண்டு நடத்துவதில் பல இடர்பாடுகளை எதிர்கொள்கிறேன். எனது கணவனைச் சுட்டவர் அடையாளம் காணப்பட்டால், அவருக்குஆயுள் தண்டனை வழங்க வேண்டும். உயிருக்கு உயிர் எடுப்பது எனது எண்ணம் இல்லை - என்றார். (வ-4,ரி3)

# புதுக்குடியிருப்பு கந்தனுக்கு பெருந்திருவிழா

புதுக்குடியிருப்பு ஸ்ரீ கந்தசுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் 9ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

இந்தத் திருவிழாவில் சப்பறத் திருவிழா எதிர்வரும் 16ஆம் திகதியும், தேர்த்திருவிழா 17ஆம் திகதி காலை 8 மணிக்கும், தீர்த்தத்திருவிழா 18ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கும் நடைபெறும். தொடர்ந்து 11 நாள்கள் மதியம் அன்னதானம் வழங்கப்படுவதோடு, தின மும் இரவு 7 மணிக்கு சைவப் பிரசங்கமும் நடைபெறும். கடந்த போர்க் கால இடரின் பின்னர் ஆலயம் சீரமைக்கப்பட்டு கும்பாபிசேகம் நடைபெற்று, இந்த ஆண்டே முதன்முறையாக பெருந்திருவிழா நடைபெறுகிறது. (வ)

# கீரிமலை தீர்த்தக் கடலில் கடற்பாறை அகற்றப்படும்

## யாழ். மாவட்டச் செயலர் தெரிவிப்பு

"கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் அனுமதி கிடைக்கப் பெற்றதும், கீரிமலை தீர்த்தக் கடலில் காணப்படும் கடற்பாறை துப்புரவுப் பணிகள் ஆரம்பமாகும்."

இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்டச் செயலர் நா.வேதநாயகன்.

யாழ். மாவட்டச் செயலர் நேற்று மாலை அனுப்பி வைத்துள்ள ஊடகச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கீரிமலை தீர்த்தக் கடலானது இந்து மக்கள் ஆடி அமாவாசை தினத்தில் பிதிர்க்கடன் செலுத்துவதில் முக்கியம் வாய்ந்த இடமாகும். சிறப்புத் தினங்களில் தீர்த்தக் கடலில் நீராடுபவர்கள் அங்கு காணப்படும் கடற்பாறைகளினால் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்கின்றனர்.

இதன் முக்கியத்துவத்துக்காக இந்து அமைப்புக்களால் மேற்படி விடயம் எனது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. இதனைச் சீர்செய்வதற்கு மீள்குடியேற்றம், புனர்நிர்மாணம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சிடமிருந்து 5.6 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டது.

இந்த வேலைத் திட்டமானது கரையோரம் பேணல் மற்றும் கரையோரமூலவள முகாமைத்திணைக்களத்தின் அனுமதி கிடைத்தவுடன் ஆரம்பிக்கப்படும் - என்று தெரிவிக்கப்பட்டது. (வ-5)



பரந்தனில் இருந்து முல்லைத்தீவு நோக்கி ஏ35 வீதியில் பயணித்த டிப்பர் வாகனம் ஒன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து பாலத்தின் தடைக் கட்டுகளை உடைத்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்துச் சம்பவம் நேற்றுக் காலை புதுக்குடியிருப்பு -கைவேலிப்பகுதியில் இடம்பெற்றது. விபத்துக்குள்ளான டிப்பரின் சாரதி காயங்களுக்கு உள்ளான நிலையில், புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (வ- ரி7)

# கீரிமலையில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க அரசு தீர்மானிக்கவில்லை

## அமைச்சர் அமரவீர தெரிவிப்பு

கீரிமலைப் பிரதேசத்தில் புதிய மீன்பிடித்துறைமுகம் ஒன்றை நிர்மாணிக்க அரசு எந்த தீர்மானத்தையும் எடுக்கவில்லை என மீன்பிடி மற்றும் நீரியல்வள அபிவிருத்தி அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

கீரிமலைப் பிரதேசத்தில் மீன்பிடித் துறைமுகம் ஒன்றை நிர்மாணிக்க அரசு தயாராகி வருவதாக, இந்துக் கோயிலுக்கு அருகில் இப்படியான துறைமுகம் ஒன்றை நிர்மாணிக்கக் கூடாது என அந்தப் பகுதிமக்களும் இந்து அமைப்புக்களும் தெரிவித்தன.

கீரிமலையில் மீன்பிடித் துறைமுகத்தை நிர்மாணிக்க தீர்மானம் எதனையும் அரசு எடுக்கவில்லை. வேறு எந்தத் தரப்பினராவது துறைமுகத்தை நிர்மாணிக்கின்றனரா என்பது தெரியாது. எனினும், அரசு வடக்கை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ், முதலாவது மீன்பிடித் துறைமுகத்தை நிர்மாணிக்க உள்ளதுடன், நாட்டின் மிகப் பெரிய மீன்பிடித்துறைமுகமான அந்தத் துறைமுகம் பருத்தித்துறையில் நிர்மாணிக்கப்பட உள்ளது. இதனைத் தவிர, யாழ்ப்பாணம்-குருநகர்ப் பிரதேசத்தில் மற்றுமொரு மீன்பிடித் துறைமுகம் நிர்மாணிக்கப்பட உள்ளது என்றார் அமைச்சர். (வ-21)

# சட்டவிரோதமாக மது விற்றவருக்கு 6 மாதச் சிறை

யாழ்ப்பாணம் ஓக. 6

சட்டவிரோதமாக அரச சாராயத்தை விற்பனை செய்தவருக்கு நேற்று 6 மாத காலச் சிறைத் தண்டனை விதித்து யாழ். நீதிவான் மன்றம் தீர்ப்பளித்தது. யாழ். துர்நடத்தை தடுப்புப் பொலிஸார், நேற்றுமுன்தினம் குருநகர் பகுதியில் வைத்து சட்டவிரோதமாக சாராயம் விற்பனை செய்த குற்றச்சாட்டில் ஒருவரைக் கைது செய்தனர். சிவிலுடையில் சென்ற பொலிஸாருக்கு சாராயத்தை விற்பனை செய்தபோதே அவரைக் கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவரை பொலிஸார் நேற்று யாழ். நீதிவான் மன்றில் முற்படுத்தினர். அப்போது அவருக்கு எதிரான ஒன்பது குற்றச்சாட்டுக்களையும் அவர் ஏற்றுக் கொண்டார். அதனையடுத்து அவரை ஆறு மாத சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு நீதிவான் சி.சதீஸ்தரன் உத்தரவிட்டார். (வ-103)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஸ்ஸில் பயணியிடம் திருட்டில் ஈடுபட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் சிக்கினர்

## சுன்னாகம் பொலிஸார் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 6

மினிபஸ்ஸில் கைவரிசையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் புத்தளத்தைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேரைக் கைது செய்துள்ளதாகவும், அவர்களிடமிருந்து திருடப்பட்ட பொருள்கள் மீட்கப்பட்டதாகவும் சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் சுன்னாகம் பஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இது தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எச்.வீ.எல்.துஸ்மந்த தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத்தில் இருந்து அளவெட்டிக்குச் சென்று கொண்டிருந்த தனியார் பஸ்ஸில் பயணித்த பெண் ஒருவரின் கைப்பையில்வைக்கப்பட்டிருந்த நகைகள், பணம் மற்றும் அலைபேசி என்பன திருடப்பட்டன.

எதேச்சையாக குறித்த பெண் தனது கையில் கொழுவி இருந்த கைப்பையைப் பார்த்தபோது, சிப் திறந்து இருந்தமையை அறிந் தார்.

அதிர்ச்சியடைந்தபெண்கைப்பையைச் சோதனை செய்தபோது, அதற்குள்ளிருந்த நகை, பணம் அலைபேசி என்பவற்றைக் காணவில்லை. இது தொடர்பில் சாரதிக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதை அடுத்து, மினிபஸ் சுன்னாகம் பஸ் நிலையத்தில் நிறுத்தப்பட்டுபயணிகள் தடுத்து வைக்கப்பட்டனர்.

பொலிஸார் வரவழைக்கப்பட்டு பஸ்ஸிலிருந்த அனைவரையும் சோதனையிட்டதில், 17வயதுடைய பெண் ஒருவர் பொருள்களைத் திருடி தனது மர்ம உறுப்பில் ஒழித்து வைத்திருந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னர் குறித்த பெண்ணுடன் வந்த தாய் தந்தையரையும் கைது செய்து விசாரணை செய்ததில் இவர்கள் மூவரும் புத்தளம் பகுதியைச் சேர்ந்தவர்கள் என தெரியவந்தது.

நல்லூர்த்திருவிழாவைமுன்னிட்டு சாவகச்சேரி பகுதியில்வீடு ஒன்றை வாடகைக்கு எடுத்து தங்கியுள்ளனர். கைதான மூவரும்திருடுவதற்காகவே யாழ்ப்பாணம் வந்துள்ளனர் - என்றார். (வ-4,107)

# சைக்கிளைத் திருட முற்பட்டவரைப் பிடித்தனர் மக்கள்

யாழ்ப்பாணம், ஓக. 6

யாழ்.நகரில் கடை ஒன்றின் முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிளைத் திருட முற்பட்ட குற்றச்சாட்டில் தென்னிலங்கையைச் சேர்ந்த ஒருவரை நேற்றுமுன்தினம் பொதுமக்கள் பிடித்து நையப் புடைத்த பின்னர் யாழ்ப்பாணம் பொலிஸில் ஒப்படைத்தனர்.

இவ்வாறு திருட முற்பட்டவர் கொழும்பு- மோதர பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய நபர் எனப் பொலிஸார் கூறினர். குறித்த நபரைப் பொலிஸார் விசாரணை செய்ததில், தன்னுடைய சைக்கிள் என்று மாறி எடுத்ததாக அவர் கூறினார்.

அத்துடன் அவரது உடமையில் இருந்து 180 மில்லி லீற்றர் அரச மதுபானம் ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றினர். கைதான நபர் தொடர்பில் மோதர பிரதேசத்துக்குப் பொறுப்பான பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. (வ-107)

கொவிபதி ශනිදා
034
2016-08-05
அடுத்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுப் பொதி
ரூ.89, 885, 160/-
ஆங்கில எழுத்து மற்றும் வெற்றி இலக்கங்கள்
P 02 44 63 69
தொ.பே: 011 4 062 002 / 011 4 062 062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு 011 4 824 824

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 05/08/2016
2013
சிவப்பு
மிதுனம்
வெற்றி இலக்கங்கள்
32 34 37 56
ஞாயிற்றுக்கிழமை வெற்றிப்பொதி
ரூ 2, 358, 620 /-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919
2016/08/07

நியத்த ஜய
485
05/08/2016
நீலம்
02 17 20 25 P
எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஜக்பொட் பரிசுத்தொகை
ரூ 10, 913, 400/=
2016.08.09
Tel: 011 4 824 824

# வெளிநாட்டுப் பயணங்களின் போது அமைச்சர்களுக்கு அனுமதி தேவை

## மைத்திரி கண்டிப்பான கட்டளை

அமைச்சர்கள் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளும் போது தன்னிடம் அனுமதி பெற வேண்டும் என ஜனாதிபதிமைத்திரி பால சிறிசேன அறிவுறுத்தினார்.

நாட்டில் இருந்து செல்ல தன்னிடம் தனிப்பட்ட ரீதியில் முழுமையான அனுமதியைப் பெற வேண்டும் என ஜனாதிபதி கடிதம் மூலம் அனைத்து அமைச்சர்களுக்கும் இந்த அறிவித்தலைவழங்கினார்.

இதனடிப்படையில் வெளிநாடுகளுக்கு செல்லும் அமைச்சர்கள் நாட்டில் இருந்து வெளியேறுவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் எழுத்து மூலம் ஜனாதிபதிக்கு அறிவித்து, எழுத்து மூலமான அனுமதியைப்பெற்றுக்கொள்ள வேண்டும் என ஜனாதிபதி பணித்தார்.

அரச நிதி மற்றும் வெளிநாட்டு திட்டங்கள் மூலம் கிடைக்கும் நிதி ஆகியவற்றைப் பயன்படுத்தி சிலர் குழுக்களாக வெளிநாடுகளுக்குச் செல்வது கண்டறியப்பட்டுள்ளதால் ஜனாதிபதி இந்த அறிவுறுத்தலை வழங்கினார் எனத் தெரிவிக்கப்பட்டது. (வ-21)

**தொலைந்து விட்டது**

கிளிநொச்சி ரெலிகொம் அலுவலகத்தில் இருந்து கனகபுரம் வீதி-பாரதி ஹோட்டல் வரையுள்ள வீதியில் ஆவணங்களுடன் மணிப்பர்ஸ் தொலைந்துவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தால் அறியத்தரவும்.

தொலைபேசி. 0775382061

யாழ். நகரில்
கோலாகலமான திறப்பு விழா
British College of Beauty Studies Olialakan Studio
இலங்கையில் முதல் தடவையாக பெண்களுக்கான அழகுக்கலை கல்லூரியின் இரண்டாவது கிளை திறப்பு விழாவை முன்னிட்டு அனைத்து பாடநெறிகளுக்கும் சேவைகளுக்கும் ( பேசியல், த்ரெடிங் மணமகள் அலங்காரம் கிறீம் வகைகளுக்கும்) விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும் இன்றைய தினம் பேசியல்ஸ் செய்பவர்களும் கிறீம் வகைகளையும் இலவசமாக பெற்றுக் கொள்ளமுடியும் எங்கள் கல்லூரியின் திறப்புவிழாவிற்கு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
நேரம் - மு.ப. 11.45
காலம் - இன்று 06.08.2016 சனிக்கிழமை
பிரதம விருந்தினர் - கௌரவ ஈ. சரவணபவன்
(யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு)
திருநெல்வேலி சந்தி, பலாலி றோட்
076 7011645
கஸ்தூரியார் றோட்
(உதயன் பணிமனை அருகில்)
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குமாரபுரம் படுகொலை வழக்கை மேன்முறையீடு செய்து விசாரிக்குக

## கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சர் ஜனாதிபதிக்குக் கடிதம்

மூதூர், ஓக. 6

திருகோணமலை, குமாரபுரம் படுகொலை தொடர்பாக சட்டமா அதிபர் மேன்முறையீடு செய்து மீண்டும் விசாரிக்க வேண்டும் என்று வலியுறுத்திக் கிழக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சர் சி.தண்டாயுதபாணி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

1996ஆம் ஆண்டில் பெப்ரவரி 11 ஆம் திகதி திருகோணமலை, குமாரபுரத்தில் 26 பொதுமக்கள் தெஹிவத்தை முகாமைச் சேர்ந்த இராணுவத்தினரால் துப்பாக்கிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது.

கொல்லப்பட்டவர்களில் கர்ப்பிணித் தாய் ஒருவரும் 16 வயதுடைய மாணவி ஒருவரும் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் கொல்லப்பட்டார்கள் என்பதும் செய்திகள் மூலம் தெரியவந்தது. கொல்லப்பட்டவர்களில் 6 ஆண்களும், 13 பெண்களும், 7 சிறுவர்களும் அடங்கியிருந்தனர். அத்தோடு 39 பேர் காயமடைந்தும் இருந்தனர்.

இன மோதல்களும்,வன்செயல்களும் நடைபெற்ற காலகட்டத்தில் கொலை நடந்தது. இந்தக் கொலைகளை மேற்கொண்டதாக தெஹிவத்தை இராணுவ முகாமைச் சேர்ந்த 8 இராணுவத்தினர் மீது மூதூர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரிக்கப்பட்டது. பின்னர் திருக்கோணமலை மேல் நீதிமன்றத்துக்கு இந்த வழக்கு மாற்றப்பட்டது. எதிரிகளான இராணுவ வீரர்கள் தமக்குப் பாதுகாப்பில்லை என்று கோரியதன் பேரில் அநுராதபுரம் மேல் நீதிமன்றத்துக்கு இந்த வழக்கு மாற்றப்பட்டது.

> குற்றஞ்சாட்டப்பட்ட இராணுவத்தினர் எதுவித குற்றமும் அற் றவர்களாகத் தீர்ப்பளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர். ஆயினும் இருபது வரு டங்களாக நீதியை எதிர்பார்த்திருந்த குமார புரம் மக்கள் இத் தீர்ப்பினால் ஏமாற்ற மடைந்துள்ளார்கள்.

நீண்டகாலமாக இழுபட்டுக்கொண்டுவந்த இந்த வழக்கு கடந்த மாதத்தில் முடிவுக்கு வந்து தீர்ப்பும் வழங்கப்பட்டது.

1996ஆம் ஆண்டில் தொடரப்பட்ட வழக்குக்கான தீர்ப்பு 20 வருடங்கள் கழிந்த நிலையில் வழங்கப்பட்டது.

குற்றஞ்சாட்டப்பட்ட இராணுவத்தினர் எதுவித குற்றமும் அற்றவர்களாகத் தீர்ப்பளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர். இதனால் இருபது வரு டங்களாக நீதியைஎதிர்பார்த்திருந்த குமாரபுரம் மக்கள் இந்தத் தீர்ப்பினால் ஏமாற்றமடைந்துள்ளார்கள்.

இந்தக் கொலைச் சம்பவத்தை நேரில் கண்டவர்களும் அதிலிருந்து தப்பியவர்களுமான இந்தக் கிராமவாசிகள் பலர் இவ்வழக்கில் சாட்சிகளாகச் சாட்சியமளித்துள்ளார்கள். கொலையாளிகளை அடையாளம் காட்டியும் உள்ளார்கள். ஏழைகளான இந்த மக்கள் தமது கிராமத்திலிருந்துஅநுராதபுரத்துக்குப் பல சிரமங்களின் மத்தியில் பயணம் செய்துசாட்சியமளித்துள்ளார்கள்.

சட்டமா அதிபரினால் தொடரப்பட்ட இந்த வழக்கில் அளிக்கப்பட்ட இந்தத் தீர்ப்புக்கு எதிரான மேன்முறையீடுசெய்யப்படவேண்டுமென இந்த மக்கள் தங்களை வேண்டியுள்ளார்கள்.

இவர்களுடைய வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு அளிக்கப்பட்ட தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்யுமாறு சட்டமா அதிபரைப் பணிக்கவேண்டும். என்றுள்ளது. (த-4-40)

## தென்மராட்சிக் கலாசார விழா நாளை மாலை சாவகச்சேரியில்

வரணி, ஓக.6

தாயகம் மற்றும் புலம்பெயர் நாடுகளில் உள்ள தென்மராட்சி அபிவிருத்திக் கழகம் நடத்தும் தென்மராட்சிக் கலாசார விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சாவகச்சேரி நகர் பொன்விழா மண்டபத்தில் இடம்பெறும்.

தென்மராட்சி அபிவிருத்திக்கழகத் தலைவர் பேராசிரியர் க. கந்தசாமி தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக வடக்கு மாகாண கல்வி பண்பாட்டு மற்றும் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சர் த. குருகுலராஜா, வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப. சத்தியலிங்கம் ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு. கிருஷ்ணகுமார், பிரித்தானியா தென்மராட்சி அபிவிருத்திக் கழகத் தலைவர் மருத்துவர் ஆ.புவிநாதனும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் தேசிய மட்ட வீரர்கள் கௌரவிப்பு, வெற்றி பெற்ற வீரர்களுக்குப் பரிசில்கள் வழங்கல், நாட்டியாஞ்சலி, விருந்தினர்கள் உரை என்பன இடம்பெறும். (த-122)

## அதிபர்கள் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஓக. 6

யாழ். வலயக்கல்வித் திணைக்களத்துக்குட்பட்ட தரம் II, தரம் III பாடசாலைகளுக்கு அதிபர் பதவிக்கான வெற்றிடம் நிலவுகின்றது. இந்தப் பதவிகளுக்கு யாழ். வலயத்தில் கடமையாற்றும் அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன என யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் என். தேவேந்திரராஜா தெரிவித்துள்ளார்.

தரம் II பிரிவைச் சேர்ந்த சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலயம், நாவாந்துறை றோ.க.வித்தியாலயம், கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம், கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலயம். கொழும்புத்துறை சென். ஜோசப் வித்தியாலயமும், தரம் III பிரிவைச் சேர்ந்த சிறுப்பிட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, கொக்குவில் மேற்கு சீ.சீ.த.க.பாடசாலை ஆகிய பாடசாலைகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தரம் II பாடசாலைகளுக்கு வகுப்பு 2 ஐச் சேர்ந்த அதிபர்களும், வகுப்பு 2 அதிபர்கள் விண்ணப்பிக்காத சந்தர்ப்பத்தில் வகுப்பு 3 ஐச் சேர்ந்த அதிபர்களும் அத்துடன் தற்போது அதிபர் போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்று நியமனத்தை ஏற்றுக் கொண்ட அதிபர் வகுப்பு 3இனைச்சேர்ந்தவர்களும்விண்ணப்பிக்கலாம். தரம் III பாடசாலைகளுக்கு தற்போது அதிபர் சேவை வகுப்பு 3 இனைச் சேர்ந்த அதிபர்களும்தற்போது அதிபர்சேவைவகுப்பு 3 போட்டி பரீட்சையில் சித்திபெற்று நியமனத்தை ஏற்றுக்கொண்ட அதிபர்களும்விண்ணப்பிக்கமுடியும். விண்ணப்பங்களை யாழ். வலயக் கல்வி பொது நிர்வாகக் கிளையில் பெற்று முழுமைப்படுத்தி எதிர்வரும் 15ஆம் திகதிக்குமுன்னர் வலயக்கல்வி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு அவர் மேலும் தெரிவித்தார். (த-ரி)

**ஆங்கில வகுப்புக்கள்**
O/L 2016 Dec. மாணவர்களுக்கு ஆங்கில இலக்கணம் வினாவிடை வகுப்புக்கள்.
By: ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி
424/3,K.K.S.வீதி, யாழ்ப்பாணம், பிளாக்கித், சங்கானை.
077 675 1649

**கடை வாடகைக்குண்டு**
யாழ்.நகரிலுள்ள பிரபல மகளிர் கல்லூரிக்கு அருகில் கடை வாடகைக்குண்டு.
077 968 7677

**வான் வாடகை சேவை**
நிறுவனங்கள் அல்லது தனியாருக்கு சேல்ஸ் தேவைக்கு பயன்படுத்துவதற்கு கன்ரர் வாகனம்
(பின் - 02 கதவு - சைற் 01 கதவு)
சாரதியுடன் தயார் நிலையில் உள்ளது.
077 575 8515

**தேவை**
ஸ்ரூடியோ ஒன்றுக்கு வீடியோ எடிட்டிங் / அல்பம் எடிட்டிங் செய்யத் தெரிந்தவர்கள் தேவை. வேலைநேரம் -பிற்பகல் 5.00- பிற்பகல் 10.00 வரை. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கலாம். கொக்குவில் பகுதியை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது.
077 107 7091

**உடனடி வேலைவாய்ப்பு**
Photoshop, D.T.P(Pagemaker). தமிழ். ஆங்கில தட்டச்சு தெரிந்த. இணையத்தள பாவனை மற்றும் தமிழ். ஆங்கிலம் பேச. எழுதக் கூடியவர்கள் உடன் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
Email: hardworksrilanka@gmail.com
தொடர்பு : 076 563 7551

**மணமகள்கள் தேவை**
* 71 இல் பிறந்த 8இல் செவ்வாய் 40 பாவமுடைய பட்டதாரி ஆசிரியருக்கு படித்த மணமகள் தேவை.
* 62 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 36 பாவமுடைய அரச நிறுவனத்தில் எக்கவுண்டனாக பணிபுரியும் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
* 86 இல் பிறந்த 8இல் செவ்வாய் 92 ¾ பாவமுடைய குவாண்டிட்டி சேவையர் ஆக கட்டாரில் பணிபுரியும் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
* 85 இல் பிறந்த 8இல் சூரியனும் செவ்வாயும் 45½ பாவமுமுடைய இஞ்சினியர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
தொடர்பு: கமலக்கண்ணன் திருமண சேவை
இல.62, இராமலிங்கம் வீதி,
பூங்கனிச்சோலையடி, முடமாவடி.
(ஜே.3528) (13.18)
தொ.பே.077 607 0862

**தரம் - 5 முன்னோடிப்பரீட்சை**
பெற்றோர்களே!
உங்கள் பிள்ளை தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை எழுதுகின்றாரா?
சுயமான முன்னோடிப்பரீட்சை ஒன்றின் மூலம் உங்கள் பிள்ளையின் அடைவு நிலையை அறிய ஓர் அரிய சந்தர்ப்பம்.
தேசிய ரீதியாக ஒளிஅரசி சஞ்சிகை வழங்கும் இறுதிச் சந்தர்ப்பம் இது.
உங்கள் பிள்ளையும் முன்னோடிப்பரீட்சையில் பங்குபற்ற விரும்புகின்றீர்களா?
சிங்கள மொழிபெயர்ப்பு வினாத்தாள்
ஒகஸ்ட் மாத ஒளிஅரசியுடன் இலவசமாக இணைக்கப்பட்டுள்ள சிங்கள மொழிபெயர்ப்பு வினாத்தாளிற்கு (பகுதி i, ii) உங்கள் பிள்ளைகள் மூலம் சுயமாக விடையளித்து எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் கொழும்பு முகவரிக்கு கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவைத்தால் [illegible] காலத்தில் உங்கள் வீட்டுமுகவரிக்கு அவ் வினாத்தாள்கள் திருத்தப்பட்டு புள்ளியிடப்பட்டு அனுப்பி வைக்கப்படும்.
உங்கள் வீட்டுமுகவரி எழுதப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட தபால் உறை ஒன்றையும் சேர்த்து அனுப்புதல் அவசியமானது.
ஒகஸ்ட் மாத ஒளிஅரசியை சுடர் ஒளி, உதயன் முகவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.
மேலதிக தொடர்புகளுக்கு
0714273035, 0718628369, 0718 628 351

**வேலைவாய்ப்பு**
யாழ்ப்பாணத்தில் உள்ள எமது நிறுவனத்துக்கு கணினி அறிவுடன் கூடிய விற்பனைப் பிரதிநிதிகள் (Sales Rep) மற்றும் விற்பனை உதவியாளர்கள் (Merchandiser) தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.
GHA DE SILVA & COMPANY
இல.96, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
077 296 0787

கவிமணி க. த. ஞானப்பிரகாசம் அவர்களது
**நூற்றாண்டு விழாவும் "ஞானக்களஞ்சியம்" மலர் வெளியீடும்**
**காலம்**
13.08.2016 சனிக்கிழமை, காலை 10.00மணி
**இடம்**
கலைத்தூது கலையகம்
இல. 286, பிரதான வீதி, யாழ்ப்பாணம்
(யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம், தண்ணீர்த் தாங்கி அருகில்)
**தலைவர்**
திரு. அ. ம. ஜெபரட்ணம்
(முன்னாள் பிரதி அதிபர் திரு இருதயக் கல்லூரி, கரவெட்டி)
**பிரதம விருந்தினர்**
திரு. மா. கணபதிப்பிள்ளை
(முன்னாள் பிரதி அதிபர், றோயல் கல்லூரி, கொழும்பு)
**சிறப்பு விருந்தினர்கள்**
அருட்கலாநிதி அ.யெயசேகரம் அடிகளார்
(இயக்குநர் - நெய்தல் வெளியீடு)
திரு. செ. யோசப் பாலா
(செயலாளர், கத்தோலிக்க கலை இலக்கிய வட்டம், யாழ்ப்பாணம்)
திரு. ஆ. வடிவேலு
(முன்னாள் அதிபர், சக்கோட்டை றோ.க.த.க பாடசாலை)
**மதிப்பீட்டுரை**
திரு. கி. நடராசா
(முன்னாள் அதிபர், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் வித்தியாலயம்)
குருமணிகள், மாணவர்கள், அன்பர்கள், அபிமானிகள் [illegible]
[illegible]
தங்கள் வரவை எதிர்பார்க்கும்
பிள்ளைகள்

AP ads 077 2359535

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏ-32 வீதியில் வாகனங்களினால் மின், தொலைபேசி வயர்கள் சேதம்

## தவிர்க்க நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை

தென்மராட்சி, ஓக.6

நாவற்குளியிலிருந்து கேரதீவு வரையான ஏ-32 வீதியில் தற்போது வாகனப்போக்குவரத்து அதிகரித்துள்ளது. இதனால் வீதியை குறுக்கறுத்து இணைக்கப்பட்டுள்ள மின் வயர்கள் மற்றும் தொலைத்தொடர்பு வயர்கள், தொலைக்காட்சி கேபிள் இணைப்புகள் தினமும் வீதியில் செல்லும் வாகனங்களால் சேதமாக்கப்பட்டு வருகின்றன. நேற்றுமுன்தினம் வீதியில் சென்ற கனரக வாகனத்தில் தொலைத் தொடர்பு வயர் சிக்கியதில் இரண்டு கம்பங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன.

கடந்த வாரமும் வீதியின் குறுக்கே சென்ற மின்வயர் வாகனத்தில் சிக்கி சேதமாகியது. மின்சார சபையினர் அவ்விடத்துக்கு வந்து பாதிப்பு ஏற்படாத வகையில் அதனைச் சீர் செய்துள்ளனர். மின் வயர் சேதமடைந்தகுடியிருப்பாளரை அதனைச் சீர் செய்ய 8 ஆயிரத்து 500 ரூபா செலுத்துமாறு மின்சார சபையினால் கோரப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

ஏ-32 வீதி கார்பெட் வீதியாக மாற்றப்பட்டபோது முன்னர் இருந்த வீதியின் உயரத்தைவிட ஒரு மீற்றர் உயர்த்தப்பட்டது. யாழ்ப்பாணம்-கொழும்பு வாகனங்கள் தற்போது போக்குவரத்து நெருக்கடியைத் தவிர்ப்பதற்காக இரவு வேளை இந்த வீதியைப் பயன்டுத்தி வருகின்றன. தினமும் தென் பகுதியிலிருந்து நூற்றுக் கணக்கான வாகனங்கள் ஏ-32 வீதி வழியாகப் பயணத்தை மேற்கொண்டு வருகின்றன.

2004 ஆம் ஆண்டு இப் பகுதிக்கு மின்விநியோகம் வழங்கப்பட்டபோது மின் கம்பத்துக்கு மறுபக்கத்தில் உள்ள குடியிருப்புகளுக்கு பொருத்தப்பட்ட மின் வயர்கள் வீதியின் தற்போதுள்ள உயரத்துக்கு மிகப் பதிவாகக் காணப்படுகின்றன. இதனால் பொதிகளை ஏற்றி வரும் கனரக வாகனங்கள் மின் வயர்கள், தொலைத்தொடர்புவயர்கள்போன்றவற்றை உரசிச் செல்கின்றன. இதனால் சிலவேளைகளில் வயர்கள் சேதமடைகின்றன.

நாவற்குளியிலிருந்து கேரதீவு வரையான ஏழு கிலோ மீற்றர் தூரத்தில் சுமார் நூற்றுக்கு மேற்பட்ட மின்வயர்கள் வீதியின் மறுபக்கத்தில் உள்ள குடியிருப்புகள், ஆலயங்கள் போன்றவற்றுக்குப் பொருத்தப்பட்டுள்ளன. இவை தற்போது வீதியில் செல்லும் வாகனங்களுக்கு இடைஞ்சலாகக் காணப்படுகின்றன என வாகனச் சாரதிகள் தெரிவித்தனர்.

இந் நிலையில் இலங்கை மின்சார சபையினர் கவனமெடுத்து வீதியில் உயரம் குறைவாகக் காணப்படும் மின் வயர்களை உயர்த்தி உயிரிழப்புக்களைத் தவிர்க்குமாறு மக்கள் கேட்டுள்ளனர்.

(த-9)



திருகோணமலை, மூதூரில் 2006ஆம் ஆண்டு ஒகஸ்ட் 4ஆம் திகதி படுகொலை செய்யப்பட்ட 17 அக்ஷன் பெய்ம் பணியாளர்களை நினைவு கூரும் நிகழ்வு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலை, உட்துறைமுக வீதியிலுள்ள சட்ட உதவி மையத்தில் இடம்பெற்றது. பிரான்ஸ் நாட்டின் அக்ஷன் பெய்ம் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் வேனிக் அன்றே தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், உயிரிழந்தவர்களின் உறவி னர்கள், சகோதரர்கள், சிவில் சமூகத்தினர் எனப் பலர் கலந்து கொண்டனர். (த-40)

# விசேட திறனுள்ள இளைஞர்களை தெரிந்தெடுக்கும் போட்டி நாளை

யாழ்ப்பாணம், ஓக. 6

யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் இளைஞர் நாடாளுமன்ற பிரஜை அபிவிருத்திக் கருத்திட்டத்தில் அதிவிசேட திறனுடைய இளைஞர்களைத் தேர்ந்தெடுக்கும் போட்டி நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது என இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர் ஐ.தபேந்திரன் தெரிவித்தார்.

தேசிய கொள்கைத் திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற இளைஞர் நாடாளுமன்ற வேலைத்திட்டத்தின் கீழ் இந்தச் செயற்பாடு நடைபெறவுள்ளது.

நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். திருமறைக் கலாமன்ற கலைத்தூது மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்தப் போட்டியில் 13 வயது தொடக்கம் 29 வயதுக்குக்குட்பட்ட ஆண், பெண் இருபாலரும் பங்குபற்றமுடியும்.

இந்தப் போட்டியில் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெறும் வெற்றியாளருக்கு 2 மில்லியன் ரூபா பரிசும், ஏனைய 10 வெற்றியாளர்களுக்கு வெகுமதியான பரிசில்களும் வழங்கப்படும்.

இதற்கான மேலதிக விவரங்களுக்கு இல 28, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டிக்குளி எனும் முகவரியிலுள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அலுவலகத்துடன் அல்லது தங்கள் பிரதேச இளைஞர் சேவை அதிகாரியுடன் தொடர்புகொள்ளலாம் என அவர் மேலும் கூறினார்.

(த-ரி)

# சேவையைப் பெற்றுக்கொள்ள தரகர்களை நாட வேண்டாம்

## வவுனியா பிரதேச செயலகம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 6

வவுனியா பிரதேச செயலகத்துக்குச் சேவையைப் பெற்றுக் கொள்வதற்கு வரும் பொதுமக்கள் தமது தேவைக்கான கட்டணங்கள் தவிர்ந்த மேலதிக எத்தகைய கட்டணங்களையும் செலுத்தத் தேவையில்லை.

இவ்வாறு பிரதேச செயலகம் பொதுமக்களுக்கு அறிவித்துள்ளது.

அதில், பிரதேச செயலகம் பொது மக்களுக்கு சேவையாற்றும் அரச அலுவலகம். ஒரு சேவைக்காக விதிக்கப்பட்ட கட்டணங்களுக்கு மேலதிகமாக எவ்வித பணத்தொகையும் யாருக்கும் வழங்கத் தேவையில்லை. தங்களது சேவையைப் பூர்த்திசெய்ய சம்பந்தப்பட்ட அலுவலரை நேரடியாகச் சந்திக்கலாம். தரகர்களை நாடவேண்டாம். யாரேனும்ஓர்அலுவலர்ஒருசேவையை வழங்கும்பொருட்டு விதிக்கப்பட்ட கட்டணத்துக்கு மேலதிகமாக அல்லது இலஞ்சமாக பணத்தையோ பொருள்களையோ வழங்குமாறு தங்களிடம் கோரினால் உடனடியாகப் பிரதேச செயலாளர் 024 2222202, உதவி பிரதேச செயலாளர் 024 2222236, இலஞ்ச ஊழல் புலன் விசாரணை ஆணைக்குழு 1954 ஆகிய இலக்கங்களில் ஒன்றுக்கு முறைப்பாடு செய்யுங்கள்-என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(த-4)

## நாகசதுர்த்தி உற்சவம்

யாழ்ப்பாணம், ஓக.06

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை நாகசதுர்த்தி உற்சவம் மாலை 6 மணிக்கு நடைபெறும்.

விசேட பூஜை அபிஷேகங்கள் இடம்பெற்று விநாயகப் பெருமான் நாக வாகனத்தில் வீதிவலம் வருவார்.

(த-17)

# குடும்பப் பெண் எரித்துக் கொலை

## சந்தேகத்தில் கணவர் கைது

கொழும்பு, ஓக. 6

அம்பாறை, காரைதீவு ஆலையடி வீதியில் திருமணம் முடித்து 4 மாதங்களான குடும்பப் பெண் ஒருவர் எரித்துக் கொலை செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து அவரது கணவன் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸார் கூறினர்.

நேற்று அதிகாலை 3.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த மொரி செலர் மெரினா என்ற பெண்ணே கொல்லப்பட் டார்.

மது போதையில் வீட்டுக்கு வந்த கணவன் தனது மனைவியுடன் உணவருந்தி விட்டுத் தூங்கியதாகவும் பின்னர் அதிகாலை 3.30 மணியளவில் சத்தம் கேட்டதாகவும், அப்போது தாங்கள் எழும்பிப் பார்த்தபோது ஏற்கனவே குப்பைகளால் மூடப்பட்டிருந்த பற்றை எரிந்துகொண்டிருந்ததாகவும், அப்போது தனது மகளின் கைகள் வெளியே தெரிந்ததாகவும் இறந்தவரின் தந்தை கூறினார். (த-4)

# நல்லூரில் தூக்குக் காவடிக்கு நடைமுறைகளை பின்பற்றுக

யாழ்ப்பாணம், ஓக. 6

நல்லூர் கந்தசுவாமி கோயில் பெருந்திருவிழாவானது நாளை மறுதினம் திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது. இதனை முன்னிட்டு தூக்குக் காவடி நேர்த்திக்கடன் செய்யும் அடியவர்கள் பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றுமாறு மாநகரசபை ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார்.

தேர், தீர்த்த உற்சவத்தின்போது இந்தமுறை நல்லூர் கோயில் வடக்கு வீதியூடாக (சங்கிலியன் வீதியூடாக கோயில் வடக்குப் பக்கமாக) துர்க்காமணி மண்டபத்தை அடைந்து வடக்கு வீதியில் குபேர கோபுர வாசலை அடைந்து அங்கு நேர்த்திக் கடன்களை நிறைவு செய்ய முடியும். பின்னர் தூக்குக் காவடியுடன் வந்த வாகனம் நல்லூர் தெற்கு வீதியூடாக (கைலாசபிள்ளையார் கோயிலடிப் பக்கம்) வெளியேற வேண்டும். அத்துடன் சுவாமி வெளிவீதி வந்து இருப்பிடத்தை அடையும்வரை நேரத்தைக் கருத்திற்கொண்டு தூக்குக் காவடி நேர்த்திக் கடன் செய்யும் அடியார்கள் உள்வருமாறு கோவில் நிர்வாகத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர் என அவர் மேலும் கூறினார்.

(த-ரி)

ஏல விற்பனை

உயர் தொழில் நுட்பவியல் நிறுவனம்


665/2, உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம், கடற்கரைவீதி, குருநகர், யாழ்ப்பாணம்.

எமது நிறுவனத்தில் வருடாந்த கணக்கெடுப்பு சபையினால் அலுவலகப் பாவனைக்கு உதவாது என அடையாளம் காணப்பட்ட தளபாடம், இலத்திரனியல் மற்றும் கணினி போன்ற பொருள்களை ஏலவிற்பனை செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ் ஏலவிற்பனை 23.08.2016 அன்று முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணிவரை மேற்கூறப்பட்ட முகவரியில் அமைந்துள்ள எமது நிறுவனத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இப் பொருள்களை 19.08.2016 மற்றும் 22.08.2016 திகதிகளில் மு.ப.8.30 மணியிலிருந்து பி.ப. 4.30 மணி வரை பார்வையிட முடியும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

(J/3544)(U.18)

பணிப்பாளர்.

Study in Australia




Why Study in Australia?

- After G.C.E. O/L or G.C.E A/L or Degree
- Foundation / Diploma / Bachelors / Masters
  படிக்க ஓர் அரிய வாய்ப்பு!
- அரச அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகங்கள்
- July 1st இருந்து இலகு Visa நடைமுறைகள்
- குறைந்த பாடநெறிக் கட்டணங்கள்
- பகுதி நேர வேலை வாய்ப்புகள் (20Hours per week)

Admission open for 2016/2017 Intake

iCS Foreign Education Services

Admission Help line
077 3013060
107, B 1/1 Galle Road, Colombo - 06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வற் திருத்தச் சட்டவரைவை எதிர்க்கவேண்டும்

## எம்.பிக்களுக்கு மகிந்த ராஜபக்ச கோரிக்கை



கொழும்பு, ஓக. 6
வற்வரி திருத்தச் சட்டவரைவுக்கு எதிராக அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் வாக்களிக்க முன்வரவேண்டுமென முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அழைப்பு விடுத்தார்.

அவர் நேற்று முன்தினம் விடுத்துள்ள சிறப்பு அறிக்கையிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

> வற்வரி திருத்தச் சட்ட வரைவை எதிர்வரும் 11 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க அரசு தீர்மானித்துள்ளது. மக்களை ஏமாற்றி ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கும் வகையில் வற்வரி அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் மீள் திருத்தச் சட்ட வரைவு எதிர்வரும் 11 ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

கடந்த மே மாதம் 2ஆம் திகதி முதல், 11 வீதமாக இருந்த வற்வரியை 4 வீதத்தால் அதிகரித்து 15 வீதமாக அரசு, நிர்ணயித்தது.

வற் வரி அதிகரிப்பு சாதாரண மக்கள் பயன்படுத்தும் பண்டங்கள், சேவைகள் மீது தாக்கம் செலுத்தாது என்று அரசு வரி அதிகரிப்புக்கு முன் உத்தரவாதம் அளித்திருந்தது. ஆனால், வற்வரி அதிகரிப்பு, அத்தியாவசியப் பொருள்கள் முதல் ஆடம்பரப் பொருள்கள் வரையும், அடிப்படைச் சுகாதாரம் முதல் உயர் சுகாதாரம் வரையும் தாக்கம் செலுத்தியது.

வற்வரி அதிகரிப்புக்கு எதிராகப் பெரியளவில் குரல்கள் நாட்டின் பல பாகங்களிலும் எழுப்பப்பட்டதன் விளைவாக அரசு இந்த விடயம் தொடர்பில் சில முடிவுகளை மறுபரிசீலனை செய்யும் சூழலுக்குத் தள்ளப்பட்டது.

கடந்த இரு வாரங்களுக்கு முதல் அடிப்படை, சுகாதாரத்தில் தாக்கம் செலுத்திய வற் வரி நீக்கப்பட்டது. எதிர்வரும் வாரங்களில் முற்று முழுதாகச் சுகாதார சேவை மீது விதிக்கப்பட்டுள்ள வற்வரி நீக்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.

வற்வரி திருத்தச் சட்டவரைவை எதிர்வரும் 11 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க அரசு தீர்மானித்துள்ளது.

மக்களை ஏமாற்றி ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கும் வகையில் வற்வரி அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் மீள் திருத்தச் சட்ட வரைவு எதிர்வரும் 11 ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. அதற்கு எதிராக அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் வாக்களிக்க முன்வரவேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி தமது அறிக்கையில் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

(த-5)

### அனுமதியின்றி பலகைகள் எடுத்துச் சென்றவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஓக. 6
வட்டுக்கோட்டையிலிருந்து பண்டத்தரிப்புக்கு அனுமதிப்பத்திரம் இன்றி மகோக்கனி பலகையினை எடுத்து வந்தவருக்கு 20 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கடந்த வாரம் வீதி ரோந்துக்கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் சந்தேகத்துக்கு இடமான முறையில் வந்த வாகனத்தை மறித்து சோதனையிட்ட போது இது கண்டுபிடிக்கப்பட்டது. சந்தேக நபரான சாரதி கைதாகிப் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

(த-107)


## 22 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர் தம்பிஐயா
ரவிச்சந்திரன் (ராசன்)

அன்னை மடியில் 05.01.1968
ஐங்கரன் பாதத்தில் 10.08.1994

திதி: 06.08.2016

இருபத்திரண்டு ஆண்டென்ன
எத்தனை ஆண்டானாலும்
ஆறாது நம் கவலை
நீண்டதூரம் தனிவழியே சென்றதனால்
உன் வரவை எதிர்பார்க்கும்
உன் அன்புள்ளங்கள்

குடும்பத்தினர்.
நவேந்திரகிரி, இணுவில் மேற்கு.
(கே/3508) (11.18)

## கண்ணீர் அஞ்சலி



அமரர்
இலங்கைநாதன் பாலசுந்தரம்
(T.E.பாலசுந்தரம்) - கோண்டாவில்

கொக்குவில் இந்துக்கல்லூரியின் மூத்த பழைய மாணவனும், கல்லூரி மாணவர்கள் நலன்கருதி புலமைப் பரிசில் வழங்குவதற்காக கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்க நம்பிக்கை நிதியத்துக்கு (யாழ்ப்பாணம்) நிதி உதவியவருமாகிய சமூக சேவையாளர்

அமரர் லயன் T.E.பாலசுந்தரம் அவர்களின் மறைவுச் செய்தி கல்லூரிச் சமூகத்துக்குப் பேரதிர்ச்சியைக் கொடுத்தது மட்டுமல்லாமல் பேரிழப்பையும் கொடுத்துள்ளது. அவரின் மறைவினால் துயருற்றிருக்கும் மனைவி, பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினருக்கு கல்லூரியின் நம்பிக்கை நிதியம் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மாசாந்தியடைய கல்லூரி குலதெய்வமான கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமியை வேண்டி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

(த/84937)(11.18)

கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்க நம்பிக்கை நிதியம் -யாழ்ப்பாணம்

## 45 ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும்



பிறப்பு 1968 . 11 . 03
இறப்பு 2016 . 06 . 25

அமரர் விக்டர் அலோசியஸ் மரியதாஸ்
(பொலிஸ் சார்ஜன்ட்)

" உயிர்ப்பும் உயிரும் நானே
என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்"
(யோ. 11:25)

அன்னாரின் 45 ஆம் நாள் நினைவு நிகழ்வுகள் மருதனார்மடம் வட இலங்கைச் சங்கீதசபை மண்டபத்தில் நாளை(07.08.2016) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். தொடர்ந்து இடம் பெறும் மதியபோசனத்தில் கலந்து கொள்ள உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் அமலமரித்தியாகிகள் சபைக்குருக்கள், மறைமாவட்டக் குருக்கள் அருட்சகோதரிகள், அருட்சகோதரர்கள் கௌரவ உயர்திரு த.சித்தார்த்தன்(பா.உ) அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள், யாழ் மாவட்ட பொலிஸ்மா அதிபர், பொலிஸ் உயர் அதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், அமைச்சர்கள், அரசியல் கட்சி உறுப்பினர்கள், பிரதேசசபை உறுப்பினர்கள், கிராமசேவையாளர்கள், மாகாண வலயக் கோட்ட கல்விப் பணிப்பாளர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பிரத்தியேக கல்வி நிறுவன ஆசிரியர்கள், மாகாணக் காணி அமைச்சு பணிப்பாளர், ஊழியர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், ஊழியர்கள் மற்றும் கொழும்பு, திருகோணமலை, மட்டுநகர், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கண்டி ஆகிய இடங்களிலிருந்தும் வந்து எம் துயரில் பங்கு கொண்டோர், வெளிநாடுகள், வெளியூர்களிலிருந்தும் தம் அனுதாபங்களைத் தெரிவித்தோர், மலர்வளையங்கள் சாத்தி கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்டோர் உடனிருந்து உதவிய எம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எம் உணர்வு பூர்வமான நன்றிகளைத் தெரிவித்து நிற்கின்றோம்.

டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.
077 498 5169

மனைவி,
பிள்ளைகள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 24 . 08 . 1943
மறைவு 19 . 07 . 2015

அமரர் நாகன் தம்பிஐயா

திதி: 06.08.2016

ஆண்டொன்று மறைந்துவிட்டது அப்பா!
அகலுமா உங்கள் பிரிவின் சோகம் மறையுமா உங்கள் நினைவின் பாசம்
எங்களை நிர்க்கதியாய் அநாதையாய்ப் பரிதவிக்க
விட்டு விட்டு எங்கு சென்றீர்கள் காலங்கள் ஆயிரம் போனாலும்
மறக்க முடியுமா உங்கள் நினைவுகளை எங்கள் உயிர் உள்ளவரை
உங்கள் நினைவுகள் தொடரும்

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

குடும்பத்தினர்.
[illegible], 2ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
021 222 9001
(கே/3000) (11.18)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் பிள்ளைகளின் நெஞ்சில் ஏறி நிற்பவர்களுடன் என்ன நல்லிணக்கம்?

## மக்கள் கருத்தறியும் செயலணி முன் தந்தை கேள்வி

வடமராட்சி, ஓக 6
மாவீரர் துயிலுமில்லங்களுக்கு மேல் முகாம்கள் கட்டப்பட்டுள்ளன. எமது பிள்ளைகளின் நெஞ்சுக்கு மேல் ஏறி நின்று நல்லிணக்கம் பற்றி கதைத்தால் அது எப்படிச் சாத்தியமாகும். உண்மைகள் கண்டறியப்பட்டு- நீதி நிலை நாட்டப்பட்டுக் குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப்பட்டாலே இன நல்லிணக்கம் சாத்தியமாகும் எனப் போர்க்குற்றங்களை விசாரணை செய்யும் செயலணி முன் தெரிவித்தார் வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த பொன்னம்பலம்

அவர் மேலும் தெரிவித்ததாவது: நல்லாட்சி அரசை உருவாக்கும் போது நம்பிக்கை சற்று இருந்தது. அரசியல் கைதிகளை விடுவிப்பார்கள். போர்க்குற்றங்கள் குறித்து விசாரிக்கப்படும் என்ற நம்பிக்கை இருந்தது. சற்று ஆறுதல் கிடைத்தும் எமது எதிர்பார்ப்பு எதுவும் ஈடேறவில்லை. மக்கள் இழப்புக்களின் ஆதங்கங்களில் இருந்து விடுபடவில்லை. பிள்ளைகளின் இழப்பை வெறும் உதவிகள் கொடுத்து மீட்சி பெறச் செய்ய முடியாது. தற்போது உருவாக்கப்படும் காணாமற்போனோர் அலுவலகமும் அதனைக் கண்டறியுமா என்ற ஆதங்கம் ஏற்படுகின்றது. அவர்களும் அறிக்கையாளராக இருக்காமல் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இடங்களைத் தேடியறியக்கூடிய பலம் இருக்கவேண்டும். காலத்தை இழுத்தடிக்காமல் விரைவாக இதனை முன்னெடுக்கவேண்டும்

> போர் நடந்த போது சுதந்திரபுரம் பகுதியை போர் தவிர்ப்பு வலயமாக அறிவித்தார்கள். அங்கு சென்றோம். ஆனால் அங்கு நடத்தப்பட்ட எறிகணை வீச்சில் அதிகளவான மக்கள் கொல்லப்பட்டார்கள்.

இதுவரை ஆணைக்குழுக்களால் மிஞ்சியது ஏமாற்றம் மட்டுமே. உண்மை கண்டறியப்படவேண்டும். மூலகாரணம் கண்டறியப்படவேண்டும். சுயலாப அரசியலுக்காக இனவாதத்தைத் தூண்டும் சிங்கள அரசியல்வாதிகளும் தண்டிக்கப்படவேண்டும். இதன் மூலமே நல்லிணக்கம் சாத்தியமாகும்.

போர் நடந்தபோது சுதந்திரபுரம் பகுதியை போர் தவிர்ப்பு வலயமாக அறிவித்தார்கள். அங்கு சென்றோம். ஆனால் அங்கு நடத்தப்பட்ட எறிகணை வீச்சில் அதிகளவான மக்கள் கொல்லப்பட்டார்கள். இப்படி மக்கள் வலயம் மீதும், மோதல் தவிர்ப்பு வலயம் மீதும், மருத்துவமனைகள் மீதும் குண்டு வீசியவர்கள் தண்டிக்கப்படவேண்டும். மனித குலத்துக்கு எதிரான குற்றத்தை செய்தவர்கள் சர்வதேச நீதிபதிகள் முன்னிலையில் விசாரிக்கப்படவேண்டும். மாவீரர் துயிலுமில்லங்கள் அழிக்கப்பட்டுக் கட்டடங்கள் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. எமது பிள்ளைகளுக்கு மேல் ஏறி நின்று நல்லிணக்கத்துக்கு அழைப்பு விடுப்பது எப்படிச் சாத்தியமாகும். நினைவுச் சின்னங்கள் மீள அமைக்கப்பட்டு மக்கள் தமது மனதை ஆறக்கூடிய சந்தர்ப்பமும், நினைவு கூரும் சந்தர்ப்பமும் அமைக்கப்படவேண்டும். போர் வெற்றிக் கொண்டாட்டங்கள் நிறுத்தப்பட்டுத் தமிழர்கள் வெற்றி கொள்ளப்பட்டதாக காட்டப்படுவது தடுக்கப்படவேண்டும். இராணுவத்தின் இருப்பு குறைக்கப்படவேண்டும்-என்றார். (த-109)




மருத்துவபீட பல்கலைக்கழக மாணவர்களால் தனியார் பல்கலைக்கழகம், தனியார் பாடசாலை என்பனவற்றுக்கு எதிராக நேற்றுமுன்தினம் கையெழுத்து வேட்டை வவுனியா மத்திய பஸ் தரிப்பிடத்துக்கு முன்பாக நடந்தது. பல்கலைக்கழக மருத்துவபீட மாணவ செயற்பாட்டுக்குழு அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இதை ஏற்பாடு செய்திருந்தது. ஒரு இலட்சம் பேரிடத்தில் கையெழுத்துப் பெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது என்று பல்கலைக்கழக மாணவர்கள் தெரிவித்தனர். (ற-ரி)

# டைனமற் பாவித்து மீன்பிடி; படகு பிணையில் விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 6
தடை செய்யப்பட்ட டைனமற் பாவித்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கடற்றொழில் நீரியல்வளத்துறை அதிகாரிகளினால் பறிமுதல் செய்யப்பட்ட மீன்பிடிப் படகு ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பிணையில் விடுவிக்கப்பட்டது.

அது பற்றிய வழக்கை செப்ரெம்பர் 9ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது யாழ்.நீதிமன்று.

கடந்த ஜூலை மாதம் 12 ஆம் திகதி அரியாலை உதயபுரத்தில் தடை செய்யப்பட்ட டைனமற் பாவித்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் மீனவர் ஒருவரைக் கடற்றொழில் நீரியல்வளத்துறை அதிகாரிகள் கைது செய்திருந்தனர். அத்துடன் 25கிலோ மீன்களும் கைப்பற்றப்பட்டன. இந்தச் சம்பவம் தொடர்பில் நீரியல் வளத்துறை அதிகாரிகளினால் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தபோது படகு ஒரு லட்சம் ரூபா பிணையில் விடுவிக்கப்பட்டது. (த-107)

# பி.ஜி. 406 விதை நெல் நியாய விலையில்

## விவசாயிகள் பெறுவதற்கு வசதி

அச்சுவேலி, ஓக.6
யாழ். மாவட்டத்தில் காலபோக நெற்பயிர்ச் செய்கைக்கு பயன்படுத்தும் பி.ஜி. 406 ரக சுத்திகரிக்கப்பட்ட விதை நெல் யாழ். மாவட்ட விதை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தில் (சீக்கோ) நியாய விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

இதனை விவசாயிகள் பெற்றுக் கொள்ள முடியும் எனச் சங்கத்தின் முகாமையாளர் தி. ரவி மயூரன் அறிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் நெற்பயிர்ச் செய்கைக்குப் பயன்படுத்துவதற்கு அங்கீகரிக்கப்பட்ட பி.ஜி406 விதை நெல் சுத்திகரிக்கப்பட்டு நெல் ஆராய்ச்சி நிலையத்தில் முளைதிறன் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் திருநெல்வேலியில் அமைந்துள்ள விற்பனை நிலையத்தில் விவசாயிகளுக்கு நியாய விலைக்கு வழங்கப் படுகின்றது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (த-11)

# பயன்தரும் பயிர்களை நடும் திட்டம் குறித்து விளக்கமளிப்பு

சாவகச்சேரி ஓக. 6
10 ஆயிரம் கிராமங்களில் "பச்சைப் பசேலென்ற அழகிய கிராமங்களை அபிவிருத்தி செய்தல்" என்னும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கிராமங்களில் தென்னங் கன்றுகள் உட்பட பயன்தரு பயிர்களை நடும் திட்டம் தொடர்பாக சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட சன சமூக நிலையங்களின் பிரதிநிதிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கும் கருத்தரங்கு நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நகர் பொன் விழா மண்டபத்தில் நடத்தப்பட்டது.

அமைச்சரவைத் தீர்மானத்தின்படி யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் நா.வேதநாயகனால் அறிவிக்கப்பட்ட இந்தத் திட்டம் தொடர்பான நிகழ்வு நகர சபைச் செயலாளர் கா.சண்முகதாசன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் யாழ். மாவட்ட தென்னை அபிவிருத்தி அலுவலர் ஜே.சத்தியேந்திரா, நகர சபைக் கணக்காளர் சு.பரதன் ஆகியோர் பசுமைப் புரட்சி தொடர்பான கருத்துரைகளை வழங்கினர்.

இந்தக் கலந்துரையாடலில், வீடுகளில் கூட்டுப் பசளை உருவாக்கும் முறையை ஊக்கப்படுத்தல், அப் பகுதிகளில் வீட்டுத் தோட்ட முறையை ஊக்குவித்தல், சேதன விவசாயத்தை மக்கள் மத்தியில் அறிமுகப்படுத்தி ஊக்குவித்தல், தென்னை அபிவிருத்திச் சபையால் முன்னெடுக்கப்படும் தென்னை உற்பத்தி தொடர்பான திட்டங்களை உள்வாங்கி நடைமுறைப்படுத்தல், கூட்டெரு தயாரிக்கும் பொறிமுறையை நகரசபையுடன் இணைந்து நடைமுறைப்படுத்தல், மக்கள் பங்களிப்புடனான மரம்நடுகை போன்ற கருத்திட்டங்களை சபைக்கு தெரியப்படுத்தல் ஆகிய விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டன.

நகர சபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகளும், நகரசபையின் நிர்வாக அலுவலர், உள்ளூராட்சி உதவியாளர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர். (த-9)

# அரச பயிற்சி மையத்தில் ஐந்து கணினிகள் திருட்டு

யாழ்ப்பாணம், ஓக. 6
வடலியடைப்பு கிராம அபிவிருத்திச் சங்கத்தில் இயங்கும் அரச கணினிப் பயிற்சி மையத்தில் 5 கணினிகள், ஒரு தொலைக்காட்சி என்பன திருடப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கணினிப் பயிற்சிமையம் அரச தகவல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சினால் திறந்து வைக்கப்பட்டது.

அங்கு கூரை பிரித்து உள்ளே இறங்கிய திருடர்கள் 5 கணினிகளைத் திருடியுள்ளனர். சம்பவம் தொடர்பில் நிர்வாகத்தினரால் இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக் கப்பட்டது. (த-107)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்முகத் தேர்வில் தெரிவானோருக்கு வழங்கப்படவில்லை இதுவரை வேலை

## ஆயினும் குறித்த பதவிகளுக்கு மீள விண்ணப்பம்

கிளிநொச்சி, ஓக. 6

பூநகரி பிரதேச சபையால் 2014 ஆம் ஆண்டு நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டு தெரிவு செய்யப்பட்ட அட்டவணைப் படுத்தப் படாத விண்ணப்பதாரி களுக்கு வேலைகளை வழங் காது மீண்டும் குறித்த பதவி களுக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக பாதிக் கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

2014 ஆம் ஆண்டு மே மாதம் 5ஆம், 6ஆம், 8ஆம் திகதி களில் அட்டவணைப்படுத்தப் படாத பதவிகளுக்காக நேர் முகத் தேர்வு இடம்பெற்றது. அதில் சாரதி. அலுவலக உதவி யாளர், வெளிக்களத் தொழி லாளி, ஆயுள்வேத மருந்தா ளர், சந்தைமேற்பார்வையாளர், சுகாதார தொழிலாளி, நூலகப் பரிசாரகர், மின்னிணைப்பாளர் என 8 பதவி நிலைகளுக்கு 23 பேர் தெரிவு செய்யப்பட்டனர். இதுவரை அவர்களுக்கு நிய மனக் கடிதங்கள் வழங்கப்பட வில்லை.

2015 ஆம் ஆண்டு ஜுன் 26 ஆம் திகதி மேற்படி அட்ட வணைப்படுத்தப்படாத பதவி களுக்காகத் தெரிவு செய்யப் பட்டவர்கள் விவரம் காட்சிப் படுத்தப்பட்டது.

ஆயினும், கடந்த வாரம் சில ஊடகங்களில் குறித்த பதவி களுக்கு விண்ணப்பம் கோரப் பட்டுள்ளது. அதனால் ஏற் கனவே தெரிவு செய்யப்பட்ட வர்களின் நிலை என்ன எனப் பாதிக்கப்பட்டவர்கள் கேள்வி எழுப்பினர்.

இங்கு வேலை கிடைக்கும் என நினைத்துத்தாம் இதுவரைவேறு வேலைகளை நாடவில்லை எனவும், இந்த வேலைக்கான வயதெல்லை 45 ஆக இருப் பதால் தற்போது அந்த வயதை அடைந்திருக்கும் சிலரால் மீண் டும் நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ள முடியாத நிலமை காணப்படுகின்றது என்றும் கூறியுள்ள அவர்கள், இதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கோரியுள்ளனர்.

இதுகுறித்துப்பூநகரிபிரதேசசபைச் செயலாளர் தெரிவித்ததாவது:

நேர்முகத் தேர்வு இடம்பெற்று 7 நாள்களுக்குள் தெரிவு செய் யப்பட்டவர்கள் விவரம் காட் சிப்படுத்தவேண்டும். தாமத மாக அதாவது ஒரு வருடத்தின் பின்னர் காட்சிப்படுத்தியமை யால் அவை நீக்கப் பட்டவையாக இருக்கலாம். நான் 2016ஆம் ஆண்டு 5 ஆம் மாதம் பெறுப்பேற்ற பின் னர் உள்ளூராட்சித் திணைக் களத்தால்குறித்தபதவிகளுக்கு விண்ணப்பித்து நேர்முகத் தேர்வு நடத்தி நியமனம் வழங் குமாறு கேட்டுக்கொண்டதற்கு இணங்க கடந்த வாரம் விண் ணப்பம் கோரப்பட்டது. விண் ணப்பங்கள் வரத் தொடங்கி யுள்ளன. ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டவர்கள் உரிய இடங்களுக்குச் சென்று இது தொடர்பாகக் கலந்துரையாடித் தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள முடியும்-என்றார். (த-4-ரி3)

# வவுனியா விக்ஸ் தோட்டத்தினுள் அத்துமீறினால் சட்ட நடவடிக்கை

## வவுனியா வன அதிகாரி தெரிவிப்பு

வவுனியா, ஓக. 6

வவுனியா இராசேந்திரகுளம் விக்ஸ் மரத்தோட்டத்துக்குள் அத்துமீறி உட்பிரவேசிப்பது அல்லது குடியிருப்பது தொடர் கிறது. அது சட்டத்துக்கு முரணா னது என்று அங்கு காடு வெட் டிய மக்களுக்கு அறிவித்து விட்டேன். இனியும் அவர்கள் காடு வெட்டினால் நீதிமன்றில் வழக்குத் தொடரப்படும்.

இவ்வாறு வவுனியா மாவட்ட உதவி வன அதிகாரி இரா. ரவி ராஜ் தெரிவித்தார்.

குறித்த பகுதியில் நல்லாட்சி அரசின் கட்சியைச் சேர்ந்த ஒரு வர் காணி பிடிக்கலாம் என்று பலருக்குச் சந்தர்ப்பம் ஏற்படுத் திக் கொடுத்து வருகிறார். சில நாள்களுக்கு முன்னரும் அவர் குறித்த பகுதிக்குச் சட்டவிரோத மாகப் பொதுமக்களை அழைத் துச் சென்று காணி அபகரிக்க இடமளிக்கிறார் என்று தெரி விக்கப்பட்டது.

இது தொடர்பில் இரா. ரவிராஜ் தெரிவித்ததாவது:

வவுனியா இராசேந்திரகுளம் ஒதுக்கப்பட்ட விக்ஸ்தோட்டம் காட்டுப் பகுதியானது வனத்தி ணைக்களத்துக்கு உரித்தா னது. அங்கு அத்துமீறி உட் பிரவேசித்துக் குடியிருப்புக் களை அமைக்குமாறு இனந் தெரியாதநபர்கள் ஊக்கம் அளிப்பதாக முறைப்பாடு கிடைத்தது. நேரடியாகச் சென்றபோது அங்கு அத்து மீறிக் குடியேறுவதற்காக 30 இற்கும் மேற்பட்டோர் காடுகளை வெட்டிக் கொண்டிருந்தனர்.

குறித்த பகுதியில் அவ்வாறு காடு வெட்டுவது சட்டவிரோத மானது என்று அவர்களுக்குத் தெளிவுபடுத்தி அனுப்பியுள் ளேன். இனிமேலும் அவ்வாறு யாராவது காடு வெட்டுவார் களேயானால் மன்னிப்பு இருக்காது. கைது செய்யப்படு வார்கள். சட்ட நடவடிக்கை எடுக் கப்படும் என்று கூறினேன். அதனை ஏற்றுக்கொண்டு அவர்கள் அங்கிருந்து சென்ற னர்-என்றார்.

அங்கு 3 வருடகாலமாகப் பொதுமக்கள் அத்துமீறிக் காணி பிடித்துக் குடியிருந்து வருகின்றனர். கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் அப் பகுதியில் பொதுமக்கள் குடி யிருந்தபோது வனவள அதி காரிகாளால் பொலிஸ் நிலை யத்தில் முறையிடப்பட்டுக் காடு வெட்டிய குற்றச்சாட்டில் இளை ஞர்கள் சிலரைப் பொலிசார் கைது செய்திருந்தனர். அவர் களைப் பொலிஸ் நிலையத்தில் வைத்திருந்த பின்னர் அரசியல் கட்சிகள் தலையிட்டுக் கைதா னவர்கள் விடுதலை செய்யப் பட்டனர்.

தமிழ் மக்கள் காணிபிடித்துக் குடியிருப்பதாக தெரிவித்து சூடுவெந்தபுலவிலுள்ள முஸ் லிம்களும் அப்பகுதியில் உள்ள காணியை அத்துமீறிப் பிடித்தபோது இரு பகுதியின ருக்கும் இடையே சலசலப்பு ஏற்பட்டு அப்பகுதியில் குடியி ருந்த தமிழ் மகன் ஒருவருடைய வீடு இனந்தெரியாதவர்களி னால் எரிக்கப்பட்டது.

அதன் பின்னர் கடந்த இரண்டு வருடமாகக் காணி அபகரிக்கும் திட்டம் ஓய்ந்திருந்தது. இந்நிலை யில் கடந்த செவ்வாய்க்கிழமை நல்லாட்சி அரசின் உறுப்பினர் ஒருவர் சட்டவிரோதமாகக் காணி பிடிக்க பொதுமக்களைத் தூண்டிவருகிறார் என்று தெரி விக்கப்பட்டது. (த-4)

# லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநர் கௌரவிப்பு இன்று

யாழ்ப்பாணம், ஓக. 6

சர்வதேச லயன்ஸ் கழகத்தின் நூற்றாண்டு கொண்டாடப்பட்டு வரும் வேளையில் சர்வ தேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்டத்தின் ஆளுநராக தெரிவு செய்யப்பட்ட லயன் வைத்திய கலாநிதி வை.தியாகராஜாவை வட மாகாணத்தில் உள்ள லயன்ஸ் கழகங்கள் கௌரவிக்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு யாழ்ப்பாணம் சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் வடமாகாணத்தில் உள்ள லய்ன்ஸ் கழகங்களால் மேற்கொள்ளப் படவுள்ள நலனோம்புத் திட்டங்கள் ஆரம் பித்து வைக்கப்படவுள்ளன.

10 ஆயிரம் மரக் கன்றுகள் விநியோகம், வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங் களைச் சேர்ந்த மாணவர்களுக்கு சைக் கிள்கள் வழங்கல், கற்றல் உபகரணங்கள் வழங்கல், பார்வையில் குறைபாடு காணப் படும் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும் பங்களைச் சேர்ந்தவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கல் உள்ளிட்ட பல் வேறு நலத்திட்டங்கள் இந்தப் பிராந்தியத் தில் உள்ள லயன்ஸ் கழகங்களால் இந்த நிகழ்வில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அத்துடன் யாழ். மாவட்ட வைத்தியசாலை ஒன்றில் இயங்கும் கண் பரிசோதனை பிரி வுக்கு கண் பரிசோதனை இயந்திரம் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாள ரிடம் கையளிக்கப்படவுள்ளது. (த-9)

# பருத்தித்துறை- கிளிநொச்சி பஸ் சேவையை நடத்துங்கள்

## சாலை முகாமையாளரிடம் கிளி. மாவட்டச் செயலர் கோரிக்கை



பருத்தித்துறை பஸ் நிலையத்திலிருந்து கிளிநொச்சிக்கு ஒரு பஸ் சேவையை ஆரம்பிக்குமாறு கிளிநொச்சி மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம் சாலை முகாமையாளரிடம் கோரிக்கை விடுத்தார்.

தினமும் காலை 8.15 மணிக்குக் கிளிநொச்சியை வந் தடையக் கூடியவாறும், மாலை 4.15 மணிக்குக் கிளிநொச்சியில் இருந்து புறப்படக் கூடியவாறும் பஸ் சேவையை ஆரம்பிக்குமாறு அவர் கோரினார்.

மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள் உட்பட பலர் பருத்தித்துறையிலிருந்து தனியான பேருந்துச் சேவை இன்மையால் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே பருத்தித்துறையில் இருந்து கிளிநொச்சி அறி வியல் நகர் வரை அரச பேருந்தை இயக்குமாறு அவர் கோரினார். (த-107)

# பிரமண்டு வித்தியாலயத்தில் பொலிஸ் நடமாடும் சேவை

வவுனியா, ஓக. 6

வவுனியா தாண்டிக்குளம் பிர மண்டு வித்தியாலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிமுதல் மாலை 3 மணிவரை பொலிஸ் நடமா டும் சேவை இடம்பெற உள்ள தாகப் பொதுமக்கள் பொலிஸ் நல்லுறவுப் பிரிவினர் தெரிவித் துள்ளனர்.

இந்த நடமாடும் சேவையில் பல சேவைகள் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் தமது சேவையில் பயன்பெறுமாறும் அவர்கள் கேட்டுள்ளனர். இலவச கண் பரிசோதனை, ஆயுள்வேத மருத்துவ சேவை, பல் வைத்தி யம், மிருக வைத்தியம், மரக் கன்றுகள் வழங்கல் என்பன இடம்பெறவுள்ளதுடன் பிரதேச செயலகத்தினால் பிறப்பு, இறப்பு, திருமணச் சான் றிதழ் பதிவும் இடம்பெறும்.

அத்துடன் தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு, குடும்ப அட்டை, வாகன இலக்கத்தகடு, வாகனப்புத்தகம்பெறல்போன்ற சேவைகளும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த-4)

# காளான் வளர்ப்புக்கூடம் அமைக்க 29 பேருக்கு உதவி

## உற்பத்தியை மேலும் ஊக்குவிப்பதற்காக

அச்சுவேலி, ஓக.6

யாழ். மாவட்டத்தில் காளான் உற்பத்தி செய்யப்படுகின்றபோதும் அவை போதுமானதாகவில்லை. எனவே அதனை ஊக்குவிக்க செயன் முறைப் பயிற்சி பெற்ற 29 பேருக்கு காளான் வளர்ப்புக் கூடம் அமைப்பதற்கு ஊக்கு விப்புத் தொகையாக தலா 40 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

குறித்த பயனாளிகளும் 40 ஆயிரம் ரூபாவை முதலீடு செய்து 80 ஆயிரம் ரூபா செலவில் காளான் வளர்ப்புக் கூடத்தை நிர்மாணிக்கவேண்டும். காளான் வளர்ப்புக் கூடத்தின் மாதிரி வரை படம் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகள் யாழ். மாவட்ட விவ சாய திணைக்களத்தால் வழங்கப்படு வதுடன், 3 ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணத் தொகுதியும் பயனாளி களுக்கு வழங்கப்படவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் காளான் பயிர்ச் செய் கையை மேம்படுத்தும் நோக்கில் வடக்கு மாகாண விவசாய அமைச்சின் நிதி மூலம் காளான் செய்கைக்கான இந்த ஊக்குவிப்பு வழங்கப்படுகின்றது.

யாழ். மாவட்டத்தில் காளான் பாவனை அதிகரித்து வருகின்றது. இரசாயனத் தாக்கங்கள் இல்லாத இயற்கையான தாவர உணவான காளான் நோய்த் தடைத் தன்மை கொண்ட உணவாக இருப்பதால் பொதுமக்களால் விரும்பி உண்ணப்படுகின்றது.

அத்துடன் ஹோட்டல்கள், உணவு விடுதி களிலும் பெருமளவில் பயன்படுத்தப்படு கின்றது. யாழ். மாவட்டத்தில் உற்பத்தி செய்யும் காளானின் அளவு பற்றாக் குறையாக இருப்பதால், வெளிமாவட் டங்களில் இருந்து காளான் யாழ். மாவட் டத்துக்கு நாளாந்தம் எடுத்து வரப் படுகின்றது.

காளான் செய்கையை மாணவர்களும் பகுதி நேரத் தொழில் முயற்சியாக மேற் கொண்டு வருவதோடு, குடும்ப உறுப்பி னர்கள் தமது வதிவிடத்தின் ஒரு பகுதி யிலேயே காளான் செய்கையை மேற் கொள்ளக் கூடியதாக உள்ளது.

யாழ். மாவட்ட விவசாயத் திணைக்கள விவசாயப் பயிர்ச் செய்கைப் பிரிவில் காளான் பயிர்ச்செய்கை தொடர்பான பயிற்சி மாதாந்தம் குறித்த தினத்தில் வழங்கப்படுகின்றது. பயிற்சி பெற விரும்புபவர்கள் திருநெல்வேலியில் உள்ள விவசாயத் திணைக் களத்தில் பதிவு செய்து பயிற்சியைப் பெற்றுக் கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள் ளது. (த-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவத் தமிழ்க் கலாசாரத்தை நல்லூரில் பேணுவது அவசியம்

## இந்து சமயப் பேரவை கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 6
நல்லூர்க் கந்தசுவாமி கோயில் பெருந்திருவிழா நாளை மறுதினம் 8ஆம் திகதி ஆரம்பமாகின்றது. தொடர்ந்து 25 நாள்கள் நடைபெறவுள்ள இந்தத் திருவிழா பக்திபூர்வமாக நடைபெற சகல தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும் என இந்து சமயப் பேரவை கோரியுள்ளது.

இந்தத் திருவிழாவில் பல இடங்களில் இருந்தும் மக்கள் வருவது வழமை. அவர்கள் சைவத் தமிழ் கலாசாரத்தைப் பேணும் வகையில் தமது நடையுடை பாவனைகளைப் பேணிக்கொள்வது மிக முக்கியமானது எனவும் அது கூறியுள்ளது.

இது தொடர்பில் இந்து சமயப் பேரவை தெரிவித்ததாவது:

பெருந்தொகையான மக்கள் கூடுகின்றபோது நேர்த்திக்கடன் செய்யும் பக்தர்களுக்கு உங்களால் இயன்ற ஒத்துழைப்பை நல்கவேண்டும். தூக்குக்காவடி, கற்பூரச் சட்டி போன்ற நேர்த்திக்கடன்களைநிறைவேற்றுபவர்களுக்கு எந்தவிதமான இடையூறுகளும் ஏற்படாத வகையில் நடந்து கொள்வதாலும், நடைமுறைகளை உரியமுறையில் பேணுவதாலும் அசௌகரியங்களைத் தவிர்த்துக் கொள்ள முடியும்.

> கொலை, களவு போன்ற பஞ்சமா பாதகங்களில் ஈடுபடுவோர் இத்தகைய புனித தினத்தில் இருந்து அவற்றை நிறுத்தி புதிய வாழ்வுக்குத் திரும்ப வேண்டும்.

வெளிநாடுகளில் இருந்து வருவோர் அந்த நாட்டுக் கலாசாரத்தில் ஆண், பெண் வேறுபாடின்றி உடையணிவதைத் தவிர்த்துக் கொள்ளவது அவசியம்.

ஆலய வீதிகளில் குப்பைகளை அல்லது கழிவுகளை வீசாது அந்தந்த இடங்களில் அமைக்கப்படும் குப்பைத் தொட்டிகளில் போடுவதோடு, பிறரையும் அந்த வழியில் செய்யுமாறு ஊக்குவிக்க வேண்டும்.

கொலை, களவு போன்ற பஞ்சமா பாதகங்களில் ஈடுபடுவோர் இத்தகைய புனித தினத்தில் இருந்து அவற்றை நிறுத்தி புதிய வாழ்வுக்குத் திரும்பவேண்டும்.

இந்தத் திருவிழாவில் கலந்து கொள்ளும் எமது மதத்துடன் தொடர்புபடாதோரும் மாறுபாடான வகையில் செயற்படுவதையும் தவிர்த்துக்கொள்ள வேண்டும்-என்றுள்ளது. (த-ரி)

## குண்டு மீட்பு

யாழ்ப்பாணம், ஓக. 6
வளலாயில் காணி ஒன்றிலிருந்து 60 மில்லிமீற்றர் மோட்டார்க் குண்டு ஒன்று மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

காணி உரிமையாளர் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்த போது மேற்படி குண்டு வெளியில் தென்பட்டது.

இது தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. நீதிமன்றக் கட்டளையைப் பெற்றுக் கொண்ட பொலிஸார், விசேட அதிரடிப்படையினரின் உதவியுடன் அதனை மீட்டுள்ளனர். (த-107)

## மாதாந்த உதவிக் கொடுப்பனவு வழங்கல்

தென்மராட்சி ஓக.6
தென்மராட்சி பிரதேச அஞ்சல் அலுவலகங்களில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோருக்கான ஓகஸ்ட் மாதத்துக்குரிய கொடுப்பனவு நேற்று வெள்ளிக்கிழமை தொடக்கம் அஞ்சல் அலுவலகங்களில் வழங்கப்பட்டு வருகிறது.

எதிர்வரும் 14ஆம் திகதிக்கு முன்னர் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச அஞ்சல் அதிபர்கள் அறிவித்தனர். (த-9)

## நடுவர் சபை அமர்வு இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஓக.6
யாழ். சன்மார்க்க மகா வித்தியாலயத்தில் தற்காலிகமாக இயங்கி வந்த ஜே/246 நடுவர் சபை அமர்வு தவிர்க்க முடியாத காரணத்தால் யாழ்.நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 28 ஆம் திகதி வரையிலான காலப் பகுதியில் உள்ள ஞாயிற்றுக்கிழமைகளில், காலை 9.30 தொடக்கம் மதியம் 12.30 வரை இது நடைபெறும். (த-ரி4)

## சைக்கிள்களை உரிமை கோரி பெற்றுக்கொள்க

யாழ்ப்பாணம், ஓக. 6
பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் உரிமை கோரப்படாத நிலையில் உள்ள துவிச்சக்கரவண்டிகளை உரிமை கோரிப் பெற்றுக்கொள்ளுமாறு நீதிமன்றப் பதிவாளர் தெரிவித்தார்.

நெல்லியடிப் பொலிஸாரால் அநாதரவான நிலையில் கண்டெடுக்கப்பட்டதாகத் தெரிவித்து ஆண், பெண் துவிச்சக்கரவண்டிகள் இரண்டு நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டன. 1760984 இலக்கமுடைய ஆண்கள் லுமாலா சைக்கிளும், 57129774 இலக்கமுடைய பெண்கள் லுமாலா சைக்கிளுமே உரிமைகோரப்படாத நிலையில் உள்ளன.

உரிமையாளர்கள் மன்றின் அலுவலகத்தில் அதற்குரிய மூல ஆவணங்களைச் சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளுமாறும் தவறின் 6 மாதங்களுக்குப் பின் அது அரசுடைமையாக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த-ரி)

# குடிதண்ணீர்ப் போத்தல்கள் பல மணி நேரமாக வெயிலில்

## உடல் நலத்துக்குக் கேடு என எச்சரிக்கை

யாழ்ப்பாணம் ஓக. 6
பிளாஸ்ரிக் போத்தல்களில் அடைக்கப்பட்ட மென்பானங்கள் மற்றும் குடிதண்ணீர்ப் போத்தல்களை வெயில் படும் இடங்களில் வைக்கவேண்டாமென நீதிமன்றங்களால் அறிவுறுத்தல்விடுக்கப்பட்டுள்ள போதிலும் வர்த்தக நிலையங்களில் அவை வெயிலில் விற்பனைக்காக வைக்கப்பட்ட தாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

யாழ். மாவட்டத்துக்குப் புலம்பெயர் நாடுகளிலிருந்து வருவோரின் சீசன் ஆரம்பித்துள்ளதால் வர்த்தக நிலையங்களில் சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர்ப் போத்தல்கள் விற்பனைக்காக வெளியில் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன.

புலம்பெயர் நாடுகளிலிருந்து வருவோரே பெருமளவில் குடிதண்ணீருக்காகப் போத்தல்களில் அடைக்கப்பட்ட தண்ணீரையே கொள்வனவு செய்து வருகின்றனர்.

இதனையடுத்து வர்த்தக நிலையங்களுக்கு வெளியே அவை காலை தொடக்கம் மாலை வரை வெயிலில் வைக்கப்பட்டுள்ளன.

இதனால் உடல்நலக் கேடு ஏற்படாமல் தடுக்கச் சுகாதாரப் பகுதியினர் நடவடிக்கை எடுக்கவேண்டுமென மக்கள் கோரியுள்ளனர். (த-9)

# வரணி வடக்குப் பிரதேசத்தில் கால்நடை திருட்டு அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஓக.6
வரணி வடக்கு, மாசேரி, குருக்கள் குடியிருப்புப் பிரதேசங்களில் மேய்ச்சலுக்குச் செல்லும் கால்நடைகள் இறைச்சிக்காகத் திருடப்படும் சம்பவங்கள் பரவலாக இடம்பெற்று வருவதாகக் கால்நடை உரிமையாளர்கள் தகவல் தெரிவிக்கின்றனர்.

குறித்த பிரதேசங்களை அண்டிய பகுதியின் வடக்குப் பிரதேசம் காட்டுப் பகுதியாகக் காணப்படுவது கால்நடைகளை இலகுவாகக் கடத்திச்செல்வதற்கு வசதியாக உள்ளதாகக் கூறப்படுகின்றது.

வரணிப் பகுதியில் கரம்பான், தில்லையம்பலப் பிள்ளையார் கோயிலடிப் பகுதிகளிலும் கால்நடைகள் மோட்டார் சைக்கிளில் வரும் சிலரால் துரத்திப் பிடிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பிரதேசம் ஆள் நடமாட்டம் இல்லாத பரந்த பிரதேசம் என்பதால் கால்நடைகள் களவாடப்படுவது அதிகரித்துள்ளது.

இந்த ஆண்டு ஆரம்பத்தில் வடமராட்சி வல்லிபுரம் சக்தி ஆலயத்தடி சந்தியில் பருத்தித்துறைப் பொலிஸார் காவல் கடமையில் ஈடுபட்டு வந்தவேளை இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறவில்லை எனவும், தற்போது பொலிஸார் அங்கு இல்லாமையால் கால்நடைக் களவு அதிகரித்ததாகவும் அப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

முள்ளிவெளிச் சந்தி, யார்க்கரை சந்தி ஆகிய இடங்களில் காவல் நிலையங்களை உடனே நிறுவி கால்நடைகள் கடத்தப்படுவதைப் பொலிஸார் தடுக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரியுள்ளனர். (த-122)

# யாழ். மாவட்டச் செயலகத்தில் சுற்றுலா, ஏற்றுமதி அலுவலகம்

யாழ்ப்பாணம், ஓக. 6
யாழ். மாவட்டச் செயலகத்தில் கைத்தொழில், சுற்றுலா மற்றும் ஏற்றுமதிக்கான ஒன்றிணைந்த சேவைகள் அலுவலகம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

கைத்தொழில்களை அபிவிருத்தி செய்து ஏற்றுமதி செய்யும் நோக்கத்தில் வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் யாழ். மாவட்ட செயலாளரின் ஆலோசனையின்படி இந்த அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த அலுவலகத்தில் முதலீட்டு அபிவிருத்திச்சபை, ஏற்றுமதி அபிவிருத்திச்சபை, சுற்றுலா அபிவிருத்திச்சபை, மாகாண விவசாயத்திணைக்களம், மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத்திணைக்களம், மாகாண கைத்தொழில் திணைக்களம், மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், கிராமிய அபிவிருத்தித் திணைக்களம், தேசிய மீன்வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை போன்ற திணைக்களங்களும் உள்ளடக்கப்பட்டன.

இந்தத் திணைக்களங்களைச் சார்ந்த உத்தியோகத்தர்களை ஒருங்கிணைத்துப் பொதுமக்களுக்குச் சேவையை வழங்குவதற்கான வழிமுறைகளைச் செய்து கொடுப்பதற்காகவே இந்த அலுவலகம் உருவாக்கப்பட்டது.

மாவட்டச் செயலகத்தில் செயற்படுகின்ற மத்திய சுற்றுச்சூழல் அதிகாரசபை, கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களம், கரையோரக் கடல் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை போன்ற திணைக்களங்களைச் சார்ந்த உத்தியோகத்தர்களின் சேவைகளும் இங்கு ஒருங்கிணைக்கப்பட்டன.

யாழ். மாவட்டத்திலுள்ள கைத்தொழில்துறைசார் ஏற்றுமதி ஆர்வலர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் வாரத்தில் திங்கள் மற்றும் புதன் ஆகிய நாள்களில் மேற்குறித்த உத்தியோகத்தர்களைச் சந்தித்து பயனைப் பெற்றுக் கொள்ள முடியும் என மாவட்டச் செயலர் மேலும் தெரிவித்தார். (த-ரி)

# பயணிகள் நிழற் குடை அமைக்கக் கோரிக்கை

தென்மராட்சி, ஓக . 6
சாவகச்சேரி நகரசபையின் நுணாவில் பொது நூலகத்துக்கு முன்பாகப் பயணிகள் தங்கி நிற்பதற்கான நிழற்குடை ஒன்றை அமைக்குமாறு பொது அமைப்புகளை அப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர்.

இந்தப்பகுதியைச்சேர்ந்த மக்கள், மாணவர்கள், அரச பணியாளர்கள் இங்குள்ள வாகனத் தரிப்பிடங்களில் நின்று யாழ்ப்பாணம் மற்றும் சாவகச்சேரி போன்ற இடங்களுக்குத் தமது பயணத்தைத் தொடர்கின்றனர். இப் பகுதியில் நிழற்குடை இல்லாததால் மழை, வெயில் வேளைகளில் தங்கி நிற்க இடமில்லாமல் அவர்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

வடக்கு மாகாணசபையினால் வீதியோரங்களில் நிழற்குடைகள் அமைக்கப்பட்டு வரும் நிலையில், இந்தப் பகுதியிலும் நிழற்குடை அமைத்து வழங்குமாறு மக்கள் கேட்டுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக நுணாவில் பகுதியில் உள்ள பொது அமைப்புக்களுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது,

ஏ 9வீதிஅகலிப்பின்போதுகாணிகளின் வேலியுடன் வீதி உள்ளதால் காணி உரிமையாளர்கள் நிழற்குடை அமைப்பதற்குக் காணி விட்டுத்தர மறுப்புத் தெரிவிக்கின்றனர் எனவும், இதனால் நிழற்குடை அமைக்க முயற்சிகள் மேற்கொண்டும் பயனற்றுப் போய் விட்டதெனவும் கூறினர். (த-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துறைமுக நகரத் திட்டத்தை இந்தியா எதிர்த்தது உண்மை

## இப்போதாவது அதனை அரசு ஏற்கிறது என்கிறார் கோத்தபாய

கொழும்பு, ஓக. 6
கொழும்பில் நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்ட சீனாவின் துறைமுக நகரத் திட்டத்தை நிறுத்துவதற்கு இந்தியா அழுத்தம் கொடுத்தமையை அரசு இப்போதாவது ஏற்றுக் கொண்டது.

இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்தார்.

கொழும்பு ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியிலேயே கோத்தபாய மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

துறைமுக நகர அபிவிருத்தித் திட்டத்தைக் கைவிடுமாறு இந்தியா, மகிந்த அரசு மீது மிகக் கடுமையான அழுத்தங்களை வழங்கியது. இதனை நான் கடந்த வருடம் நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில் குறிப்பிட்டேன். அப்போது அதனை மறுத்



லித்தார்கள். இப்போது அமைச்சரவை இணைப்பேச்சாளர் ராஜித சேனாரட்ன அந்தக் கருத்தை உறுதிப்படுத்துவது போன்று கருத்து வெளியிட்டுள்ளார்.

அமைச்சர் ராஜிதவின் கருத்துத் தொடர்பில் நாடாளுமன்றிலும் அதற்கு வெளியிலும் கேள்விகள் எழுப்பப்படவேண்டும் - என்றார். (த-5)

# பாலம் அமைத்தால் குண்டு வைப்பேன்

## எச்சரிக்கிறார் கம்மன்பில

கொழும்பு, ஓக. 6
இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பாலம் அமைக்கப்படுமாயின் அதனைக் குண்டு வைத்து தகர்த்தெறியவும் தயாராக இருப்பதாக ஹெல உறுமயக் கட்சியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்தோனேசியாவின் ஜகார்த்தா நகரில் நடைபெறும் 12 ஆவது இஸ்லாமிய பொருளாதார மாநாட்டில் கலந்து கொண்ட அமைச்சர் கபீர் ஹசீம், இந்தியாவையும் இலங்கையையும் இணைக்கும் பாலம் ஒன்றைக் கட்டப் போகும் தகவலை வெளியிட்டார். இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையிலேயே கம்பன்பில இவ்வாறு கருத்துரைத்தார்.

அவர் தெரிவித்ததாவது:

பாலத்தை நிர்மாணிப்பதன் மூலம் இந்தியாவையும் இலங்கையையும் இணைப்பதாகக் கூறினாலும் உண்மையில் இதன் மூலம் இலங்கையின் வடக்கு இந்தியாவின் தமிழ் நாடாக மாறி விடும்.

இந்தியாவில் 50 மில்லியன் மக்கள் வேலை வாய்ப்பின்றித் திண்டாடி வருகின்றனர். இலங்கையின் மொத்த மக்கள் தொகையானது 21 மில்லியன்.

பால்த்தை நிர்மாணிப்பதன் மூலம் இந்தியாவில் வேலை வாய்ப்பின்றி இருப்பவர்கள் இலங்கைக்கு வருவார்கள்.

தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் தொடர்ந்தும் வடக்கு நோக்கிப் பயணம் மேற்கொள்வார்கள். இதன் மூலம் சிங்களவருக்கு இருக்கும் ஒரே தாய் நாடு இல்லாமல் போகும் ஆபத்து ஏற்படும்.

பாலத்தை நிர்மாணித்தால் தேசிய பாதுகாப்புக்காக அந்தப் பாலத்தை குண்டு வைத்துத் தகர்ப்போம்-என்றார். (த-5)

## ஜே.வி.பி. ஆதரவு

கொழும்பு, ஓக. 6
நட்டமடையும் அரச நிறுவனங்கள் விற்பனை செய்யப்படுவதை எதிர்க்கவில்லை.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

இலங்கைப் பொருளாதார மாநாட்டில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"நட்டம் அடையும் அரச நிறுவனங்களைக் கடன் சுமையுடன் தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைக்கவேண்டும். கடன் சுமையை நீக்காது தனியார் துறையினரிடம் இவ்வாறு நிறுவனங்கள் ஒப்படைக்கப்பட வேண்டியது அவசியமானது சிறிய பொருளாதாரத்தைக் கொண்ட இலங்கை போன்ற நாடுகளில் அரசு சில விடயங்களில் கட்டுப்பாட்டைக் கொண்டிருப்பது அவசியமானது"- என்றார். (த-5)

# வீட்டில் வளர்த்த நாக பாம்பு தீண்டி ஆய்வாளர் உயிரிழப்பு

கொழும்பு, ஓக. 6
வீட்டில் வளர்த்த நாக பாம்பு தீண்டிச் சுற்றாடல் ஆய்வாளர் உயிரிழந்தார்.

ஆய்வு நோக்கத்துக்காக வீட்டில் வளர்த்து வந்த நாக பாம்பே இவ்வாறு தீண்டியுள்ளது.

காலியைச் சேர்ந்த 47 வயதான அமல் விஜேசேகர என்பவரே உயிரிழந்தார்.

இந்த நபரை வீட்டு வாசல் கதவு அருகாமையில் இறந்து கிடந்த நிலையில் உறவினர்கள் மீட்டுள்ளனர்.

இலங்கைக்கே உரிய உயிரினங்கள் தொடர்பில் ஆய்வு நடத்தி வரும் ஆய்வுக் குழுவொன்றின் அங்கத்தவராக இவர் கடமையாற்றி வந்தார்.

பிரதேசத்தில் பல்வேறு வீடுகளுக்கு வரும் பாம்பு இனங்களை பிடித்துக் கொண்டு வீட்டுக்குச் சென்று ஆய்வு செய்து வந்தார்.

தங்கியிருந்த வீட்டின் ஒரு பகுதியில் இந்தப் பாம்புகள் வளர்க்கப்பட்டன. இந்த பாம்பு வகைகளில் இரண்டு பெரிய நாக பாம்புகள் என்பது குறிப்பிடத்தக்கது.

பாம்பு அவரைக் கொத்தியதன் பின்னர் வீட்டுக்கு வெளியே சென்றிருக்கலாம் எனவும் அதன்போது நுழைவாயிலுக்கு அருகாமையில் அவர் வீழ்ந்து இறந்திருக்கலாம் எனவும் சந்தேகம் வெளியிடப்பட்டது.

பாம்பு விசத்தினால் இந்தச் சாவு ஏற்பட்டதாகக் கராபிட்டிய வைத்தியசாலையில் நடத்திய உடற் கூற்றுப் பரி சோதனையின் மூலம் தெரிய வந்தது. (த-5)

# வெட்கமற்றவர் மகிந்த

## கூறுகிறார் எஸ்.பி

கொழும்பு, ஓக. 6
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு வெட்கம் இல்லையென்றால் நாம் என்ன செய்ய முடியும்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.



அவர் தெரிவித்ததாவது:

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் எப்போதும் முரண்பாடுகள் காணப்பட்டன. இதன் காரணமாக மூத்த அரசியல்வாதி எஸ்.ஏ. விக்ரமசிங்க இது கட்சியல்ல ஓர் கூட்டணி என்று கூறியிருந்தார்.

கட்சி ஒருவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தால் அது கட்சியைப் பலப்படுத்த வேண்டுமே தவிர கட்சியைப் பிளவடையச் செய்யும் வகையில் அமைந்துவிடக் கூடாது.

அண்மையில் நடைபெற்ற பாத யாத்திரை நல்ல விடயம். 3 -4 மில்லியன் மக்கள் அணி திரண்டதாகக் கூறப்பட்ட போதிலும் உண்மையில் 12 ஆயிரம் பேர் மட்டுமே இணைந்து கொண்டனர்.

சுதந்திரக் கட்சியின் தலைமையகத்துக்கு எதிரில் கூக்குரல் இட்டபோது மகிந்த அருகாமையில் இருந்தார். அதனைப் பார்த்துக்கொண்டிருந்த மகிந்தவே வெட்கப்படவேண்டும்.

அவருக்கு வெட்கம் இல்லையென்றால் நாம் ஒன்றும் செய்ய முடியாது - என்றார். (த-5)

# கூட்டு எதிரணியில் உள்ள சு.கவினர் மீது நடவடிக்கை

## மத்திய குழுக் கூட்டத்தில் தீர்மானம்

கொழும்பு, ஓக. 6
மகிந்த ராஜபக்ச ஆதரவு கூட்டு எதிரணியில் உள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு, அந்தக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

ஜனாதிபதியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நேற்றுமுன்தினம் இரவு கட்சியின் மத்திய குழுக் கூட்டம் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில், கூட்டு எதிரணியில் இடம்பெற்றுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு முடிவு செய்யப்பட்டது.

மகிந்த ஆதரவு அணியினர் அண்மையில் நடத்திய அரசுக்கு எதிரான பாதயாத்திரையின்போது, ஜனாதிபதிக்கு எதிராகவும் கருத்துக்கள் வெளியிடப்பட்டிருந்த நிலையிலேயே, சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக்கூட்டம் இடம்பெற்றிருந்தது. (த-5)

# நோர்வேப் பிரதமர் கொழும்பில் ஜனாதிபதி, பிரதமருடன் சந்திப்பு

கொழும்பு, ஓக. 6
விடுமுறையைக் கழிப்பதற்காக இலங்கை வந்துள்ள நோர்வேப் பிரதமர் எர்ணா சோல்பேர்க், ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்டோரைச் சந்தித்துப் பேச்சு நடத்துவார்.

நோர்வேப் பிரதமர் எர்ணா சோல்பேர்க், நேற்றுமுன்தினம் காலை இலங்கையை வந்தடைந்தார். விடுமுறையைக் கழிப்பதற்கான தனிப்பட்ட பயணமாகவே அவர் குடும்பத்துடன் கொழும்பு வந்தார்.



இந்தப் பயணத்தின் முடிவில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தச் சந்திப்புக்கள் அடுத்த வாரம் இடம் பெறும் என்று கூறப்படுகிறது. எனினும் சந்திப்புக் கான நிகழ்ச்சி நிரல் இன்னமும் இறுதி செய்யப்படவில்லை என்று அயலுறவுத்துறை அமைச்சின் பேச்சாளர் மஹேஷினி கொலன்னே தெரிவித்தார்.

எதிர்வரும் 12 அல்லது 13ஆம் திகதி இந்தச் சந்திப்பு இடம் பெறும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சனத் நிஷாந்த எம்.பி சு.கவிலிருந்து நீக்கம்

கொழும்பு, ஓக. 6
புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்தவின் கட்சி உறுப்புரிமையை இடை நிறுத்துவதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்ற போதே, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார். கட்சியின் தலைமைத்துவத்தையும், கட்சியையும் விமர்சித்தமையினால் சனத் நிஷாந்த நீக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.
இதேவேளை, உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான அழைப்பு கடிதங்களுக்குத் தீவைத்த குருநாகல் மாவட்ட உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்களைக் கட்சி உறுப்பினர் பதவிகளிலிருந்து நீக்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டதாக அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார். (த-5)

# சந்திரிகா-மைத்திரி-மகிந்தவை ஒரே மேடையில் ஏற்றமுடியாது

## இப்படிக் கூறுகிறார் மகிந்த அமரவீர




கொழும்பு, ஓக. 6
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் தலைவர்களான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, மகிந்த ராஜபக்ச மற்றும் தற்போதைய தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகியோர் ஒரே மேடையில் ஏறி உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை எதிர்கொள்வது சாத்தியமற்றது.
இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரான மகிந்த அமரவீர தெரிவித்தார்.
மீன்பிடித்துறை மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் தெரிவித்ததாவது:
எனது அரசியல் வாழ்வில் அதிகம் சிரமப்பட்டுத் தூக்கமில்லாமல், கட்சியை ஒன்றிணைக்க நான் பாடுபட்டேன். சந்திரிகா குமாரதுங்க, மகிந்த ராஜபக்ச மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகிய கட்சியின் முக்கிய தலைவர்களை ஒரே மேடையில் ஏற்றி உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை எதிர்கொள்வோம் எனக் கூறினேன். அது இன்று சாத்தியமற்ற விடயமாகக் காணப்படுகின்றது.
பொது எதிரணியினர் பாத யாத்திரையில் பங்குகொண்டாலும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மீது அதீத பற்றுள்ளவர்கள் அதிகமாகவே உள்ளனர். கட்சி ஒன்றிணைவதைத் தடுக்க ஒரு குழு செயற்பட்டு வருகின்றது. கட்சியைப் பிளவுபடுத்தும் செயற்பாட்டில் மகிந்த ராஜபக்சவுக்கு எவ்வித நாட்டமும் இல்லை. அவரைச் சுற்றியுள்ள சிலர் கட்சியைப் பிளவுபடுத்தும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றனர்.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிறுவுனரான பண்டாரநாயக்கவின் உருவச்சிலையைச்சிதைத்து வீதி வீதியாக இழுத்துச் சென்ற ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து அரசொன்றை அமைத்ததற்கு அரசிலுள்ள சிறிலங்காசுதந்திரக் கட்சியினர் வெட்கப்பட வேண்டுமெனப் பொது எதிரணியினர் தெரிவித்தனர்.
அவர்கள் ஒன்றை நன்றாகப் புரிந்துகொள்ளவேண்டும். 2006ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து தேசிய அரசை அமைக்கும் முயற்சிகளை அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச முன்னெடுத்தார். இன்று கூச்சலிடும் சிலர் அன்று அமைதியாக இருந்தனர்.
அரசிலுள்ள சிலரை வெளியே வரவேண்டுமெனக் கூறும் சிலர் ஐக்கிய தேசியக் கட்சி அரசு அமைப்பதற்கு 6 அமைச்சுப் பதவிகளையும், 2 இராஜாங்க, 3 பிரதி அமைச்சுப் பதவிகளையும் கோரி அந்தக் கட்சியிடம் பேரம் பேசியுள்ளனர்.
ஐக்கிய தேசியக் கட்சி இதற்கு விரும்பாததால் இந்த பேரம் நிறுத்தப்பட்டது. பாதயாத்திரையில் அரசுக்கு எதிராக அதிகமாகக் கூச்சலிட்டவர்களே ஐக்கிய தேசியக் கட்சியுடன் பேரம் பேசினர்.
கட்சிக்கு எதிராகச் செயற்படுபவர்களை நீக்கி விடமுடியும். தொடர்ந்தும் பிளவுபடும் கட்சியை ஒன்றிணைப்பதில் நான் மும்முரம் காட்டி வருகின்றேன் - என்றார். (த-5)

## மாணவனுக்கு ஆபாசப்படம் காண்பித்தவர் கைதாகினார்

கொழும்பு, ஓக. 6
பாடசாலை மாணவனுக்குத் தொலைபேசி மூலம் ஆபாசப் படங்களைக் காண்பித்த நபர் ஒருவரைக் கம்பளைப் பொலிஸார் கடந்த வியாழக்கிழமை மாலை கைது செய்தனர்.
கம்பளை பேருந்து நிலையப் பகுதியில் உள்ள கடை ஒன்றின் மேல் மாடியில் வைத்து 35 வயது மதிக்கதக்க நபர் ஒருவர் 15 வயதுடைய பாடசாலை மாணவனுக்குத் தனது தொலைபேசி ஊடாக ஆபாசப் படங்களைக் காட்டியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
இந்தச் சம்பவத்தை அவதானித்த சிலர் பொலிஸாருக்கு வழங்கிய இரகசியத் தகவலையடுத்து, பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று தொலைபேசியைக் கைப்பற்றியதுடன் குறித்த நபரையும் கைது செய்தனர்.
பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணையில், பாடசாலை மாணவன் குறித்த நபருக்கு மருமகன் முறையெனத் தெரியவந்தது. (த-5)

## சிறுபான்மைக்குத் தீர்வு வழங்க சிங்கள மக்கள் கடும் எதிர்ப்பு

## *மனம் திறக்கிறார் பிரதமர் ரணில்*



கொழும்பு, ஓக. 6
நல்லிணக்கம், நிலைமாறு நீதிப்பொறிமுறை மற்றும் சிறுபான்மையினருக்கான தீர்வுகளை வழங்குவது தொடர்பிலான அரசின் முயற்சிகளுக்குச் சிங்கள மக்கள் எதிரான நிலைப்பாட்டிலேயே இருக்கின்றனர்.
இவ்வாறு பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.
அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் இரவு நடத்திய கலந்துரையாடலின்போதே பிரதமர் இந்தத் தகவலைத் தெரிவித்ததாக அந்த சந்திப்பில் கலந்துகொண்ட மனித உரிமைச் செயற்பாட்டாளரான பிரிட்டோ பெர்ணான்டோ குறிப்பிட்டுள்ளார்.
இந்தச் சந்திப்புத் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தாவது:-
அரச சார்பற்ற நிறு வணங்கள் சுயாதீனமாகச் செயற்படுவதற்கு வழி செய்யும் வகை யிலான புதியசட்டவரைவில்உள்ளடக்க எதிர்பார்க்கும் விடயங்கள் குறித்துப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்துரையாடினார்.
மாவட்ட அபிவிருத்திக் குழுக்களிலும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதியை இணைத்துக்கொள்வதற்கும் பிரதமர் இணக்கம் தெரிவித்தார்.
நல்லிணக்கம், நிலைமாறு நீதிப் பொறிமுறை, சிறுபான்மையினருடனான சமாதானத்தை ஏற்படுத்த அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகள் உள்ளிட்ட ஏனைய சில விடயங்கள் குறித்து அரச சார்பற்ற நிறுவனங்களால் பிரதமரிடம் கேள்வி எழுப்பப்பட்டது. இதன்போது இவ்வாறான விடயங்களுக்குத் தென் பகுதியில் இருந்து அரசியல் அழுத்தம் உள்ளதாகப் பிரதமர் குறிப்பிட்டார்.

> " தென்பகுதியிலுள்ள அரசியல் வாதிகள் மற்றும் சிங்கள மக்கள் மத்தியில் தமிழ் மக்களின் பிரச்சினை களுக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதற்கான அரசியல் ரீதி யான விருப்பமும் தெரிவிக்கப்படவில்லை என்பதையும் பிரதமர் சுட்டிக் காட்டினார். "

தென்பகுதியிலுள்ள அரசியல்வாதிகள் மற்றும் சிங்கள மக்கள் மத்தியில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படவேண்டும் என்பதற்கான அரசியல் ரீதியானவிருப்பம்இன்னும் தெரிவிக்கப்படவில்லை என்பதையும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.
நிலைமாறு நீதிப் பொறிமுறை, நல்லிணக்கப் பொறிமுறைகளை நிறைவு செய்தல் உள்ளிட்ட விடயங்களில் அரசுடன் இணைந்து பணியாற்றுவதற்கு அரச சார்பற்ற நிறுவனங்களின் தரப்பில் விருப்பம் தெரிவிக்கப்பட்டது-என்றார். (த-5)

## மகிந்த ஆட்சியில் சிறுவன் இவ்வாறு கூறியிருந்திருந்தால் நிலைமை வேறு

*அமைச்சர் ரங்கே பண்டார தெரிவிப்பு*

கொழும்பு, ஓக. 6
கூட்டுஎதிர்க்கட்சியின்நடைபவனியின்போது சிறுவன் ஒருவன் கூறிய வார்த்தைகளைக் கடந்த அரசின் காலத்தில் மகிந்த ராஜபக்சவுக்கு எதிராகக் கூறியிருந்தால் சிறுவனையும், அவனது தாயையும்தந்தையையும்காணக் கிடைக்காது போயிருக்கும்.
இவ்வாறு இராஜாங்க அமைச்சர் ரங்கே பண்டார தெரிவித்தார்.
கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் தெரிவித்ததாவது:
செல்லும் கூட்டங்களிலெல்லாம் பிள்ளைகளைத் தூக்கிப் பிடித்து முத்தமிடும் மகிந்த ராஜபக்ச, நடைபவனியில் கலந்துகொண்ட சிறுவன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எதிராகக் கூறிய வார்த்தைகள் விளையாட்டுக்கு கூறியவைகள் என்று தெரிவித்துள்ளமை விசனத் துக்குரியது.
இதே வார்த்தைகளைக் கடந்த ஆட்சிக் காலத்தின்போது சிறுவன் கூறியிருந்தால், அந்தச் சிறுவனும்அவனதுதாய்-தந்தை ஆகியோரும் காணாமற் போயிருப்பார்கள்-என்றார். (த-5)

## பியசேனவுக்கு விளக்கமறியல்

கொழும்பு, ஓக. 6
அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பி.எச்.பியசேனவை எதிர்வரும் ஓகஸ்ட் 12ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் மன்றம் உத்தரவிட்டுள்ளது.
வழக்குத் தொடர்பான விசாரணை நீதிமன்றில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டபோதே மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.
கைது செய்யப்பட்டிருந்த பியசேனவின் சாரதியை 10 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணை மற்றும் 3 லட்சம் ரூபா சரீரப் பிணையிலும் நீதிமன்றம் விடுவித்தது. அரச வாகனத்தைத் திருப்பி கையளிக்கவில்லையென்ற குற்றச்சாட்டில் பியசேன கடந்த வாரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார். அரச வாகனம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதுடன்சாரதிகைதுசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7 பேருக்கு சாவுத் தண்டனை

## நுவரெலியா மேல் நீதிமன்றம் தீர்ப்பு

கொழும்பு, ஓக. 6
நுவரெலியா மேல் நீதிமன்றம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7 பேருக்கு சாவுத் தண்டனை விதித்துள்ளது.
2000ஆம் ஆண்டு ஜூன் மாதம் 4ஆம் திகதி இடம்பெற்ற [illegible] தொடர்பில் இடம்பெற்ற வழக்கு விசாரணையை அடுத்து இந்தத் தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டது.
2004.02.01 ஆம் திகதி கந்தப்பளை கொங்கோடியா தோட்டத்தில் இரண்டு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதல் நிலையைத் தொடர்ந்து மூன்று பிள்ளைகளின் [illegible] வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.
விசாரணையின்போது சந்தேகத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பழனியாண்டி முத்துராஜா, பழனியாண்டி ஹரிராம், பழனியாண்டி நீலமேகம், பழனியாண்டி சுப்பிரமணியம், நீலமேகன் கமலநாதன், நீலமேகன் பாலச்சந்திரன், சுப்பிரமணியம் விக்னேஸ்வரன் ஆகியோரைப் பொலிசார் கைது செய்தனர். கடந்த 12 வருடங்களாக நடைபெற்ற விசாரணையின் பின்பு சாட்சிகளின் வாக்குமூலத்தின் அடிப்படையிலும் சட்டத்தரணிகளின் வாதப்பிரதிவாதங்களையும் கருத்தில் கொண்டும் இந்தத் தீர்ப்பை நுவரெலியா உயர் நீதிமன்றம் நேற்று வழங்கியுள்ளது.
முதலாவது குற்றசாட்டுக்காக இந்த 7 பேருக்கும் தலா 3 ஆயிரம் ரூபா அபராதமும், 6 மாதச் சிறைத் தண்டனையும் விதித்த மேல் நீதிமன்ற நீதிபதி லலித் ஏக்கநாயக்க, மூன்றாவது குற்றச்சாட்டுக்காக இவர்களுக்குச் சாவுத் தண்டனை விதித்துள்ளார். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## முழுப்பூசணியை மீண்டும் சோற்றில் புதைக்கும் போக்கா...?

நாம் ஒன்று நினைக்க தெய்வம் (வேறு) ஒன்றை நினைக்கும். இது சர்வசாதாரணமான பேச்சுவழக்கு மொழி. எனினும் அது இப்போது நல்லாட்சி அரசைத்திக்குமுக்காட வைத்துள்ளது பார்த்தீர்களா?

எமது வடக்கு மாகாண மக்கள், முற்று முழுதாக அனைத்துலகப்பொறிமுறையிலான விசாரணையையே விரும்புகிறார்கள் என்ற நிலைமை உத்தியோக பூர்வமாக வெளிப்பட்டுள்ளது.

ஆம். மக்கள் கருத்துக்களை அறிவதற்காக அரசால் நியமிக்கப்பட்ட நல்லிணக்கச் செயலணியின் செயலாளர் கலாநிதி பாக்கியசோதி சரவண முத்து, தாம் வடக்கு மக்களிடம் கேட்டறிந்த கருத்தை அச்சொட்டாகத் தெரிவித்திருக்கிறார்.

● போர்க்குற்ற விசாரணையின்போது வழங்கப்படும் சாட்சியங்களின் நம்பகத்தன்மை பேணப்பட வேண்டும்.

● பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட்டாக வேண்டும் என்பவை உள்ளிட்ட, பல்வேறு கருத்துக்களை வடக்கு வாழ் மக்கள் ஆணித்தரமாகவும், அழுத்தியும் வெளிப்படுத்தி உள்ளனர்.

மேலும் உள்ளகப் பொறிமுறை ஊடாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று எந்தக் கட்டத்திலும் கனவுதானும் காண இயலாது என்ற கருத்தே அவர்களிடம் இருந்து வெளிப்பட்டது என்பதையும்-- மக்கள் கருத்தறியும் செயலணியின் செயலாளர் அழுத்தி அடித்துக் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

● போர்க்குற்ற விசாரணையை எந்த வகை சார்ந்து முன்னெடுப்பது--

● காணாமற்போனோர் அலுவலகத்தை எந்த வழிமுறையில் நிறுவுவது என்பவை குறித்து மக்கள் கருத்தறியும் பணி கடந்த மாதம் இருபத்தைந்தாம் திகதியன்று ஆரம்பிக்கப்பட்டது.

● மக்கள் தமது கருத்துக்களை செயலணியிடம் வெளியிடுவதற்கு முன்னதாகவே--

கொழும்பின் அரச தலைவர்கள் மற்றும் த்ரப்புகள் உள்ளக விசாரணையே நடத்தப்படும் என்று அழுத்தி, அமுக்கி உரத்துக் கருத்துக்கூறி வந்தமையை--

தமிழ் மக்கள் மறந்து விடவில்லை.

அத்தகைய ஒரு பின்னணியில், வெறுமனே ஒப்பாசாரத்துக்காக மக்கள் கருத்து அறியும் செயற்பாடு இடம்பெறுகிறதோ என்று எண்ணத் தோன்றுகிறது!

உள்ளதைச் சொல்லப்புகின்--

ஜனநாயக ரீதியில் மக்களின் கருத்துக்களை அறிந்தே அரசு செயற்படுகிறது என சர்வதேச சமூகத்துக்குக் காட்டிக் கொள்ளும் நோக்கில் அரசு மக்கள் கருத்தறியும் செயலணியை அமைக்கப் போய், இப்போது அது குறித்து வடக்கு மக்களது இறுக்கமான கருத்தால் குட்டுவாங்கும் நிலைக்கு உள்ளாகியுள்ளது.

மறுபுறத்தில் உள்ளார்ந்து நோக்கின், மக்களுக்கு அல்ல வடக்கின் அரசியல் தலைவர்களுக்கே அனைத்துலக (பன்னாட்டு) விசாரணைப் பொறிமுறை தேவைப்படுவதாகக் கூறி முத்தாய்ப்பு வைக்கப்படக் கூடுமோ என்ற பென்னம் பெரு வினா மேலெழுவதைத் தவிர்க்க இயலவில்லையே!

தமிழ் மக்களின் விவகாரங்களில் முழுப் பூசணிக்காயை சோற்றுக்குள் முற்றாகப் புதைக்கும் கைவந்த கலை தென்னிலங்கைத் தலைவர்களுக்குத் தண்ணீர்பட்ட பாடல்லவா...?



சிங்கள மூலம்
மவ்பிம
தமிழில்: வீஎஸ்ரி

# சிறிமாவோவின் அன்றைய அச்சம் நல்லாட்சி அரசுக்கு இன்று ஏற்பட்டிருக்குமோ?

அத்தனகலவில் தமது தலைமையில் நடத்தப்பட்ட அரசுக்கு எதிரான பாதயாத்திரைப் போராட்டம், சிறிமாவோ தலைமையிலான அரசால் குழப்பப்பட்டதாக 1973 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் எதிர்க்கட்சித் தலைவராகச் செயற்பட்ட ஜே.ஆர்.ஜெயவர்த்தனா குற்றஞ்சாட்டி நாடாளுமன்றத்தில் உரையாற்றியிருந்தார். தொம்பே தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.டி.பண்டாரநாயக்கா தலைமையிலான சுதந்திரக்கட்சி ஆதரவாளர்களே பாதயாத்திரை மேற்கொண்டோர் மீது தாக்குதல் மேற்கொண்டதாக 1973 டிசெம்பர் மாதம் 10ஆம் திகதியன்று ஜே.ஆர். நாடாளுமன்றத்தில் உரையாற்றிய வேளை சிறிமாவோ அரசு மீது குற்றஞ்சாட்டியிருந்தார்.

சிறிமாவோ தலைமையிலான சுதந்திரக்கட்சி அரசு, எதிர்க்கட்சித் தலைவராகச் செயற்பட்ட ஜே.ஆரால் ஒழுங்கு செய்யப்பட்ட பாதயாத்திரையை பலாத்கார வழியில் தாக்குதல் மேற்கொண்டு, தடுத்து நிறுத்தி நிலைகுலையச் செய்திருந்தது.

அன்று மூன்று வருட ஆட்சியைப் பூர்த்தி செய்திருந்த கூட்டு முன்னணி அரசுக்கு எதிராக ஜே.ஆர். ஒழுங்கு செய்த பாதயாத்திரைக்குச் சிறிமாவோ அஞ்சியமை போன்றே, இன்று ஓராண்டு ஆட்சியை பூர்த்தி செய்துள்ள நல்லாட்சி அரசுக்கு எதிராக மகிந்த ஒழுங்கு செய்து நடத்திய பாதயாத்திரையைக் கண்டு ரணிலும் மைத்திரிபாலவும் அச்சம் அடைந்துள்ளனர். அன்று சிறிமாவோவின் தலைமையிலான கூட்டு முன்னணி அரசின் மீது நாட்டு மக்கள் அதிருப்தி அடைந்திருந்ததன் காரணமாவே, ஜே.ஆரால், ஒழுங்கமைக்கப்பட்ட அன்றைய பாதயாத்திரையைக் கண்டு சிறிமாவோ அச்சமுற நேர்ந்தது. பொது மக்களது அத்தியாவசியப் பாவனைப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் வகையில், சிறிமாவோ அரசு கடைக்கொண்ட இறுக்கமான பொருளாதாரக் கொள்கை காரணமாக நட்டு மக்கள் அரசு மீது கடும் ஆத்திரமும் வெறுப்பும் கொண்டிருந்தனர். இதனால் மக்கள் ஜே.ஆரின் பின்னால் அணிதிரள முற்படக் கூடுமென சிறிமாவோ அஞ்சினார். ஆதலால் எவ்வாறாவது ஜே.ஆரால் ஒழுங்கு செய்யப்பட்ட அந்தப் பாதயாத்திரை முயற்சியை தோற்கடித்தாக வேண்டிய அவசியம் சிறிமாவோ அரசுக்கு ஏற்பட்டிருந்தது. அதற்காக சிறிமாவோ தமது அரசில் நீதி அமைச்சராகவிருந்த எஸ்.டி.பண்டாரநாயக்காவை பயன்படுத்திக் கொண்டார்.

அன்று சிறிமாவோ அரசின் பொருளாதாரக் கொள்கை காரணமாக அரசு, நாட்டு மக்கள் மத்தியில் ஆதரவை இழந்தமை போன்று இன்றைய நல்லாட்சி அரசு, தான் மேற்கொண்ட வற்வரி அதிகரிப்புக் காரணமாக நாட்டு மக்கள் மத்தியில் செல்வாக்கை இழந்துள்ளது. இத்தகைய சிரமநிலையிலுள்ள நாட்டின் பொது மக்கள் மகிந்தவின் பின்னால் அணி திரளக் கூடுமென மைத்திரிபாலவும் ரணிலும் சிந்திக்கத் தலைப்பட்டுள்ளனர். மகிந்தவால் ஒழுங்கு செய்யப்பட்ட பாத யாத்திரை இதற்கு வலுவூட்டக் கூடுமென அஞ்சிய மைத்திரிபாலவும் ரணிலும் எவ்விதத்திலாவது குறித்த பாத யாத்திரையைத் தோல்வியுறச் செய்ய வேண்டுமெனத் தீர்மானித்தனர்.

அன்று ஜே.ஆரினது பாதயாத்திரையைக் குழப்புவதற்கு சிறிமாவோ, தனது அரசில் நீதி அமைச்சராகவிருந்த எஸ்.டி.பண்டாரநாயக்காவைப் பயன்படுத்திக் கொண்டார் அதே பாணியில் மகிந்தவால் ஒழுங்கு செய்யப்பட்ட பாதயாத்திரை, நீதிமன்றம் வழங்கிய தடைஉத்தரவு காரணமாக தோல்வியில் முடியுமெனப் பலர் நம்பினர். குறித்த பாதயாத்திரையை நடத்தத் தடை விதிக்குமாறு பொலிஸார் நீதிமன்றத்தை நாடினர். பொலிஸார் மேலிடத்து உத்தரவு ஒன்றுக்கமையவே அவ்விதம் நீதிமன்றத்தின் உதவியை நாடியிருக்கக் கூடும்.

அன்று சிறிமாவோ, ஜே.ஆரினது குறித்த பாதயாத்திரை வெற்றியடையாது பின்னடைவு காணச் செய்த போதிலும், நாட்டு மக்கள் சிறிமாவோ அரசுக்கு எதிரான தமது விரோதத்தைக் கைவிட்டு விடவில்லை. உண்மையில் சிறிமா வோவினது நிர்வாகத்தின் மீது கொண்ட விரோத மனப்பான்மை காரணமாக, நான்கு வருடங்களுக்கு பின்னர் 1977 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் ஆறில் ஐந்து மடங்கு பெரும்பான்மைப் பலத்துடன் ஐ.தே.கட்சி ஆட்சி அமைக்க நாட்டுமக்கள் ஜே.ஆருக்கு கடும் ஆதரவை வழங்கியிருந்தனர். சிறிமாவோவினது தலைமையிலான சுதந் திரக்கட்சி மக்கள் மத்தியில் செல்வாக்கு இழந்து சின்னாபின்னமாகியது.

ஜே.ஆரினது பாதயாத்திரையை முறியடிக்க முயன்று சிறிமாவோவின் தலைமையிலான சுதந்திரக் கட்சி 1977 பொதுத் தேர்தலில் கடும் தோல்வியைச் சந்தித்தமை போன்று, 2020ஆம் ஆண்டில் இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவின் தலைமையிலான சுதந்திரக் கட்சி படுதோல்வியைச் சந்திக்க நேருமா? என்பது குறித்து இப்போது எதிர்வுகூறல் எதனையும் தெரிவிக்க இயலாதே!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேரலாதன்

# முன்னாள் போராளிகள் விடயத்தில் அரசின் நகர்வு என்ன?

இலங்கை அரசினால் புனர்வாழ்வு வழங்கப்பட்ட 105 முன்னாள் போராளிகள் இதுவரையில் சாவடைந்துள்ளதாக அதிர்ச்சித் தகவல் ஒன்று வெளியாகியுள்ளது. ஆனால் இவர்களின் சாவுகளுக் கான காரணங்கள் இது வரை தெரிய வரவில்லை என்பதுதான் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

போர் இடம்பெற்றபோது தமிழர்கள் அனைவருமே ஏதோ ஒருவகை யில் அதில் தொடர்புபட்டிருக்க வேண்டிய நிர்ப்பந்த மொன்று உருவாக்கப்பட்டிருந்தது. இதனால்தான், தமிழர்கள் அனைவருமே புலிகளாகப் பார்க்கப்பட்டனர். இந்த நிலையில் முன்னாள் போராளிகளின் அவல நிலை தொடர்பாக அவசரமாகக் கவனம் செலுத்தப்பட வேண்டியதொரு நிர்ப்பந்தம் தற்போது எழுந்துள்ளது.

தற்போதைய நிலையில் அரசால் புனர்வாழ்வு வழங்கப்பட்டு சமூகத்துடன் இணைந்துள்ள முன்னாள் போராளிகள் பலரும் பல்வேறு இடர்களுக்கும் முகம் கொடுத்து வருகின்றனர். இவர்களுக்கு உரிய வேலைவாய்ப்புக்கள் கிடைப்பதில்லை. இதனால் தமது குடும்பங்களை நடத்த முடியாத அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இவர்கள் சமூகத்துடன் இணைந்து செயற்பட்டு வருகின்ற போதிலும், படைத்தரப்பினரின் சந்தேகப் பார்வை இவர்களை வட்டமிட்டபடியே உள்ளது. புலனாய்வாளர்கள் அவர்களின் ஒவ்வொரு செயலையும் உன்னிப்பாக அவதானித்தபடியே உள்ளனர். சில போராளிகள் கைது செய்யப்படுவதும் இடம்பெற்று வருகின்றது. போரின்போது தமது இன்னுயிர்களை அர்ப்பணிப்பதற்குக் கூடத் தயங்காத இவர்கள் சமூகத்தால் உரிய அந்தஸ்து வழங்கப்படாத நிலை யில் அவல வாழ்வையே வாழ்ந்து வருகின்றனர். இந்த நிலையில் அரசால் புனர்வாழ்வு வழங்கப்பட்டபோது அவர்களுக்கு அநீதிகள் இழைக்கப்பட்டதான தகவல்கள் வெளிவந்துள்ளன.

இதேவேளை தமிழ் அரசியல்வாதிகள் பலரும் இந்த விடயத்தில் அக்கறை காட்ட ஆரம்பித்துவிட்டார்கள். புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமுதாயத்துடன் இணைக்கப்பட்ட முன்னாள் போராளிகளை வடக்கு மாகாணத்திலுள்ள அல்லது தமிழ் மக்கள் பேரவையில் உள்ள வைத்தியர்கள் இணைந்து வைத்தியப் பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும் என்ற குரல்கள் பலமாக ஒலிக்க ஆரம்பித்துள்ளன. தடுப்பு முகாம்களில் புனர்வாழ்வு பெறுவதற்கெனத் தடுத்து வைக்கப்பட்டிருந்த முன்னாள் போராளிகளுக்கு இரசாயன உணவுகள் வழங்கப்பட்டதாகவும், சந்தேகத்துக்கிடமான ஊசிகள் ஏற்றப்பட்டதாகவும் கூறப்படுகின்ற குற்றச்சாட்டுக்கள் மிகவும் பாரதூரமானவையாகும். இது தொடர்பாக முன்னாள் போராளி ஒருவர் நல்லிணக்கப் பொறிமுறை தொடர்பில் கருத்தறியும் செயலணி முன்பாகத் தோன்றி சாட்சியமளித்துள்ளார். கடந்த வாரம் ஒட்டுசுட்டான் பகுதியில் இடம்

> ❝ போர் இடம்பெற்றபோது தமிழர்கள் அனைவருமே ஏதோ ஒருவகையில் அதில் தொடர்புபட்டிருக்க வேண்டிய நிர்ப்பந்தமொன்று உருவாக்கப்பட்டிருந்தது. இதனால்தான் தமிழர்கள் அனைவருமே புலிகளாகப் பார்க்கப்பட்டனர். ❞

பெற்ற செயலணி அமர்வில் அவர் சாட்சியத்தை வழங்கியுள்ளார். தாம் புனர்வாழ்வு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது தமக்கு இரசாயனம் கலந்த உணவுகள் வழங்கப்பட்டதாகவும், ஊசிகள் போடப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். ஊசி போட்டவுடன் தம்முடன் இருந்த போராளி ஒருவர் உயிரிழந்துவிட்டதாகவும் அவர் அதிர்ச்சித்தகவலை வெளியிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், நான் நூறு கிலோ எடையைத் தூக்கிக் கொண்டு ஓடுமளவுக்கு ஆற்றலைக் கொண்டிருந்தேன். ஆனால் தற்போது என்னால் சிறிய பொருளைக்கூடத் தூக்க முடியவில்லை. அத்துடன் கண்பார்வையும் மங்கிச் செல்கின்றது என்று கூறியுள்ளார். மேலும் தடுப்பூசி போடுவதற்குத் தாம் விரும்பாவிட்டாலும் பலவந்தமாக ஏற்றிச்சென்று தடுப்பூசிகள் போடப்பட்டதாகவும் இராணுவ அதிகாரிகள் இதில் கடுமையாக நடந்து கொண்டனர் எனவும் அவர் தெரிவித்துள்ளமை பாரதூரமான விடயமாகும். இவ்வா றான குற்றச்சாட்டுக்கள் முன்னரும் எழுந்துள்ளன. புலிகளின் முன்னாள் மகளிர் துறைப் பொறுப்பாளர் தமிழினியின் சாவைத் தொடர்ந்து இவை வலுப் பெற்றிருந்தன. இறுதிப்போரின் பின்னர் பல ஆயிரக்கணக்கான போராளிகள் முகாம் களில் தடுத்து வைக்கப் பட்டிருந்தனர். இவர்கள் மத்தியில் காணப்பட்ட போராட்ட உணர்வை மழுங்கடிக்கச் செய்யும் வகையில் பல்வேறு நடவடிக்கை களை முன் னைய அரசு மேற்கொண்டதாகக் குற்றச்சாட் டுக்கள் சுமத் தப்பட்டிருந்தன.

இதேவேளை முன்னாள் போராளிகளின் உடல்நிலை தொடர்பாகப் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு அரசு தயாராக இருப்பதாகவும் உலகத் தரம்வாய்ந்த வைத்தியர்கள் இலங்கையில் உள்ளதாகவும் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். இதன் மூலமாக சர்வதேச வைத்தியர்களின் பிரசன்னத்தை அரசு விரும்பவில்லையென்பது தெளிவாகத் தெரிகின்றது.

இந்த நிலையில் முன்னாள் போராளிகளுக்கு இரசாயனம் கலந்த உணவு வழங்கப்பட்டதையும் சந்தேகத்துக்கிடமான ஊசி ஏற்றப்பட்டதையும் இலங்கை இராணுவம் முற்றாக மறுத்துள்ளது. ஒரு மிருகத்துக்குக்கூட நஞ்சு வைப்பதை இராணுவம் ஏற்றுக் கொள்ளாது எனவும், முன்னாள் போராளிகள் விடயத்தில் தவறான தகவல்களே வழங்கப்பட்டுள்ளதாகவும் இராணுவத்தரப்பினர் தெரிவித்துள்ளனர். இவை இராணுவத்தினரின் வழக்கமான செயல் என்றே கருதமுடிகின்றது. ஆனால் முன்னாள் போராளிகளுக்கு அநீதி இழைக் கப்பட்டமை தொடர்பாக அரசு இனியும் மெத்தனமான இருந்துவிடமுடியாது. மேற்படி குற்றச்சாட்டுக்கள் பொய்யென அரசு கருதுமாயின் அதை நிரூபித்தேயாக வேண்டும். இந்த நாட்டில் வாழ்கின்ற தமிழர்களுக்கு எதிராகக் கடந்த காலங்களில் பல்வேறுவடிவங்களில் இன்னல்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இறுதிப்போரை இதன் உச்சக்கட்டமாகக் கருத முடியும். போர்க்குற்ற விசாரணைகளில் நழுவல் போக்கைக் கடைப்பிடிக்கும் தற்போதைய அரசு, முன்னாள் போராளிகளின் விடயத்தை எவ்வாறு அணுகப்போகின்றது என்பதே தற்போது பிரதான கேள்வியாக உருவெடுத்துள்ளது. இதில் அரசு தவறுமாயின் சர்வதேசத்தின் நல்லெண்ணத்தை முற்றாகவே இழந்துவிடக்கூடிய அபாய நிலை தோன்றிவிடும் என்பதை அது மறந்து விடக்கூடாது.

எதுவுமற்ற ஏதிலிகளாக வாழ்கின்ற முன்னாள் போராளிகளுக்கு மீண்டும் மீண்டும் அநீதி இழைப்பதை நீதி தேவதையும் ஏற்றுக் கொள்ளாது.

# தென்மராட்சி விழா தேவைதானா?

சாவகச்சேரியில் இயங்கும் தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தினர் சர்வதேச நாடுகளில் செயற்படும் அதன் கிளைகளின் உதவியுடன் பல லட்சம் ரூபா செலவில் தென்மராட்சி விழா என்ற பெயரில் விழாவொன்றை நடத்தவுள்ளனர்.

எதற்காக இத்தகையதொரு விழா என்பதே மக்களின் முன்னால் எழுந்துள்ள பிரச்சினையாகும். தென்மராட்சிப் பிரதேச மக்கள் பாரிய இடப் பெயர்வைச் சந்தித்து மீண்டும் தமது சொந்த இருப்பிடங்களுக்கு வந்தபோது தமது வீடுகள், சொத்துக்கள் அழிந்து போயிருந்ததைக் கண்டனர். தமது காணிகளைப் புனரமைக்கப் போதிய நிதி வசதியில்லாமல் அரச நிதிகளை எதிர்பார்த்து இன்றும் காத்திருக்கின்றனர்.

கடந்த 2002 ஆம் ஆண்டு மக்கள் தமது சொந்த இருப்பிடங்களில் மீளக் குடியமர்ந்த வேளையில் கல்விச் சமூகத்தினரை உள்ளடக்கிய பேராசிரியர் க.கந்தசாமி தலைமையில் தென்மராட்சி அபிவிருத்தி கழகம் உருவாக்கப்பட்டது..அந்தக் காலத்தில் அதன் தேவையை உணர்ந்த மக்கள், கழகம் உருவாக்கப்பட்டதை வரவேற்றனர். வெளிநாடுகளிலும் இதன் கிளைகள் அமைக்கப்பட்டு செயற்படுகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டது.

தென்மராட்சி பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்த வறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் திட்டங்களோ போரின் இறுதிக் கட்டத்தில் உயிர்களைக் காவு கொடுத்து, உடைமைகளை இழந்து தமது இருப்பிடங்களுக்கு வந்த மக்களுக்கு இந்தக் கழகம் ஓடிச் சென்ற உதவியதாக தென்மராட்சி வாழ் மக்கள் கேள்விப்பட்டதில்லை.

பல வருடங்களின் முன்னர் வெளிநாடுகளுக்குச் சென்ற பலர் தற்போது இங்குள்ள தமது சொந்த இடங்களுக்கு வருகை தந்துள்ளனர். அவர்களைக் குளிர வைக்கவா இந்த விழா நடத்தப்படுகின்றது.

மாணவ சமுதாயத்திற்காக இந்த விழா நடத்தப்படுவதாயின், வன்னிப் பகுதியில் போர் காரணமாகத் தமது பெற்றோரை இழந்து, அவயவங்களை இழந்த போதிலும், தமது கல்வியை விடாது தொடர்ந்து அயலவர்களின் உதவியுடன் வாழும் மாணவர்களைவிட, தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள விளையாட்டு வீர வீராங்கனைகளும், கலை கலைஞர் களும் கௌரவிக்கப்பட வேண்டியது அவசியம்தானா? வன்னிப் பிரதேசத்தில் எத்தனையோ மாணவர்கள், இளைஞர்கள், யுவதிகள் மாற்றுத் திறனாளிகள் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்த எவ்வளவோ கஷ்டங்களை அனுபவிப்பது இந்த தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்திற்குத் தெரியவில்லையா.?

இந்த விழா தொடர்பாக நடத்தப்படும் கலை கலாசார விளையாட்டுப் போட்டிகளில் முதலிடம் பெறும் வீர வீராங்களைகள், அணிகள் போன்றவற்றுக்கு 50 ஆயிரம் ரூபா பரிசாக வழங்கப்படுமென ஆரம்ப அறிவித்தல்களில் காணக்கூடியதாக இருந்தது. பாடசாலை மாணவர்கள், பாடசாலை அணிகள், விளையாட்டுக் கழக அணிகள், இளைஞர் அணிகள் ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் போட்டிகளுக்கு விண்ணப்பிக்கலாமெனவும் விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

கழகத்தை நடத்துவது பிரதேச கல்விச் சமூகத்தினர் என்பது பிரதேச மக்கள் அறிந்த உண்மை. இந்தக் கல்விச் சமூகத்தினருக்கு பிரதேச பாடசாலைகள், வீர வீராங்கனைகள், விளையாட்டுத்துறையில் காட்டும் அக்கறை, அங்கு காணப்படும் வளப் பற்றாக்குறைகள் போன்றவை தெரியவில்லையா? போட்டிகளில் பங்குபற்றி வெற்றிபெறும் வீர வீராங்கனைகள், கலைஞர்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகைகளை, வளப் பற்றாக்குறை காணப்படும் பாடசாலைகளுக்கு வழங்கி, மாகாண மட்டத்தில் பதக்கங்களை வென்றெடுக்கும் வீர வீராங்கனைகளை ஊக்குவித்து, அவர்கள் தேசிய மட்டத்தில் சாதனைகள் படைக்க உதவுவதை விடுத்து, பெருந் தொகை செலவுசெய்து பரிசில்கள் வழங்குவது அவசியம்தானா என்பது பிரதேச மக்களிடையே தலைதூக்கும் கேள்வியாகும்.

ஒட்டு மொத்தத்தில் வெளிநாடுகளிலிருந்து வந்தவர்களை விருந்தினர்களாக அழைத்துக் கௌரவித்து வெளிநாடுகளில் உள்ள கழகத்தின் கிளைகள் ஊடாக பல்வேறு தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதே இந்தக் கழகத்தின் இலக்கு என்பது வெளிப்படையான உண்மையாகும்.

ஐயன்.

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதவை உடைத்து திறக்கப்பட்டது ஒலிம்பிக் திடல்

பிறெசிலியா, ஓக.6
பூட்டப்பட்டிருந்த ஒலிம்பிக் விளையாட்டுத் திடல், குறடு கொண்டு உடைத்துத் திறக்கப்பட்டமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. பிரேசிலின் மறக்கனா மைதானக் கதவின் ஒரு பகுதியே, ஒருங்கமைப்பாளர்கள் திறப்பைத் தொலைத்ததால் இவ்வாறு திறக்கப்பட்டது. தீயணைப்பு வீரர்கள் இருவர் இணைந்து பூட்டை உடைத்ததை பி.பி.சி. செய்தியாளர் ஒளிப்பதிவு செய்தார்.
கடந்த புதன்கிழமை பெண்கள் கால்பந்துப் போட்டியின்போது இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
இதேவேளை, நீச்சல் வீரர்கள் ஆயிரத்து 400 பேர், றியோவில் உள்ள மோசமான அழுக்கு நீரினால், நோய்வாய்ப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாகவுள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.
முன்னதாக நீச்சல் வீரர்களுக்கு 3 கரண்டி நீரைப் பருக்கக் கொடுத்து பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்போது, வயிறு மற்றும் சுவாச நோயை ஏற் படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் அதில் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. (த-ரி4)



# வெளிநாட்டவர்கள் மீது ஆப்கானிஸ்தானில் சூடு

## 12 பேர் வரை காயம்



காபூல், ஓக.6
ஆப்கானிஸ்தானில் சுற்றுலாப் பயணிகள் தலிபான் போராளிகளின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளனர்.
நேற்று முன்தினம், ஹிரட் மாகாணத்தில் இராணுவத்தினரின் பாதுகாப்புடன் பயணித்த 8 பிரிட்டன் நாட்டவர்கள், 3 அமெரிக்கர்கள், ஒரு ஜேர்மனியர் உட்பட 12 பேரே இந்தத் தாக்குதலில் காயமடைந்தவர்களாவர்.
ஹிராட் மாகாண ஆளுநரின் ஊடகப் பேச்சாளர் தெரிவிக்கையில், காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்-என்றார்.
ஆனால் தலிபான் ஊடகப் பேச்சாளர் கூறுகையில்,
வெளிநாட்டவர்கள் சிலர் சுட்டுக் கொல்லப்பட்டதுடன், 7 இராணுவத்தினரைப் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்துள்ளோம்-என்றார்.
பமியன் மாகாணத்தில் இருந்து, ஹிராட்டுக்குப் பயணிக்கும்போது இந்தத் தாக்குதல் இடம்பெற்றதாக உள்துறை அமைச்சு தகவல் வெளி யிட்டுள்ளது.
பிரிட்டன் தூதரக ஊடகப் பேச்சாளர் குறிப்பிடுகையில்,
தாக்குதல் தொடர்பில் எமது நாட்டவரின் நிலமை குறித்து ஆராய்கிறோம்-என்றார். ஜேர்மன் பிரஜை காயங்களுக்கு உள்ளாகவில்லை என ஜேர்மன் தூதரகம் தெரிவித்துள்ளது.
ஆப்கானுக்கு தமது நாட்டவர்கள் சுற்றுலாப் பயணம் மேற்கொள்வது குறித்து மேற்குலக நாடுகள் எச்சரிக்கை விடுத்துள்ளன. (த-ரி4)

# சிரியாவில்

# ஏற்பட ஐ.ந

## மக்களுக்கான மனிதாபி



டமஸ்கஸ், ஓக.6
சிரியாவில் இடம்பெறும் போரைத் தற்காலிகமாக இடைநிறுத்தி மனிதாபிமான உதவிகளை மேற்கொள்வதற்கு ஐ.நா. முயன்று வருகின்றது.
எதிர்வரும் சில தினங்களுக்குப் போரைக் கட்டுப்படுத்துவதன் மூலம், நெருக்கடியில் உள்ள மக்களைச் சந்திப்பதற்கான ஒப்பந்தம் மேற்கொள் ளப்படவுள்ளது.
கிழக்கு அலெப்போவில் உள்ள போராளிகளுக்கு எதிராக, சிரிய-ரஷ்ய, ஈரானியப் படைகள் கடும் தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றன.
இந்த நிலையில் புதிய சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்க ரஷ்ய-அமெரிக்கத் தரப்பு கடும் முயற்சி எடுத்து வருகின்றது.
ஐ.நாவின் இந்த முயற்சி வெற்றியளிக்கும் என் எதிர்பார்க்கப்படுவதாக, சிரியா

**“சிரியாவின் சனத் தொகை மாறாமல் உள்ளது. சர்வதேச சட்டங்களுக்குட்பட்ட விதத்தில் அங்குள்ள மக்களுக்கு உதவி வழங்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். ஐ.நாவுக்கான ஆலோசகர் ஜான் எக்லான்ட் தெரிவிக்கையில், 2 லட்சத்து 50 ஆயிரம் மக்கள் அலெப்போவில் வசிக்கின்றனர்.”**

# உலகின் மிகப் பெரிய ஹோட்டல் சவூதியில்

ரியாத், ஓக.6
உலகின் மிகப் பெரிய ஹோட்டல் சவூதி அரேபியாவில் திறக்கப்படவுள்ளது. ஒவ்வொரு வருடமும் 15 மில்லியனுக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் சவூதி அரேபியாவுக்கு வருகின்றனர். குறிப்பாகச் சவூதியில் உள்ள மெக்காவைத் தரிசிக்கப் படையெடுக்கும் யாத்திரிகர்களைக் கருத்தில் கொண்டு மெக்காவுக்கு அருகில் இந்த ஹோட்டல் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
1.4 மில்லியன் சதுர மீற்றர் பரப்பளவுடைய இந்தக் கட்டடம், 3.5 பில்லியன் டொலர் செலவில் உருவாக்கப்பட்டுள்ளது. அப்ராஜ் குடாய் என்ற இந்த ஹோட்டலின் ஒரு பகுதி நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளன. 10 ஆயிரம் அறைகளையும், 70 க்கும் மேற்பட்ட விடுதிகளையும் குறித்த கட்டடம் உள்ளடக்கியுள்ளது.
ஒரு நகரின் ஒட்டு மொத்த சொகுசு வசதிகளையும் இது உள்ளடக்கியுள்ளது. சவூதியின் அரச குடும்பங்கள் இங்குள்ள ஹெலி இறங்குதளத்தை உள்ளடக்கிய 5 மாடிகளைத் தமக்கு முன்பதிவு செய்துள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.
அப்ராஜ் குடாய் அடுத்த வருடத்தில் திறக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (த-ரி4)





குவாட்டமாலாவில் பெய்துவரும் கனமழையினால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட
மடைந்துள்ளது. இதனை அடுத்து, அந்த நாட்டு மீட்புப் படையினர் பொதுமக்களைப் பாதுகாக்

# பெண்ணியவாதிய



வொஷிங்ரன், ஓக.6
நான் ஒரு பெண்ணியவாதி என அமெரிக்க ஜனாதிபதி பாரக் ஒபாமா தெரிவித்தார்.
நேற்று முன்தினம் ஒபாமா தனது 55ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு வெளியிட்ட செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவித்தார்.
பாலின அடிப்படையில் உள்ள தடைகளை உடைத்துப் பெண்களுக்கான உரிமைகள் வழங்கப்படவேண்டும் என அவர் இதில் வலியுறுத்திக் கூறியுள்ளார்.
இவற்றை ஜனாதிபதியாக மட்டுமல்ல பெண்ணியவாதியாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ல் போர்நிறுத்தம்
# நா. தீவிர முயற்சி

## ாபிமான உதவிகளை வழங்குவதற்காக



தாமதமாகியுள்ளன. இந்த நிலையில் பொதுமக்களுக்கான உதவிகளை மேற்கொள்ள, துரித கதியில் செயற்பட நாம் தயாராகவுள்ளோம்.

ஐ.நா. அலெப்போவில் உள்ள மக்களை வெளியேற்ற முயற்சிப்பதாக ரஷ்யா தவறாகப் புரிந்து கொண்டுள்ளது.

சிரியாவின் சனத்தொகை மாறாமல் உள்ளது. சர்வதேச சட்டங்களுக்குட்பட்ட விதத்தில் அங்குள்ள மக்களுக்கு உதவி வழங்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

வுக்கான ஐ.நா. துணைத் தூதுவர் ரம்சி எசல்டின் தெரிவித்தார்.

அத்துடன், சமாதானப் பேச்சு தொடர்பில் அமெரிக்க - ரஷ்யத் தரப்பினர் சிரி யாவுடன் பேச்சு நடத்தி வருவதாகவும், இம்மாத இறுதியில் இவற்றுக்கான சாத்தியக் கூறுகள் இருப் பதாகவும் அவர் கூறி னார்.

அலெப்போவில் அதிகரிக்கும் இராணுவ ஆக்கிரமிப்பால், மனிதாபிமான உதவிகள்

ஐ.நாவுக்கான ஆலோசகர் ஜான் எக்லான்ட் தெரிவிக்கையில், 2 லட்சத்து 50 ஆயிரம் மக்கள் அலெப்போவில் வசிக்கின்றனர்.

அவர்களுக்கான உதவிகளை வழங்குவதே எமது நோக்கம். போரை இடைநிறுத்துவது தொடர்பான நடவடிக்கையை நாம் மேற்கொள்கின்றோம்- என்றார். (த-ரி4)

# ஐ.எஸ். அமைப்பு தலைவர் சீனாய் பகுதியில் கொலை

## எகிப்து இராணுவம் அறிவிப்பு

கெய்ரோ, ஓக.6


சீனாய் பகுதியில் ஐ.எஸ். அமைப்பின் தலைவராகத் திகழ்ந்த அபு டுவா அல்- அன்சாரி, எகிப்து இராணுவத்தினால் கொல்லப்பட்டார் என எகிப்து இராணுவத் தகவல்கள் தெரிவித்தன.

சீனாய்க்குப் பொறுப்பான தலைவருடன் இருந்த, ஏனைய சகாக்களும் வான்வழித் தாக்குதலில் கொல்லப்பட்டதாக இராணுவத்தினர் நேற்று முன்தினம் விடுத்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் ஐ.எஸ். அமைப்பினர் வசம் இருந்து வெடிபொருள்கள், ஆயுதங்கள் என்பன அழிக்கப்பட்டன என்றும், இந்தத் தாக்குதல் நடவடிக்கையில் 45 போராளிகள் உயிரிழந்தனர் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

அன்சாரி கொல்லப்பட்டமையை இராணுவம் எவ்வாறு உறுதிப்படுத்தியது என்பது குறித்து விவரம் வெளியாகவில்லை.

2011 ஆம் ஆண்டில் இருந்து சீனாய் பகுதியில் ஐ.எஸ். அமைப்பினர் செயற்பட ஆரம்பித்தனர். இந்த நிலையில் அன்சாரியின் ஐ.எஸ். பெயரும், உண்மையான பெயரும் பல ஊடகங்களில் குழப்பத்தை எற்படுத்தியமை குறிப்பிடத்தக்கதாகும். (த-ரி4)



# பிரம்மாண்ட ஆய்வு கூடத்தை நிறுவியது பேஸ்புக் நிறுவனம்

வொஷிங்ரன், ஓக.6

உலக சமூக வலைத்தளமான பேஸ்புக், தனது புதுமையான, பிரம்மாண்டமான ஆய்வு கூடத்தை நிறுவியுள்ளது என பேஸ்புக் நிறுவுநர் மார்க் சூக்கர் பேக் தெரிவித்தார்.

கால்பந்து மைதானத்தின் அரைவாசி அளவில் உள்ள ஆய்வு கூடம் சூரிய சக்தியில் இயங்கத்தக்கதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

கடந்த 10 வருடங்களில் இல்லாத அளவுக்குப் புதுமையும், தொழில்நுட்பமும் புகுத்தப்பட்டு இது உருவாக்கப்பட்டுள்ளது. இராட்சத சாதனங்கள், இயங்கு கருவிகள், தரவு சேகரிப்புக் கருவிகள் இணைக்கப்பட்டதுடன், பேஸ்புக்கில் ஏற்படும் கோளாறுகளைத் துரிதகதியில் நிவர்த்தியாக்கும் விதத்தில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் உயர்தர வைரஸ் காட்டிகள் இதில் பொருத்தப்பட்டுள்ளன. குறித்த ஆய்வு கூடத்தில், பல பொறியியலாளர்கள் குழுக்களாக இயங்கவுள்ளனர் என மார்க் தனது பேஸ்புக் பக்கத்தில் தெரிவித்தார். (த-ரி4)





க்கப்பட்டுள்ளது. மென்கோர் டி மென்கொஸ் பகுதியில் உள்ள பாலம் ஒன்று கடும் மழையினால் சேத
துகாக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். (த-ரி4)

# பானார் அமெ. ஜனாதிபதி ஒபாமா



தெரிவிப்பதாகவும், பெண்கள் மீதான தடைகளைத் தளர்த்துவதற்கு அடிப்படை மாற்றம் முதலில் எமக்குள் நிகழவேண்டும் எனவும், அதனால்தான் பெண்கள் தமது முன்னேற்றத்தை உறுதி செய்ய முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பெண்கள் மீது சமூகம் தொன்றுதொட்டு நோக்கிய பார்வையை விலக்கி கலாசார ரீதியில் ஆரோக்கிய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். பெண் பிள்ளைகளின் நடத்தையில், சிந்தனைகளில் அழுத்தத்தை ஏற்படுவதைத் தவிர்க்கவேண்டும்.

பெண்கள் பொறுமையாக இருக்க வேண்டும். ஆண்கள் உறுதியாக இருக்க வேண்டும் என்ற மனோநிலையை மாற்றியமைக்கவேண்டும். மகன்களுக்குக் கொடுக்கும் அதே அளவு ... யத்தை உங்கள் பெண் பிள்ளைகளுக்கு கொடுங்கள்-என்று ஒபாமா மேலும் கூறியுள்ளார். இந்தக் கருத்துக்கள், அவரது இரு மகள்களுக்கும் மகிழ்ச்சியையும், ஆச்சரியத்தையும் கொடுத்துள்ளன. (த-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு வியாழ மாற்றம் எப்படி?

குருப் பெயர்ச்சி, ஒகஸ்ட் 2ஆம் திகதி, தமிழுக்கு ஆடி 18 ,ஆடி அமாவாசை சுவடிய நன்னாளில் காலை 9.24 மணிக்கு சிம்ம ராசியில் இருந்து கன்னி ராசிக்கு குரு மாறுவதால் ஏற்படுகிறது. கன்னி ராசிக்கு மாறும் குரு உங்கள் ராசிக்கு எந்த இடத்தில் இருக்கிறார். அதனால் உங்கள் ராசிப்படி உங்களுக்கு ஏற்படும் நன்மை–தீமைகளைப் பற்றிப் பார்ப்போம். அதிக ஆதாயம் அடையும் ராசியினர் – இடபம், சிம்மம், விருச்சிகம், மகரம், மீனம் இவர்கள் ராசிக்கு குரு 2,5,7,9,11 என முழு சுப பார்வை செலுத்துவதால் இந்த ராசியினருக்கு அதிக நன்மைகள் கிடைக்கும்.

## கடகம்

### புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம் வரை



அரசியல் மற்றும் பொது நலத்தில் இருப்பவர்கள், நீண்ட நாள்களாக எதிர்பார்த்த பதவியை பிடிப் பார்கள். நிறைவேறாத காரியங்களை, கடவுளை வணங்குவதன் மூலமாக நிறைவேற்றிக் கொள்வீர்கள். பரிகார ஸ்தலங்களைத் தேர்ந் தெடுத்து அதற்குரிய பரிகாரங்களைச் செய்தால் பிரச்சினைகள் விலகும்.

6, 9க்கு அதிபதியாக குரு விளங்குவதால், மறை முக எதிர்ப்புகளை முறியடிப்பீர்கள். பணிபுரியும் இடத்தில் பலரது எதிர்ப்புகளையும் தேடிக்கொண்ட நீங்கள், இப்பொழுது எதிரிகளை வெல்லும் வல்ல மையைப் பெறுவீர்கள். விலகிச்சென்ற சொந்தங் கள் விரும்பி வந்து சேரும்.

எதிர்பார்த்த உத்தியோகம் கிடைக்கும். வீடு கட்ட, கார் வாங்க, கடனுதவி கேட்டு விண்ணப்பித்தி ருப்பவர்களுக்கு வங்கிகளின் ஒத்துழைப்புக் கிடைக்கும். அலுவலகம் சார்ந்த அனு கூலமும் உண்டு. பழைய கடன்களை திருப்பிச் செலுத்தும் நேரம் இது. ஆரோக்கியத் தொல்லைகள் குறை யும். சொத்துத் தகராறு அகலும். பங்காளிப் பகை மாறும். இதுவரை போராடி வெற்றி பெற்ற நீங்கள், இனி போராடாமலேயே வெற்றி பெறுவீர்கள்.

**குரு பார்வை கொடுக்கும் பலன்கள்!**

நவக்கிரகங்களில் சுபகிரகம் என்று வர்ணிக்கப்படும் குரு, இப்பொழுது 2ஆம் இடத்திலிருந்து 3ம் இடத்துக் குச் செல்கிறார். அங்கிருந்து கொண்டு 7,9,11 ஆகிய இடங்களைப் பார்க்கிறார். அதன் பார்வை பட்டதும் அந்த இடங்களெல்லாம் புனிதமடைகின்றன. இதையடுத்து திருமண வாய்ப்பு கைகூடவில்லையே என்று ஏங்கியவர்களுக்கு திருப்தியான வரன் வந்து சேரும். விட்டுப்போன வரன்கள் கூட மீண்டும் வரலாம். பிரிந்த தம்பதியர்களின் பிரச்சினைகளில் தீர்வு காணப்படும். தூர தேசத்திலிருந்து வரும் செய்திகள் உங்கள் துயரங்களுக்கு வடிகாலாக இருக்கும். வீடு, மனை வாங்கும் திட்டம் நிறைவேறும். விருந்தினர் வருகை உண்டு. வீட்டில் சுப நிகழ்ச்சிகள் தொடர்ச்சியாக நடைபெறும் வாய்ப்பு உள்ளது.

ஒன்பதாமிடத்தைக் குரு பார்ப்பதால் பொன், பொருள்கள் பெருகும். போட்ட திட்டங்கள் நிறை வேறும். அன்பு நண்பர்கள் உங்கள் அருகிலிருந்து வளர்ச்சிக்கு வழிகாட்டுவர். நடக்காது என்று நினைத் திருந்த காரியங்கள் கூட நடப்பது கண்டு ஆச்சரியப் படுவீர்கள். பெற்றோர்களால் சகல நன்மைகளும் கிடைக்கும். லாப ஸ்தானத்தை குரு பார்ப்பதால் பொருளாதார வளர்ச்சி மேலோங்கும். திருப் பணிக்கும், அறப்பணிக்கும் அள்ளிக் கொடுக்கும் விதத்தில் செல்வச் செழிப்பை காண்பீர்கள். செய்த முயற்சிகளுக்குத் திருப்தியான பலன் கிடைக்கும்.

குரு, சூரிய சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (2.8.2016 முதல் 19.9.2016 வரை): தனவரவு தாராளமாக வந்து கொண்டேயிருக்கும். மன மகிழ்ச்சி தரும் விதத்தில் குடும்பத்தில் நல்ல காரி யங்கள் நடைபெறும்.

வியாபாரப் போட்டிகள் அகலும். வியாபாரத்தை விரிவு செய்ய வேண்டுமென்று நினைப்பீர்கள். கிளைத் தொழில் தொடங்கும் வாய்ப்பு கைகூடி வரும். உத்தியோகத்தில் உள்ளவர்கள், பகுதிநேர தொழில் ஏதாவது தொடங்குவர். அரசியல்வாதி களால் அனுகூலம் கிடைக்கும். செல்வாக்கு மேலோங்கும்.

*(தொடரும்)*



# வார்த்தைப் பிரயோகத்தில் அவதானம் வேண்டும்

சி.நற்குணலிங்கம்

ஒவ்வொருவருக்கும் உடல் நலம் எவ்வளவு முக்கியமோ அதே போல் மனநலமும் முக்கிய மானதாகும். மனநலத்தைப் பாதுகாக்க பலவழிகள் உள்ள போதும் அவற்றுள் சிறந்தது வார்த்தை களைக் கையாளும் முறை. கூரிய வாளை விட எமது வாயிலிருந்து வெளி வருகின்ற வார்த்தைகளுக்கு வலிமை அதிகம். வாழ்வின் மகிழ்வுக்கு உறவின் பலத்துக்கு அன்பான சொல்லாடல் அவசியமானதாகும். எமது நாவிலிருந்து வெளிவரும் ஒரு வார்த்தைகூட மிகப் பெரிய எதிர்விளைவை ஏற்படுத்தவல் லது. இதனால்தான் எமது முன்னோர்கள் நாகாக்க, எனக் கூறிவைத்துள்ளனர்.

நாவால் கெட்டழிந்தவர்கள் பலர், முன்பின் சிந்திக்காத வார்த்தைகளை அள்ளி வீசும்போது வேதனைகளை அள்ளி வீசுவதாக எண்ணுவதில்லை. வார்த்தைகளைக் கொட்டிய பின்னர் வருந்துவதால் எந்தப் பயனும் இல்லை. மனதுக்கு இதமளிக்கும் வார்த்தைகளைப் பேசுவதால் கேட்பவரின் துன்பங்கள் கவலைகள் நீங்கிவிடும். மனஅமைதியை ஆறுதல் வார்த்தைகளே வழங்கக்கூடிய வல்லமை கொண்டவை. மற்றவர் களுக்கு ஆறுதல் அளிக்கும் விதத்தில் நடந்து கொள் வதே உயர்ந்த பண்பாகும்.

மனைவிகூடத் தனது கணவனின் அன்பான வார்த்தை களுக்காகவே எப்போதும் காத்திருப்பாள். அன்றாட வேலைப்பளு, கவலைகள், மன அழுத்தங்கள் யாவும் அவ்வார்த்தைகளால் அமைதியடைந்துவிடும். வீட்டில் பிள்ளைளுடன் அன்பான வார்த்தைகள் கூறி மகிழ் வோமாக இருந்தால் பிள்ளையின் மனம் மகிழ்ச்சி யடைந்து எதிர்காலம் ஒளிமயமாகும். அலுவலகங்களில் மேலதிகாரிகள் தமக்குக்கீழ் பணிபுரியும் ஊழியர்களை பணி நிமித்தம் பாராட்டுவார்களாயின் பணிகள் சிறக்கும், அலுவலகம் முன்னேற்றம் காணும். அன் பான ஆறுதலான வார்த்தைகளுக்கு ஏங்கித் தவிக்கும் முதியோர்களுடன் இவ்வாறான வார்த்தைகளை பயன்படுத்துவதன் மூலம் அவர்கள் ஆறுதல் அடை வார்கள். பொதுவாக எம்மால் ஏனையோருக்கு உதவி செய்ய முடியுமோ இல்லையோ ஆனால் நிச்சயமாக ஆறுதல் வார்த்தைகளைக்கூறி அவர்களின் உள்ளக் குமுறல்களை வேதனைகளைக் குறைக்கமுடியும்.

நாம் எப்போதும் இதமான வார்த்தைகளை பயன்படுத்தும் வகையில் நடந்து கொள்வதன் மூலம் மற்றவர்கள் எம்மை விரும்பி ஏற்றுக்கொள்ளும் நிலை உருவாகும். இவ்வாறில்லாது கடினமான வார்த்தைகளைப் பாவிப் போமாயிருந்தால் காலப் போக்கில் மற்றவர்களிடமிருந்து தனிமைப்படுத்தப்பட்டுவிடுவோம். இன்றைய சமுதாயப் போக்கிலே பெரும்பாலானவர்கள் விரக்தியின் மத்தியி லேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். எனவே இவர் களிடமிருந்து வரும் வார்த்தைகள் மரியாதைக் குறை வானதாகவும் மதிப்பற்றதாகவும் காணப்படுகின்றன. வாயால் வார்த்தை களை வெளியிடும் போது நாம் மிகவும் அவதானத்துடன் நடந்துகொள்ளவேண்டும். இதமான வார்த்தைகளால் மற்றவர்களது இத யத்தை கொள்ளை கொள்ள வேண்டும். சிலர் எப்போதும் மற்றவர்களைக் குறை கூறுவதாகவும் கேலி செய்வதாகவும் நடந்துகொள்வர். இவர்களது நாவிலே சனி குடிகொண்டுள்ளதாக விமர்சிப்பார் கள். இது அவர்களுக்குப் புரிவதில்லை. இவர்களின் இத்தகைய வார்த்தைப் பயன்பாட்டு நிரந்தரமான எதிரிகளை இவர்களுக்கு சேர்த்துவைக்கும். பிரச்சி னைகள் ஏதுமிருப்பின் பேசித்தீர்த்துக் கொள்ளலாம். அதைவிடுத்து மனம் போன போக்கில் பேசுவது ஏற்றுக் கொள்ள முடியாதது. வெளியே கொட் டிய வார்த்தைகளை எம்மால் ஒரு போதுமே திரும்பவும் பொறுக்கி எடுக்கமுடியாது. இயற்கை எமக்கு வழங்கிய உறுப்பை அவதானமாகப் பயன்படுத்துவது எமது கடமையாகும். தன்னை எல் லாவிதத்திலும் அடக்கப் பழகியவன் வெளியிலுள்ள எதற்கும் வசப்படுவதில்லை என விவேகானந்தர் கூறியுள்ளார்.


மிதமான வார்த்தை மனிதனை மேன்மையுறச் செய் யும். நீ சொல்லப்போகும் வார்த்தை மௌனத்தைவிட சிறந்ததென்று திடமாகத் தெரியும்வரை வாயைத் திற வாதே என்பதைப் புரிந்து நடந்துகொள்ளவேண்டும். தனியாக இருக்கும்போது சிந்தனையிலும், கூட்டத்தில் இருக்கும் போது வார்த்தையிலும் கவனமாக இருக்க வேண்டும். கோபமாகப் பேசினால் குணத்தை இழப் பாய், அதிகமாகப் பேசினால் அமைதியை இழப்பாய் என்பதை மனதில் நிறுத்தி வாயைத் திறக்க வேண்டும்.

அவற்றைக் கவனித்தால் ஊரோடு சேர்ந்திருக்க உறவோடு மகிழ்ந்திருக்க மக்களோடு உறவாட சமு தாயத்தோடு தோழமை கொள்ள உதவியாக இருக்கும். வாழ்வும் முழுமைபெறும். பிறருடன் ஒருவர் எப்படி உரையாடவேண்டும் என்பதைப் பலரும் புரியாமல் எந்த இடத்தில் எப்படி உரையாடவேண்டும் என்ப தையும் புரியாமல் யாருடன் எப்படிப் பேசுவது என் பதைப் புரியாமலும் வார்த்தைகளை பயன்படுத்து வதால் இன்று எல்லா விடயங்களிலும் வெற்றியை விட தோல்விகளைத்தான் தழுவ முடிகின்றது.

# சாதனைகள் பலவற்றை நிகழ்த்திய மாவீரன் ஆழிக்குமரன் ஆனந்தன்

## இன்று அவரது 32 ஆவது நினைவு தினம்

மு.ஈழத்தமிழ்மணி



> ஆழிக்குமரன் ஆனந்தன் நட்புக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர். மனிதாபிமானத்துடன் பழகியவர் சாதனைகளைப் படைத்தவர். ஏழு சாதனைகளை கின்னஸ் புத்தகத்தில் பதிவு செய்து வரலாற்று நாயகனாக உயர்ந்து நின்றார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 1961–1964 இல் சட்டக்கல்வி பயிலும் காலகட்டத்தில் பேராதனை வளாகத்தில் கதாநாயகனாகவே விளங்கினார். மூன்று மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றிருந்தார்.தமிழ் சிங்கள, முஸ்லிம் மக்களின் நன்மதிப்பைப் பெற்றிருந்தார்.

'அச்சம் என்பது மடமையடா, அஞ்சாமை திராவிடர் உரிமையடா ஆறிலும்சாவு நூறிலும்சாவு' என்பதையே இலட்சியமாகக் கொண்டு இருபத்தைந்து உலக சாதனைகளைப் படைத்த ஒரு தமிழ் வீரனான ஆழிக்குமரன் ஆனந்தனின் முப்பத்திரண்டாவது நினைவு தினம் இன்றாகும்.

வடமராட்சி வல்வெட்டித்துறைப் பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் ஒரு காலத்தில் படகு வாணிபத்துக்கும், வீரத்துக்கும்,பெயர் பெற்றவர்களாகவே இருந்துள்ளனர். வல்வெட்டித்துறை மண் பல போராளிகள், தலைவர்களை உருவாக்கிய இடமாகும். ஆயுதப்போராட்டத் தலைவர்களுக்கும் சொந்த மண்ணாகும். இப்படிப்பட்ட பெருமை மிக்க மண்ணானது பல தியாக வரலாறுகளையும் படைத்திருக்கின்றது. செல்வக்குமார் ஆனந்தன் இள வயதிலேயே இலங்கையின் புகழ் பெற்ற கண்டி பேராதனை பல்கலைக் கழகத்தில் நுழைந்து சட்டக்கல்வியை கற்றுக்கொண்டார்.1961ஆம் ஆண்டில் சட்டக்கல்லூரிக்குத் தெரிவு செய்யப்பட்டபோது சாதனைகளைப் படைத்து தமிழினத்துக்கும் இலங்கை நாட்டுக்கும் பெருமை சேர்த்திட எண்ணினார்.

காலஞ்சென்ற பிரதம நீதியரசராகப் பதவி வகித்தவரான சர்வானந்தாவின், யூனியராக ஆழிக்குமரன்ஆனந்தன் பணியாற்றினார். நீதிமன்றம் சென்று சட்டத்தரணி தொழிலைச் செய்வதை விட பல சாதனைகள் செய்ய வேண்டும் என்ற நோக்கமே ஆனந்தன்மீது மேலிட்டுக் காணப்பட்டது. முதல் சாதனையாக 1964ஆம் ஆண்டுக்கு முன்னர் இலங்கையையும் இந்தியாவையும் பிரிக்கும் பாக்கு நீரிணையை நீந்திக்கடந்தார்.

பின்பு பாக்கு நீரினையை அங்குமிங்குமாக ஒரே முறையில் நீந்திக்கடந்து உலக சாதனையை நிலைநாட்டினார். தலைமன்னாரில் இருந்து தனுஷ்கோடிக்கும் தனுஷ்கோடியில் இருந்து தலைமன்னாருக்கும் நீந்திய சாதனை ஆழிக்குமரனின் முதற்சாதனையாகும். கொழும்பு தலைநகரில் 1979ஆம் ஆண்டு 187 மணி நேரம் இடைவிடாது 1487 மைல்கள் சைக்கிள் ஓடி உலக சாதனை படைத்து வெற்றி வீரராகத் திகழ்ந்தார். அதே ஆண்டான 1979 ஆம் ஆண்டில் கொழும்பில் 136 மணிநேரம் தொடர்ச்சியாகபோல் பஞ்சிங் செய்து உலக சாதனையை நிலைநாட்டினார்.

1980 ஆம் ஆண்டில் 33 மணி நேரம் ஒற்றைக்காலில் அசையாமல் நின்று அதிலும் உலக சாதனையைப் படைத்திருந்தார். அதே ஆண்டில் 165 தடவைகள் இருந்து எழும்பி மற்றொரு சாதனையை புரிந்திருந்தார்.(High kicks)ஹை கிக்ஸ் என்றொரு சாதனையை 1980 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் 9100 தடவை செய்து கொண்ட ஆழிக்குமரன் ஆனந்தன் சாதனைப் பட்டியலில் மேலும் மேலும் தன்னைப்பதிவு செய்து கொண்டார்.

மகாகவி சுப்பிரமணிய பாரதி பாடிய 'உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை அச்சமில்லை அச்சம் என்பதில்லையே' என்பதற்கமைய மற்றுமொரு சாதனையைப் படைக்க வேண்டுமென முடிவெடுத்திருந்தார். இலங்கைக்கு வெளியே ஒரு சாதனையை நிலைநாட்ட வேண்டுமென்ற எண்ணம் ஈடேற 1981ஆம் ஆண்டு ஜுலை மாதம் இந்தியாவிலுள்ள தமிழ்நாடு மாநிலத்தில் முதலமைச்சராக காலஞ்சென்ற எம்.ஜி.ஆர் முதலமைச்சராக பதவியிலிருந்தபோது சென்னை அண்ணா நீச்சல் தடாகத்தில் தொடர்ச்சியாக எண்பது மணிநேரம் தவளை போல் வாழ்ந்து (Treading in water)தமிழக மண்ணில் சாதனை செய்திருந்தார்.

ஆழிக்குமரன் ஆனந்தனின் ஏழு சாதனைகள் கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற்றிருப்பதே பெரும் சாதனையாகும். இன்னும் பல சாதனைகளைச் செய்ய வேண்டுமென்ற வெறியுடன் அதற்காக ஆனந்தன் உழைத்துக் கொண்டார். இலங்கை மக்களின் பாராட்டுதலையும் மதிப்பையும் பெற்றிருந்ததுடன் கின்னஸ் புத்தகத்தில் இடம்பெறாவிட்டாலும் மேலும் பல சாதனைகளை தமிழகத்திலும் இலங்கையிலும் சளைக்காது தொடர்ந்தார்.

1978 ஆம் ஆண்டு கொழும்பில் டுவிஸ்ட் நடனத்தை 128 மணி நேரம் இடைவிடாது ஆடி இலங்கை மக்களின் பாராட்டைப் பெற்றுக் கொண்டதுடன் மக்களின் மனதிலும் இடம்பிடித்துக் கொண்டார். எழுபது இறாத்தல் எடையுள்ள இரும்பை இரண்டாயிரம் தடவைகள் கீழேயிருந்து மேலே தூக்கி பெருமை சேர்த்தார். மீண்டும் ஒற்றைக் காலில் 130 இறாத்தல் இரும்பைத் தோளில் சுமந்து கொண்டு நிற்கின்றதொரு சாதனையைப் படைத்தார்.

யாழ்ப்பாண மண்ணிலே சாதனை ஒன்றை நிலைநாட்ட அவர் விரும்பினார். 1983 ஆம் ஆண்டு 22 அவுன்ஸ் நிறையுடைய பிலியட் பொல்லை 2520 தடவைகள் உயர்த்தி சாதனையைப் புரிந்திருந்தார். மீண்டும் தமிழகம் சென்ற ஆழிக்குமரன் ஆனந்தன் தொடர்ச்சியாக நடந்து சாதனை புரிந்தார். சென்னை வீதிகளில் 149 மணி நேரமாக இரவு பகல் பாராது நடந்து தமிழக மக்களினதும் தமிழகத்தின் அரசியல் தலைவர்களினதும் பாராட்டுக்களைப் பெற்று கௌரவிக்கப்பட்டார்.

ஆழிக்குமரன் ஆனந்தன் நட்புக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர். மனிதாபிமானத்துடன் பழகியவர் சாதனைகளைப் படைத்தவர். ஏழு சாதனைகளை கின்னஸ் புத்தகத்தில் பதிவு செய்து வரலாற்று நாயகனாக உயர்ந்து நின்றார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 1961 - 1964 இல் சட்டக்கல்வி பயிலும் காலகட்டத்தில் பேராதனை வளாகத்தில் கதாநாயகனாகவே விளங்கினார். மூன்று மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றிருந்தார்.தமிழ்,சிங்கள முஸ்லிம் மக்களின் நன்மதிப்பைப் பெற்றிருந்தார். விளையாட்டு வீரனாகவும் பாடுவதில் வல்லவனாகவும் விவாத அரங்குகளில் எதிர்ப்பக்கத்தில் உள்ளவர்களை பந்தாடுபவரை எல்லோருக்கும் உதவ வேண்டும் என்ற இரக்க சிந்தனை கொண்டவரை நட்புக்கு இலக்கணமானவரை பேராதனைப் பல்கலைக்கழக பேராசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள் என பல்துறை சார்ந்த அனைத்துப் பல்கலைக்கழக சமுதாயமே அவரை அறிந்து கொண்டது.

தமிழ்மொழியிலும் பற்றுக் கொண்டிருந்த ஆழிக்குமரன் ஆனந்தன் தமிழன் தொன்மையிலும் இனிமையிலும் அதன் பெருமையிலும் தன்னைத் திளைக்க வைத்தார். பல பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஆழிக்குமரன் ஆனந்தன் முன்மாதிரியாகத்திகழ்ந்தான். அவரது பழக்க வழக்கங்கள் யாவும் மேன்மையானதாக இருந்தன.

இவரது சகோதரி ஒருவர் நடனத்துறையில் பேரும் புகழும் பெற்றதொரு மாபெரும் கலைஞராவார். குச்சுப்பிடி நடனத்தில் பாண்டித்தியம் பெற்றிருந்தார். தமிழகத்தின் இன்று முதலமைச்சராகவுள்ள ஜெ.ஜெயலலிதாவுக்கு குச்சுப்பிடி நடனத்தை ஆழிக்குமரனின் தங்கையே அக்காலத்தில் கற்றுக் கொடுத்திருந்தார்.

கடலிலே நீச்சலடித்துச் சாதனை படைத்து ஈழத்தமிழருக்குப் பெருமை சேர்த்திருந்த ஆழிக்குமரன் ஆனந்தன் மேலும் ஒரு பெரும் சாதனையை ஐரோப்பியக்கடலில் செய்வதற்குப் பேராவல் கொண்டிருந்தார். ஆங்கிலக் கால்வாயை நீந்தி வெற்றிக்கொடி நாட்டுவேன் என்ற எண்ணம் அவரது வாழ்க்கையில் முதன்முதலாக ஏற்பட்டிருந்தது. 1984 ஓகஸ்ட் மாத ஆரம்பத்தில் ஆங்கிலக்கால்வாயை நீந்தும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது சமுத்திரத்துக்குள் தனது வாழ்வு சங்கமமாகப் போகின்றது என்று கூட நினைத்துப் பார்த்திருக்க முடியாதவாறு முன்வைத்த காலைப் பின்வைக்க மாட்டேன் என்ற அந்தக் கனவோடு நீந்துகின்ற முயற்சியில் ஈடுபட்டு 1984 ஆம் ஆண்டு அன்று தன்னுயிரை நீத்துக் கொண்டார்.

41 ஆவது வயதில் இறுதியில் நினைத்த சாதனையை நிறைவடையும் முன்னர் கடலிலே தன் வாழ்வை முடித்துக் கொண்டாலும் அவருடைய சாதனைகள் யாவும் இன்றுவரையில் வேறு எவராலும்நிகழ்த்தப்படவில்லைஎன்பதேயுண்மையாகும். ஆழிக்குமரன் ஆனந்தன் புரிந்த சாதனைகள் ஒவ்வொன்றும் போற்றக்கூடியனவாக இருந்தன. தமிழ் மக்களின் ஆதரவு பெற்ற சாதனையாளனான இவர் தமிழுக்கும் தமிழினத்துக்கும் தான் பிறந்த ஊரான வல்வெட்டித்துறைக்கும் இலங்கைக்கும் பெருமை சேர்த்தவர், சாதனையில் ஓர் இமயமாகத் திகழ்ந்தார்.

*அவரது மறைவானது ஈழத்தமிழர்கள் மத்தியில் ஒரு சாதனையாளரை இழந்து விட்டோம் என்ற வேதனையை ஏற்படுத்திக் கண்களைக் குளமாக்கின. ஆழிக்குமரன் ஆனந்தன் மறைந்து இன்று 32 ஆண்டுகளாகிய நிலையில் இவரின் இடத்தை நிரப்புவதற்கு இலங்கையில் வேறு ஒருவர் பிறக்கவேயில்லை. ஆழிக்குமரன் ஆனந்தன் என்ற மாவீரனின் சாதனைகளை ஈழத்தமிழர்களாகிய நாம் இன்றைய நாளில் ஒருகணமாவது நினைத்துப் பார்க்க வேண்டும்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## வரலாற்றில் இன்றைய தினம்

1661 - ஹேக் ஒப்பந்தத்தில் போர்த்துக்கல்லும் டச் குடியரசும் ஒப்பமிட்டன.

1806 - புனித றோமப் பேரரசின் இரண்டாம் பிரான்சிஸ் பதவி விலக புனித றோம பேரரசு முடிவுக்கு வந்தது.

1890 - நியூயோர்க் நகர் அவுபேர்ண் சிறையில் கொலைகாரன் வில்லியம் கெம்லர் முதன் முதலாக மின்சாரக் கதிரை மூலம் சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்ட நபரானார்.

1917 - றோமானிய மற்றும் ஜேர்மன் படைகளிடையே மராசெஸ்ரி போர் தொடங்கியது.

1926 - ஆங்கிலக்கால்வாயை முதன்முதல் நீந்திக் கடந்த பெண்மணியானார் கெட்ரூட் ஈடெர்ல்.

1930 - நியூயோர்க் நகரில் டாக்ஸி ஒன்றில் ஏறிய நீதிபதி யோசப் போர்ஸ் கிறேட்டர் காணாமல் போனார். திரும்பவும் அவர் ஒருபோதும் கண்டு பிடிக்கப்படவேயில்லை.

1940 - எஸ்டோனியா சட்டத்துக்குப் புறப்பான வகையில் சோவியத் யூனியனுடன் இணைக்கப்பட்டது.

1945 - ஹிரோஷிமாநகர்மீது அணுகுண்டு வீசிய தினம் இன்றாகும்.

1960 - கியூபா புரட்சி; அமெரிக்கர் மற்றும் வெளிநாட்டவரின் சொத்துக்களை கியூபா தேசிய மயப்படுத்தியது.

1976 - கராச்சி குவாசிம் துறைமுகத்துக்கான அடிக்கல் சுல்பிகார் அலி பூட்டோவால் நடப்பட்டது.

1991 - ஜப்பானின் பிரதிநிதிகள் சபையில் முதல் பெண் சபாநாயகரானார் சமூக ஜனநாயகக் கட்சியின் டகாகோ டொய்.

1995 - கப்பல்களுக்கு செஞ்சிலுவைக் குழு பாதுகாப்பு வழங்குவதில் ஏற்பட்ட தடங்கல் நிலை நீடிப்பு. அரசு தரப்புடனான பேச்சில் பயனில்லை.

2006 - பேராசிரியர் குணானந்தம் (நரம்பு நோயியல் சிகிச்சை நிபுணர்) 60 வயதில் லண்டனில் காலமானார்.

\- வரணி இடைக்குறிச்சிப் பகுதியில் தொன்மையான கிணறு கண்டு பிடிப்பு

2012 - நாசாவின் கியூறியோசிற்றி செவ்வாய் மேற்பரப்பில் தரையிறங்கியது.

## பொறாமைக்காரர்கள்

ஏழையான ஒருவன் தனக்குச் செல்வம் வேண்டும் என்ற ஆசையால் ஊருக்கு வெளியே உள்ள குளத்தின் மேற்கு திசையில் அமர்ந்து கடவுளை வேண்டித் தவம் செய்தான்.

அதை அறிந்த அவனுடைய அடுத்த வீட்டுக்காரன் அதே குளத்தின் கிழக்குத் திசையில் அமர்ந்து தவம் செய்தான்.

சில நாள்களுக்குப் பிறகு கடவுள் மேற்குத் திசையில் இருப்பவனிடம் வந்து "உனக்கு என்ன வேண்டும்" என்று கேட்டார்.



அதற்கு அவன் "கீழ்த்திசையில் இருப்பவன். என்ன கேட்பானோ அதைப் போல் இரண்டு பங்கு எனக்கு உண்டாக வேண்டும்" என்றான்.

பிறகு கீழ்த்திசையில் இருப்பவனிடம் சென்று "உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார் கடவுள்.

அதற்கு அவன் "மேற்குத் திசையில் இருப்பவன் உம்மைக் கேட்டது என்ன?" என்றான்.

"அவன் நீ கேட்பதற்கு இரண்டு மடங்கு தனக்கு வேண்டும் என்றான்" என்றார் கடவுள்.

தன்னைக் காட்டிலும் அவனுக்கு அதிகமாகச் செல்வம் கிடைக்கலாமா என்ற பொறாமையினால் "கடவுளே! எனக்கு ஒரு கண் கெட்டுப்போக வேண்டும்" என்றான். கடவுள் நகைத்து "அப்படியே" என்றார். இதனால் இவனுக்கு ஒரு கண் கெட்டவுடனே மற்றவனுக்கு இரண்டு கண்களும் கெட்டுப்போய் விட்டன.

## வர்ணம் தீட்டுவோம் வாங்க....



## அன்னை தெரேசா



*(அன்னை தெரேசா குறித்து கடந்த சனிக்கிழமை வெளிவந்த பகுதியின் தொடர்ச்சி)*

**அன்னை தெரேசாவின் வாழ்க்கைக் குறிப்புக்கள்**

1910 - பிறப்பு

1918 - பள்ளிக் கல்வியின் தொடக்கம்

1928 - செப்ரெம்பர் மாதம் 26ஆம்நாள் அயர்லாந்து நாட்டில். அப்பாய் என்ற நகரத்தின் கன்னியர் மடத்தில் சேர்ந்தார். " ஆசீர்வதிக்கப்பட்ட கன்னி மேரி நிறுவனத்தில் பயிற்சி பெற்றார்.

1928 - நவம்பர் மாதம் 29ஆம் நாள் இந்தியா புறப்பட்டார்.

1929 - 'ஆக்னஸ்' என்ற பெயர் தெரேசா என்று மாற்றப்பட்டது.

1946 - செப்ரெம்பர் 10 ஆம் நாள் அழைப்புக்குள் அழைப்பு - உள் ஒளி பெற்ற நாள்.

1948 - ஓகஸ்ட் 16ஆம் நாள் மடத்திலிருந்து வீதிகளில் அன்புப் பணி செய்ய கத்தோலிக்க தலைமையிடமான உரோமிலிருந்து உத்தரவு பெற்றது.

1948 - நீலக்கரையிட்ட வெண்ணிறப் பருத்திப் புடவை முழுக்கை சட்டை இடது தோளில் சிலுவை "மிஷனெரிஸ் ஆஃப் சாரிட்டி" அமைப்பு தோற்றம்.

1949 - மார்ச் 19 தெரேசா அவர்களின் சேவை இயக்கத்தில் முதல் பெண்மணியின் சேர்க்கை. இவர் பெயர் சுபாஷினி தாஸ்.

1949 - இந்தியப் பிரஜையாக பதிவு பெற்றது.

1950 - ஒக்ரோபர் 7 ஆம் நாள் மிஷனெரிஸ் ஆஃப் சாரிட்டி சபை. கத்தோலிக்க தலைமையகத்தின் அங்கீகாரம் பெற்ற நாள். இதன் பின் கல்கத்தா உயர்நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.

1952 - இறப்போருக்கு ஓர் இருப்பிடம் அமைத்தல் 'நிர்மல் ஹிருதய்' தோற்றம்

1953 - அறப்பணி இயக்கம். புதிய இல்லத்துக்கு குடி பெயர்ந்தது.

1955 - 'சிசு பவனம்' தோற்றம், இது ஒரு குழந்தைகள் காப்பகம்.

1959 - தொழு நோயாளிகள். அகதிகள் முகாம் தோற்றம்.

1960 - பிற நாடுகளில் அன்னையரின் பணி தொடக்கம் முப்பது ஆண்டுகளுக்குப் பின்பு உடன் பிறந்த சகோதரன் லாசரு என்பவரைச் சந்தித்தல். 25 ஆதரவு இல்லங்கள் இந்தியாவில் தோற்றுவிக்கப்பட்டன.

1965 - அறப்பணி இயக்கத்தின் கிளைகள். உலகத்தின் பிறநாடுகளில் தொடங்கிட தலைமைப்பீடம் ரோம் அனுமதியளித்தல். பன்னாட்டுப் பணியின் தொடக்கம் வெனிசுலாவில்.

1966 - அறப்பணி இயக்கத்தின் ஆண்கள் பிரிவு தொடங்கியது. இதன் தலைவர் சகோதரர் ஆன்ட்ரு.

1967 - போப் ஜான்பால் (நான்காவது) அவர்களின் வேண்டுகோளின்படி ரோம் நகரில் இயக்கத்தின் பணி தொடக்கம்.

1968 - தான் சானியாவில் அன்புப்பணி.

1969 - ஆஸ்திரேலியாவிலும் பணி தொடக்கம்.

1969 - வங்காளத்தில் 'சாந்தி நகர்' தொழு நோயாளியர் இல்லம் தோற்றுவித்தல்.

1971 - பாகிஸ்தான் - பங்களாதேஷ் போர்க் காலத்தில் சேவை.

1975 - சேவை அறப்பணி இயக்கத்தின் வெள்ளி விழா.

1975 - 'அறப்பணி இயக்க சகோதரர்கள்' இந்தியாவுக்கு வெளியே வியட்நாமில் இல்லம் அமைத்தல்.

1977 - ஹாங்கொங் சேவை அறப்பணி தொடக்கம்.

1980 - அன்னையருக்கு தபால் தலை வெளியிட்டு பாரதம் மகிழ்ந்தது.

1985 - எதியோப்பியாவின் பஞ்சப் பிரச்சினையை மதிப்பீடு செய்யச் சென்றது.

1986 - சேவை அறக் கட்டளையின் துறவிகள் அல்லதோர் கிளையின் தோற்றம்.

1988 - ரஷ்யா நாட்டுக்கு அறப்பணி இயக்கத்தவர் அனுப்பப்பட்டனர்.

1989 - அன்னையின் உடல் நிலை மிகவும் கவலைக்கிடமானது.

1990 - இதய அறுவை சிகிச்சை பெற்று நலமடைதல்.

1990 - உடல் நிலை காரணமாக அற நிலையத்தின் தலைமைப் பொறுப்பை கைவிட முனைந்தது.

1991 - தனது பிறந்த மண்ணுக்கு அப்பேனியாவில் திரானா என்ற இடத்தில் ஓர் இல்லம் அமைத்தார். கல்கத்தா வந்த பின்பு பிறந்த மண்ணுக்குச் சென்ற முதற்பயணம் இது.

1995 - சீனாவில் கிளை திறப்பதற்கான ஏற்பாடுகள்.

1996 - உடல் நலம் சீர் குலைந்தது.

1997 - சேவை அறநிலையத்தின் பொறுப்பிலிருந்து விலகி, சகோதரி நிர்மலாவிடம் தொடர்பணி உரிமை அளிக்கப்பட்டது.

1997 - செப்ரெம்பர் 5ஆம் நாள் அன்னை மறைவு. செப்ரெம்பர் 13ஆம் நாள் அரசு மரியாதையுடன் வழியனுப்பு விழா.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருக்குறளின் வாழ்க்கைத் தத்துவம்

க. மகேசன்

பேராசிரியர் மாணிக்கம் என்பவர் வள்ளுவம் என்ற ஒரு நூலை எழுதியிருந்தார். அதில் திருக்குறள் ஓர் அறநூல் மட்டுமல்ல என்ற கருத்தை அவர் கூறியிருந்தார். அதன் அடிப்படையில் திருக்குறளை மேலும் ஆராய்ந்து அதிலே காணப்படும் அரசியல், பொருளியல், சமூகவியல் கருத்துக்களைப் பிழிந்தெடுத்து ஒப்புரவு அல்லது வள்ளுவம் என்னும் நூலை 1970 களில் வெளியிட்டேன்.

கார்ல்மாக்சின் கொள்கை, மார்க்ஸ் என்பவரால் எழுதப் பெற்றமையினால் மார்க்சிசம் எனவும் அரசியல் தத்துவரீதியில் கொமியூனிசம் எனவும் அழைக்கப்படுகின்றது. அதேபோன்று கொமியூனிசம் என்பதை ஒப்புரவு என அழைக்கலாம் என்று எனது நூலில் எழுதியுள்ளேன்.

உலகத்திலே பிரசித்தி பெற்ற அழியாவரம்பெற்ற நூல்கள் மூன்று 1.விவிலியம் 2. குரான் 3. கற்பிற்றல் இவற்றை ஆக்கியோரின் திறமையால் இன்று இவை உலகின் பெரும்பாலான மக்களை தம்வசப்படுத்தியுள்ளன. ஆயினும் அந்நூல்கள் மக்களுக்கு நீதியை வழங்கவோ அமை தியை நிலைநாட்டவோ தோன்றியவை என்று சொல்ல முடியாது.

கிரேக்க நூலான விவிலியம் மொழி பெயர்க்கப் பெற்று ஐரோப்பிய நூலாக அந்த ஏகாதிபத்தியத்துடன் தன்னை இணைத்துக் கொண்டது. ஏகாதிபத்தியப் பரம்பலும், விவிலிய, கிறிஸ்தவ பரம்பலும் சமாந்தரமாக நடை பெற்றன. 15 ஆம் நூற்றாண்டுக்குப் பிந்திய காலத்தில் உலகப் போர்களுக்கெல்லாம் அது காரணமாக இருந்தது.

அதே போன்று குரான் என்னும் நூலை அடிப்படையாகக் கொண்ட இஸ்லாமிய பரம்பலால் மத்திய நாடுகள் மட்டுமன்றி மற்ற உலக நாடுகள் பலவும் சிதைவுற்றன.

அதே போன்று தான் கம்யூனிசம் என்ற ஏகாதிபத்திய வளர்ச்சியால் வல்லரசுகளுக்கிடையேயும் உள்நாட்டு மக்களிடையேயும் பல போர்கள் நடை பெற்றன.

'அறம் செய்ய விரும்பு' என்பது தமிழ் மறை. திருவள்ளுவர் எழுதிய திருக்குறள் முதற்கண் ஓர் அற நூல். மக்களின் இன்ப வாழ்க்கைக்கும், அமைதிக்கும் இன்றியமையாக் கருத்துக்கள் அறத்துப்பாலிலே அருளப் பெற்றுள்ளன. அது போன்றே அரசியல் பற்றிய அரும் பெரும் கருத்துக்கள் பொருட்பாலில் உள்ளன. பொருட்பால் முதலாம் செய்யுளிலேயே பல்கலைக்கழக கற்கை நெறியிலே உள்ளபடி (State) அரசு என்பதற்கு மிகப் பொருத்தமான வரைவிலக்கணம் கூறப்பெற்றுள்ளது.

படை, குடி, கூழ், அமைச்சு,நட்பு, அரண் ஆறும் உடையான் அரசருள் ஏறு. இங்கே அரசன் என்பதை அரசு எனக் கொள்ளுதல் வேண்டும். அதே சமயம் நாட்டின் பொருள்வளத்தையும், வீட்டின் பொருள்வளத்தையும் பெருக்குவதற்கான பொருளியற் கருத்துக்களும் வள்ளுவத்திலே ஏராளம் உள்ளன. இந்த நிலையிலும் அந்த மூன்று அந்நிய நூல்களுக்கும் உள்ள மதிப்பு திருக்குறளுக்கு இல்லாமற் போனதற்குரிய காரணம் என்ன என்பதைத் தமிழராய்ப் பிறந்த அனைவரும் ஆராய வேண்டும்.

'கூட்டத்தில் கூடி நின்று கூவிப் பிதற்றலன்றி நாட்டத்தில் கொள்ளாரடி கிளியே நாளில் மறப்பாரடி' என்ற பாரதி பாடலின் படி தமிழனின் சுய நலம்தான் இதற்குக் காரணம்.

திருக்குறளைப் போலவே கி.பி. 7ஆம், 8ஆம் நூற்றாண்டுகளில் நமது நாயன்மார் வளர்த்த சைவ நெறிக்கும் சைவ சித்தாந்தத்துக்கும் நடந்துள்ளது. தமிழரில் பெரும்பாலானவர்கள் திருக்குறள் படிப்பதில்லை. அதேபோல் அவர்கள் தேவார திருவாசகப் பாடல்களையும் சைவசித்தாந்த நூல்களையும் படிப்பதில்லை. அந்த நூல்களை நம் மக்கள் படித்தல், பாராயணம் செய்தல்வேண்டும். அவ்வாறு செய்யாமையாற்றான் தமிழரில் ஒரு பகுதியினர் விவிலியத்தைப் படித்து கிறிஸ்தவ சமயத்தவராகி ஐரோப்பியருடன் தம்மை இணைத்துக் கொள்கிறார்கள். இன்னொரு பகுதி குரானைப் படித்து முஸ்லிமாக மதம் மாறி அராபியருடன் தம்மை இணைத்துக்கொள்கிறார்கள். மேற்படி மத இன மாற்றங்கள் இந்த நூற்றாண்டிலும் நம் கண்முன்னே நடைபெறுகின்றன. தமிழினம் உலக்கை தேய்ந்து உளிப்பிடியானது போல அழிந்து வருவதையிட்டு யாரும் கவலைப்படுவதில்லை. தமிழர் வெறும் வாய்ப் பேச்சிலும் ஆடம்பர விழாக்களிலும் காலத்தைக் கழிக்கிறார்கள். நமது அரும்பெரும் பொருளான திருக்குறள், திருமுறைகள், சைவசித்தாந்தம் ஆகியவற்றைப் படிக்க, மனனம் செய்ய, பொதுமக்களிடையே பரப்ப யாரும் முன்வருவதில்லை.

## கடவைகளுக்கு கேற் போடுங்கள்

வடக்கில் ரயில்களில் மோதுண்டு உயிரிழப்பதும் உடல் சிதறிச் சாவதும் இன்னும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. சாதாரண இடங்களில் தண்டவாளங்களில் இடம்பெறும் உயிரிழப்புகள் மட்டுமன்றி ரயில் கடவைகளில் நடக்கும் சம்பவங்கள் மிகமோசமான நிலையை எட்டி விடுகின்றன.

கடவைகளில் உயிர்கள் இழக்கப்படுவதை எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளமுடியாது. அதுவும் உயிரிழப்பவரின் குடும்ப நிலைமைகள், இழப்பின் தன்மையில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தி உறவுகளையும் நண்பர்களையும் மேலும் துயரத்தில் ஆழ்த்திவிடுகின்றது.

மல்லாகம் கோட்டைக்காட்டுச் சந்தியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்தில் காதுகேளாத குடும்பத் தலைவர் கடவையைக் கடந்தபோது கண்ணிமைக்கும் நேரத்தில் உடல் சிதறி உயிரிழந்தார்.

சிலர் உயிரை மாய்க்கும் முயற்சியில் ஈடுபட்டு கடவைகள் அல்லாத இடங்களில் ரயில் முன் பாய்ந்து உயிரை மாய்க்கின்றனர். அது அவர்களது தனிப்பட்ட விடயம் சார்ந்தது. முடிவு எடுத்துவிட்டுத் தாமாகச் சென்று உயிரை மாய்க்கின்றனர். வாழும் ஆசையில் உள்ளவர்கள் கடவைகள் ஊடாகவே கடக்கின்றனர். அது பாதுகாப்பான கடவை, பாதுகாப்பற்ற கடவை என்று தனித் தனியே பார்க்கப்படுவது மிகக் குறைவு என்றுதான் கூறமுடியும்.

பாதுகாப்பானது என்று கருதிக் கடப்பதற்கு புலன்கள் குறைபாடு உள்ளவர்கள் என்ன செய்ய முடியும்? அவர்கள் உதவிக்கு என்று யாரையாவது வாழ்நாள் முழுவதும் அழைத்துக் கொண்டு செல்ல வேண்டுமா?

நேற்றுமுன்தினம் இறந்தவரது மகள் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் தோற்றிக் கொண்டிருப்பவர். பரீட்சை எழுதிவிட்டு அடுத்த பரீட்சைக்குத் தயார்ப்படுத்த வேண்டும் என்ற ஆவலுடன் வெளியேறும் போது தந்தையார் அவலமாகச் சிதறி உயிரிழந்தார் என்ற தகவல் அவரை எந்தளவுக்குத் தூக்கி வாரிப்போட்டிருக்கும்? அடுத்த பரீட்சைகளுக்கும் தோற்ற முடியாத நிலை. ஏற்கனவே குடும்ப நிலைமையைக் கருத்திற் கொண்டு கனவுகளுடன் படித்துப் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு இந்த நிலைமை ஏற்பட்டால் அவர்களை அது மேலும் நோகடித்து விடுகிறது? அவருக்கு மட்டுமன்றி அவருடன் கூடப் படித்த மாணவர்களுக்கும் பாதிப்புத்தான். சக மாணவிக்கு இந்த நிலமை ஏற்பட்டு விட்டதே என்ற ஆதங்கம் அவர்களது பரீட்சை எழுதும் திறனில் தாக்கத்தை ஏற்படுத்தி விடாது என்று கூறமுடியாதுதானே!

வடக்கில் அங்கவீனர்கள் ஆயிரக்கணக்கில் உள்ளனர். எனவே பாதுகாப்பற்ற கடவை என்ற ஒன்று இனிமேல் இருக்கக்கூடாது. அனைத்தும் பாதுகாப்பான கடவைகளாக்கப்பட வேண்டும். அதற்கேற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதிலிருந்து அதிகாரிகளோ அரசியல் வாதிகளோ பின் வாங்கக் கூடாது. கண்ணிமைக்கும் நேரத்தில் ரயில் மோதிக் கொன்று விட்டுச் செல்லும் இத்தகைய சம்பவங்களுக்கு பின்னர் சாட்டுப் போக்குச் சொல்வது ஏற்புடையதல்ல.




கடவைகளில் மாணவர்கள், வயோதிபர்கள், உத்தியோகத்தர்கள்கூட ரயிலில் மோதுண்டு உயிரிழந்தமை அதிகாரிகளுக்கும் தெரிந்த ஒன்றுதான். இந்த விடயங்களில் அநியாயமாகக் குடும்ப அங்கத்தவர்களையும் உறவுகளையும் சிதைக்க விடாதீர்கள். கிடைக்கும் சில சந்தர்ப்பங்களை நழுவ விட்டுவிட்டால் பின்னர் எக்காலத்திலும் அது கிடைக்காது.

ஒரு புறம் கடவைக் காப்பாளர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அவர்களது கோரிக்கை நியாயமானது என்பதற்கப்பால் பாதுகாப்புடைய, பாதுகாப்பற்ற கடவைகளில் அவர்களை பாதுகாப்புக்கு நிறுத்த வேண்டிய தேவை உள்ளது என்பதனையும் கருத்திற் கொள்ள வேண்டும். பாதுகாப்பற்ற கடவைகளில் மனிதர் மட்டுமன்றி பல கால்நடைகள்கூட சிதறுண்டு உயிரிழக்கின்றன. இதுவும் வடக்கின் பொருளாதாரத்தில் கைவைக்கும், ஏழைகளின் வயிற்றில் அடிக்கும் செயற்பாடுதான் என்பதையும் கவனத்திற் கொள்ளவேண்டும். நகர்ப்புறங்கள், குடியிருப்புக்கள், சனநடமாட்டம் உள்ள இடங்களில் பாதுகாப்பற்ற கடவை என்ற ஒன்று இனிமேல் இருக்கவேகூடாது. அவை அனைத்தும் பாதுகாப்புடைய கடவைகளாக்கப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**மேடம்:** உங்களின் நற்செயலை சிலர் பரிகாசம் செய்வர். தொழில், வியாபாரத்தில் மிதமான பணவரவு கிடைக்கும். பணியாளர்கள், பணிச்சுமைக்கு ஆளாகலாம். எவருக்கும் தகுதி மீறிய வாக்குறுதி தர வேண்டாம்.

**இடபம்:** எதிர்கால நலனில் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் சராசரி அளவில் இருக்கும். பிறர் பார்வையில், அதிக பணம் செலவு செய்ய வேண்டாம். தாயின் அன்பு, ஆசி மனதில் நம்பிக்கை தரும்.

**மிதுனம்:** குடும்பத்தினரின் ஒத்துழைப்பு கிடைக்கும். நற்குணம் உள்ளவர்களின் நட்பு கிடைக்கும். தொழிலில் உற்பத்தி, விற்பனை வியத்தகு அளவில் வளர்ச்சி பெறும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**கடகம்:** சங்கடமான சூழலிலும் பெருந்தன்மையுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் பொறுப்பு அதிகரிக்கும். வருமானம் சீராக இருக்கும். விஷப் பிராணிகளிடம் விலகியிருப்பது நல்லது.

**சிங்கம்:** உங்கள் நலனில் அக்கறை கொண்டவரைச் சந்திப்பீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க, கூடுதல் அளவில் பணிபுரிவீர்கள். வருமானம் பெருகும். குடும்பத்துடன் விருந்து, விழாவில் பங்கேற்பீர்கள்.

**கன்னி:** உங்களின் நற்செயலைச் சிலர் குறை கூறக் காத்திருப்பர். தொழில், வியாபாரத்தில் நிலுவைப்பணி நிறைவேறும். பணவரவு சுமாராக இருக்கும். பணியாளர்கள், பணி விடயமாக வெளியூர் செல்வர்.

**துலாம்:** இனிய பேச்சால் நன்மை காண்பீர்கள். தொழில், வியாபார வளர்ச்சிக்காக சுறுசுறுப்பாக செயற்படுவீர்கள். சராசரி பணவரவுடன் நிலுவைப் பணமும் வசூலாகும். வாகனப் பயணம் இனிதாக அமையும்.

**விருச்சிகம்:** உறவினர்களை மதிப்புடன் நடத்துவீர்கள். தொழில், வியாபாரத்தில் இருக்கிற குறுக்கீடு விலகும். வருமானம் திருப்திகரமாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும்.

**தனுசு:** செயலில் நிதானத்தைக் கடைபிடிப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். உடல்நலனில் அக்கறை கொள்வீர்கள். வெளியூர்ப் பயணத்தில் திடீர் மாற்றம் உண்டாகும்.

**மகரம்:** உடல்நலனில் அக்கறை கொள்வது அவசியம். தொழில், வியாபாரம் சீர்பெற, நண்பரால் உதவி கிடைக்கும். பணவரவு மிதமான அளவில் இருக்கும். வாகனப் பயணத்தில் மித வேகம் பின்பற்றவும்.

**கும்பம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மனதில் பெருமிதம் கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய சாதனை படைப்பீர்கள். வருமானம் பெருகும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும்.

**மீனம்:** இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள். அக்கம் பக்கத்தினரின் அன்பும், அரவணைப்பும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் இலாபம் திருப்திகரமாக இருக்கும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கிக் கொடுப்பீர்கள்.



# எம்.ஜி.ஆர். பட பாணியில் உருவாகும் விஜய்–அஜித் படங்கள்

எம்.ஜி.ஆர். நடித்த, 'எங்க வீட்டுப் பிள்ளை' படப் பாணியில் விஜயின் 60ஆவது படம் உருவாகி வருவதாகக் கூறப்படுகிறது. மேலும் இந்தப் படத்துக்கு 'எங்க வீட்டுப் பிள்ளை' எனப் பெயரிடப்படவுள்ளது. இந்த நிலையில் எம்.ஜி.ஆரின் 'உலகம் சுற்றும் வாலிபன்' படப் பாணியில் அஜித்தின் 57ஆவது படம் உருவாகிறதாம். இந்தப் படம் குறித்து படத்தின் தயாரிப்பாளர் சத்யஜோதி தியாகராஜன் கூறியுள்ளதாவது:

"இதில், இண்டர்போல் அதிகாரியாக அஜித் நடிக்கிறார். இதன் படப்பிடிப்பை 70வீதம் வெளிநாடுகளிலும் 30வீதம் இந்தியாவிலும் நடத்த உள்ளோம். அனிருத் இசையில் தீம் மியூசிக் தயாராகிவிட்டது. மற்ற நான்கு பாடல்கள் விரைவில் தயாராகும்" என்றார்.

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 5 | | 9 | | 2 | | 4 | |
| 4 | | 2 | | | 7 | 8 | | |
| | 3 | | | | | | | |
| 6 | | | | 9 | | | | |
| | | 1 | | 5 | | 6 | | |
| | | | | 3 | | | | 4 |
| | 8 | | | | | | 1 | |
| | | 3 | 4 | | | 7 | | 8 |
| | 7 | | 8 | | 9 | | 5 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | 6 | 8 | 5 | 4 | 7 | 2 | 9 |
| 7 | 5 | 2 | 9 | 3 | 6 | 8 | 1 | 4 |
| 9 | 4 | 8 | 7 | 2 | 1 | 5 | 6 | 3 |
| 5 | 1 | 7 | 6 | 8 | 3 | 9 | 4 | 2 |
| 6 | 8 | 4 | 2 | 7 | 9 | 1 | 3 | 5 |
| 3 | 2 | 9 | 1 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 2 | 9 | 3 | 5 | 6 | 7 | 4 | 8 | 1 |
| 8 | 7 | 1 | 4 | 9 | 2 | 3 | 5 | 6 |
| 4 | 6 | 5 | 3 | 1 | 8 | 2 | 9 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.
சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனிஎண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## உங்களுக்கு வியாழ மாற்றம் எப்படி?

தனுசு ராசி



குளிக்கிற போது மட்டும் சட்டையைக் கழட்டாது, எல்லா நேரமும் சட்டை, பேண்ட் எல்லாவற்றையும் கழட்டிட்டு ஓடவிடும்.

மகர ராசி



கால் மேல இல்ல, கால அடுத்தவன் மூஞ்சில வச்சிட்டு கூடப் பேசலாம்.
குரு ஸ்கூட்டரில வெயிட் பண்ணுறான்.

கும்ப ராசி



ஜாமின் போடாதை, இல்ல இப்படித்தான் நடக்கும்.

மீன ராசி



இரண்டு வருசமா லிங்கா ரஜினி மாதிரி இருந்த நீங்க, இனிமே கபாலி ரஜினி மாதிரி ஆகிடுவீங்க.

விமானத்தில் நம்ம ஆளுங்களுக்கு மது வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளது.
காரணம்...
மது அருந்திய பின்.

அமெரிக்கக்காரன்:
நான் புத்தகம் படிக்கப் போறேன்.

சீனாக்காரன்:
நான் பாட்டுக் கேட்கப் போறேன்.

ஜப்பான்காரன்: நான் தூங்கப் போறேன்.

நம்ம ஆளு:
தம்பி... இதுவரைக்கும் நீ ஓட்டுனது போதும். எழுந்திரு, நான் ஓட்டுறேன்.

**கலாபக் காதலன்**
இங்கு பலர் அர்த்தமற்ற கனவுகளைக் கண்டு கொண்டு, நிஜ வாழ்க்கையை வாழ மறந்து விடுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## இது புதுசு

பெண்களின் கூந்தலுக்கான அலங்காரக் குஞ்சம், வர்ண நிறங்களில் அறிமுகமாகியுள்ளது. புடைவையின் நிறத்தில் பின்னலுக்கு குஞ்சம் வைக்கமுடியும். இவை 200 ரூபாவில் இருந்து 500 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றன.



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொழும்பு | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 800 | 700 | 700 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 400 | 150 | 600 |
| கணவாய் | 600 | 600 | 500 | 600 | 800 | 600 | – |
| பாரை | 550 | 600 | 500 | 800 | 500 | 600 | 450 |
| சுறா | 500 | 600 | 600 | 800 | 1000 | – | 700 |
| சீலா | 300 | 500 | 400 | 600 | 600 | – | 480 |
| விளை | 650 | 500 | 400 | 600 | 500 | 500 | 450 |
| முரல் | 300 | 400 | 350 | 500 | 400 | 200 | – |
| கும்பிளா | 400 | 400 | 300 | 400 | 400 | 300 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | 500 | 600 | – | – |
| ஓரா | 400 | 400 | – | – | 450 | 200 | 400 |
| திரளி | 300 | 300 | 200 | 150 | 300 | – | 340 |
| நகரை | 250 | 300 | – | 250 | 400 | – | 370 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 120 | 100 | – |
| ஒட்டி | 300 | 250 | 150 | – | 250 | – | – |
| திருக்கை | 150 | 350 | 200 | 400 | 400 | – | – |
| மதனம் | 150 | 250 | 180 | 400 | 350 | – | 300 |
| கொய் | 100 | 150 | 60 | 70 | 80 | – | – |
| பாலை | 400 | 250 | 250 | 400 | 400 | 400 | – |
| வாழை | 100 | 150 | 200 | 400 | 300 | – | – |



## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | 50 | 40 | 120 | 40 | 40 | 30 | 30 |
| கத்தரி | 100 | 100 | 100 | 100 | 80 | 80 | 90 | 80 |
| கரட் | 160 | 160 | 160 | 160 | 140 | 180 | 110 | 100 |
| மரவள்ளி | 100 | 90 | 80 | 80 | 80 | 80 | 80 | 50 |
| பயிற்றை | 60 | 60 | 80 | 60 | 50 | 100 | 100 | 100 |
| பாகல் | 160 | 140 | 160 | 240 | 160 | 160 | 240 | 200 |
| கருணைக்கிழங்கு | 180 | 120 | 160 | 180 | 100 | – | 120 | 180 |
| பெ.வெங்காயம் | 90 | 80 | 80 | 90 | 80 | 90 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 80 | 100 | 80 | 80 | 60 | 100 | 90 | 70 |
| பூசணி | 80 | 60 | 80 | 90 | 100 | 100 | 70 | 100 |
| தக்காளி | 70 | 80 | 80 | 100 | 60 | 150 | 120 | 70 |
| வாழைக்காய் | 100 | 100 | 60 | 120 | 80 | 80 | 70 | 70 |
| கீரை | 20 | 20 | 40 | 15 | 20 | 40 | 20 | 30 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 30 | 35 | 30 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 400 | 300 | 350 | 400 | 320 | 600 | 400 | 400 |
| புடோல் | 60 | 70 | 40 | 60 | 60 | 80 | 70 | 60 |
| கோவா | 120 | 120 | 120 | 140 | 120 | 80 | 90 | 120 |
| வெண்டி | 60 | 50 | 40 | 60 | 60 | 80 | 70 | 30 |
| போஞ்சி | 200 | 180 | 200 | 180 | 220 | 160 | 130 | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 | 160 | 140 | 200 | 90 | 120 |
| தேங்காய் | 40 | 22 | 40 | 25 | 20 | 40 | 15–25 | 25 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 90 | 100 | 100 | 100 | 85 | 120 |
| தேசிக்காய் | 100 | 140 | 120 | 120 | 160 | 200 | 120 | 100 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 160 | 200 | 240 | 180 | 240 | 200 | 200 | 170 |
| இராசவள்ளி | 160 | 300 | – | 250 | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 200 | 150 | 140 | 140 | 120 | 400 | 200 | 120 |



## வட்டிலப்பம்

### தேவையான பொருள்கள்

முட்டை-12
கருப்பட்டி -400 கிராம்
தேங்காய் - ½ மூடி திருவியது
சீனி - 250 கிராம்

**குறிப்பு:** விரும்பியவர்கள் அந்தக் கலவையில் தேவையான அளவு கஜு, பிளம்சை சிறிதாக வெட்டி சேர்த்துக் கொள்ளலாம். அதிகம் இனிப்பு விரும்பாதவர்கள் சீனி சேர்க்காமலும் செய்யலாம். இதை அவனில் வைத்தும் வேக வைக்கலாம்.

### செய்முறை

ரைஸ் குக்கரில் பாதி அளவுக்கு தண்ணீரை கொதிக்க வைக்கவும். பின்பு தேங்காயில் முதல் பாலை மட்டும் ஒரு கப்பில் எடுத்துகொள்ளவும். கருப்பட்டியை சிறிதாக சீவி, அதை முட்டையில் போட்டு நன்றாக அடித்து அந்தக் கலவையில் தேங் காய்ப் பாலை ஊற்[illegible] கலக்கிக் கொள்ளவு[illegible] பின்பு அந்தக் கலவை[illegible] ஒரு பாத்திரத்தில் ஊற்[illegible] அதை ரைஸ் குக்க[illegible] உள்ளே வைத்து [illegible] மணி நேரம் வேக[illegible] வும். கட்டியான ப[illegible] துக்கு வந்ததும் அ[illegible] ஆற விட்டு பரிமாற[illegible]

## நாளை

ஆடி-23
ஞாயிற்றுக்கிழமை
-07.08.2016
திதி: பஞ்சமி முழுவதும்
நட்சத்திரம்: உத்தரம்
கா.07.53
ராகுகாலம்:
04.34-06.04 வரை
சுபநேரம்:
09.04-10.34 வரை
கருடபஞ்சமி

## செல்வம் கொழிக்க

◆ உங்கள் வீட்டின் சுவர்களில் ஏதேனும் பிளவுகள் அல்லது விரிசல்கள் இருந்தால், அதை உடனடியாக சரிசெய்யுங்கள். ஏனெனில், இம்மாதிரியான சுவர்கள் வீட்டின் அதிர்ஷ்டம் மற்றும் செல்வத்திற்கு இடையூறை ஏற்படுத்தி, வீட்டில் எதிர்மறை ஆற்றலைத் தரும்.

◆ வீட்டினுள் இருக்கும் குழாயில் இருந்து எப்போதும் நீர் வடிந்து கொண்டிருந்தால், அதனால் நீர் மட்டும் வீணாவதில்லை, வீட்டின் நேர்மறை ஆற்றல்களும் வெளியேறிக் கொண்டிருக்கின்றன என்று அர்த்தம். எனவே இம்மாதிரியான குழாய் வீட்டில் இருப்பின் உடனடியாக சரிசெய்யுங்கள்.

◆ பலரும் வீட்டின் மொ[illegible] உபயோகமில்லாத பொரு[illegible] திருப்பார்கள். நீங்களும் உங்கள் வீட்டின் மொட்டை மாடியில் அப்படி வைத்திருந்தால், உடனே அதை அப்புறப்படுத்துங்கள். ஏனெனில் வாஸ்து சாஸ்திரப்படி, அசுத்தமான மொட்டைமாடி, வீட்டின் வறுமையை மேன்மேலும் அதிகரிக்கும்.


◆ பூசை அறையில் சாமிக்கு பூக்களைக் கொண்டு அலங்கரிப்பது வழக்கம். அப்படி அலங்கரிக்கும் பூக்கள் காய்ந்து பல நாள்களாக பூசை அறையில் இருப்பது, வீட்டின் செல்வ வளத்திற்கு இடையூறை ஏற்படுத்தும். எனவே தினமும் தவறாமல் பூசை அறையை சுத்தம் செய்யுங்கள்.

◆ வீட்டினுள் அலங்கார செடிகள் வைத்து வளர்த்து வருபவராயின், தினமும் அதை சூதானமாக கவனித்து பராமரித்து வாருங்கள். ஒருவேளை அந்த செடியின் இலைகள் காய்ந்தால், அதை உடனே அப்புறப்படுத்துங்கள். ஏனெனில் வீட்டினுள் காய்ந்த இலைகள் இருந்தால், அது எதிர்மறை ஆற்றல்களை கொடுத்து நிதி நெருக்கடிக்கு வழி வகுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## நுட்பம்

### 16 மில்லியன் நிறங்களில் எழுதும் இலத்திரனியல் பேனா



ஆரம்ப வகுப்புக்களில் நான்கு வர்ணங்களை ஒருங்கே கொண்ட குமிழ் முனைப் பேனாக்களைப் பயன்படுத்தியது அனைவருக்கும் நினைவிருக்கும்.
அதன் பின்பு 10 வர்ணங்களைக் கொண்ட பேனாக்களும் அறிமுகமாகியிருந்தன.
ஆனால் தற்போது சுமார் 16 மில்லியன் வர்ணங்களில் எழுதக்கூடிய இலத்திரனியல் பேனா ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.
குறோன்சி என்ற இந்தப் பேனா 2 டொலர்கள் மட்டுமே பெறுமதி உடையதாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்தப் பேனாவால் தொடர்ந்து 500 மீற்றர்கள் தூரம் வரை எழுதமுடியும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.
மேலும் இப் பேனா லீ–போ மின்கலத்தைக் கொண்டுள்ளதுடன், 95 கிராம் எடையையும், 6.7 அங்குல அளவு உயரம், 0.53 விட்டம் கொண்டதாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.
இந்தப் பேனா 2017ஆம் ஆண்டின் மே மாதத்தில் விற்பனைக்கு வரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

### உடல் மாற்றத்தை அவதானிக்க அதி நவீன வயர்லெஸ் சென்சர்



மனிதர்களின் உடலில் ஏற்படும் மாற்றங்களின் விளைவாகப் பல நோய்த் தாக்கங்கள் உண்டாகின்றன.
இவற்றில் அநேகமான நோய்களை விரைவாகக் கண்டறிய முடிவதுடன், நோய்களை மாற்றும் மருந்து, சிகிச்சை முறைகளும் காணப்படுகின்றன.
எனினும் சில வகையான நோய் நிலைமைகள் உண்டாவதைக் கண்டறிவதே கடினமாக இருக்கும்.
அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டாலும் அதற்கு நீண்ட காலம் எடுத்திருக்கும். இதனால் நோய் நிலைமை அதிகரித்துச் சாவுக்கு வழிவகுக்கும்.
இதனைத் தவிர்ப்பதற்குத் தற்போது அதி நவீன வயர்லெஸ் சென்சர் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
கலிபோர்னியப் பல்கலைக்கழக விஞ்ஞானிகளால் உருவாக்கப்பட்ட இந்த சென்சர் ஒரு மண் துணிக்கை அளவுக்கு மிகவும் சிறியதாக இருக்கின்றது.
இந்த சென்சரை உடலின் உட்பகுதியில் பொருத்துவதன் ஊடாக உடலின் ஆரோக்கியத்தில் ஏற்படும் மாற்றங்களைக் கண்காணிக்க முடியும்.
அவ்வாறு ஏற்படும் மாற்றங்களை அறிந்து உடனடியாக வேண்டிய சிகிச்சைகளை மேற்கொள்வதன் ஊடாக குறித்த நோய் நிலமையிலிருந்து விரைவாகக் குண மடையச் செய்ய முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# சிறந்த ஆயுள் காப்புறுதி நிறுவனமாக 3ஆவது ஆண்டாக செலிங்கோ லைப்



செலிங்கோ லைப் நிறுவனம் இலங்கையின் தலைசிறந்த ஆயுள் காப்புறுதி நிறுவனமாகத் தொடர்ந்து மூன்றாவது வருடமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.
ஐக்கிய இராச்சியத்தைத் தளமாகக் கொண்டு செயற்படும் பன்னாட்டு கீர்த்தி மிக்க வேர்ள்ட் பினான்ஸ் சஞ்சிகை செலிங்கோலைப்பின் செயற்பாட்டுக் குறிகாட்டிகளை மிக ஆழமாகப் பரிசோதித்த பின் இந்தத் தெரிவை அறிவித்துள்ளது.
ஒரு காப்புறுதிக் கொள்கையைப் பதிவு செய்து வழங்குவதற்கு எடுத்துக் கொள்ளப்படும் சராசரி நேரம், இடர்வாய்ப்பு எவ்வாறு மதிப்பிடப்பட்டு இணைத்துக் கொள்ளப்படுகின்றது, 12 மாதகால மீளாய்வில் நிகழ்த்தப்படும் சாதனை, தற்போது உள்ளவர்களுக்கும் புதிய வாடிக்கையாளர்களுக்கும் முறையான காப்புறுதிகள் எவ்வாறு வழங்கப்படுகின்றன, வாடிக்கையாளர்களைத் தக்க வைக்கும் விகிதாசாரம், உரிமை கோரல் கொடுப்பனவுக்கு எடுத்துக் கொள்ளப்படும் சராசரிக் காலம், புதிய வாடிக்கையாளர் சேர்ப்பு விகிதாசாரம், ஒரு காப்புறுதிக் கொள்கைக்கான சராசரி செலவு மற்றும் தேறிய சந்தா போன்ற விடயங்கள் தெரிவுக்கான மீளாய்வுக்காக அவதானிக்கப்படுகின்றன.
ஒரு ஆயுள் காப்புறுதிக் கம்பனியின் திடமான செயற்பாட்டையும் அதன் உற்பத்திகள் மற்றும் சேவைகள் பற்றிய தெளிவான துல்லியமான நிலையையும் எடுத்துக் காட்டுவதாக இவை அமைந்துள்ளன என்று கூறினார் செலிங்கோ லைப்பின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ஆர்.ரெங்கநாதன்.
சுதந்திரமான நிபுணர்களால் மேற்கொள்ளப்படும் இவ்வாறான கடினமான தேர்வு எல்லாக் கம்பனிகளுக்கும் நல்லதாகவே இருக்கும். இவ்வாறான ஒரு பரிசீலனையின் கீழ் நாம் பிரகாசித்துத் தொடர்ந்து மூன்றாவது தடவை சிறந்த நிலைக்குத் தெரிவாகியுள்ளமை உண்மையில் மகிழ்ச்சி அளிக்கின்றது என்று அவர் மேலும் கூறினார்.
தற்போது இருக்கின்ற வாடிக்கையாளர்களுடன் இனிவரும் வாடிக்கையாளர்களையும் சேர்த்து பலம் மற்றும் ஸ்திரப்பாடு என்பனவற்றுக்கான உறுதிப்பாடாக இந்தத் தெரிவு அமைந்துள்ளது என்று அவர் மேலும் விளக்கினார்.
செலிங்கோலைப்புக்கு இது ஒரு முக்கியமான தடமாக அமைந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.
தொடர்ந்து 12 ஆவது வருடமாக இலங்கையின் முதல் தர ஆயுள் காப்புறுதி நிறுவனம் என்ற பெருமையோடு 2015ஆம் ஆண்டை செலிங்கோலைப் நிறைவு செய்தது. இது மிகவும் முக்கியமானதோர் செயற்பாடாகும் எனவும் அவர் கூறினார்.

## இரண்டு மாதங்களில் பணவீக்கம் அதிகரிப்பு

இரு மாத காலப்பகுதியில் நாட்டில் பணவீக்கம் அதிகரித்திருந்ததுடன், பொருளாதாரத்தில் கேள்வி அடிப்படையிலான அதிகரிப்புக் காணப்பட்டது.
மோசமான காலநிலை காரணமாக ஏற்பட்ட விநியோகத் தடைகள் மற்றும் வரிக் கட்டமைப்பில் அறிமுகம் செய்யப்பட்டிருந்த மாற்றங்கள் போன்றன பணவீக்கம் கடந்த இரு மாதங்களில் உயர்வடைவதில் பங்களிப்பு வழங்கியிருந்ததாக இலங்கை மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
கடந்த இரு மாதங்களில் வலுப்பிறப்பாக்கம், சுற்றுலா மற்றும் துறைமுகம் தொடர்பான சேவைகள், நிர்மாணத்துறை, முதலீட்டுப் பொருள்கள் இறக்குமதி மற்றும் உற்பத்தியாளர்கள் மற்றும் சேவைகள் போன்றவற்றின் கொள்வனவு முகாமையாளர்களின் சுட்டிகள் போன்றன உயர்வைப் பதிவு செய்திருந்தன.
2016 ஆம் ஆண்டின் முற்பகுதியில் பின்பற்றப்பட்டிருந்த நாணய கடுமையாக்கல் செயன்முறைகள் மூலமாக வட்டி வீதங்களும் அதிகரிக்கப்பட்டிருந்தன. உள்நாட்டு நாணயச் சந்தையில் ரூபாயின் திரள்வுத் தன்மை குறைந்த மட்டத்தில் தொடர்ந்திருந்தது. வட்டி வீதங்களில் அதிகரிப்புப் பதிவாகியிருந்தபோதிலும், வணிக வங்கிகளின் மூலமாக தனியார் துறைக்கு வழங்கப்பட்டிருந்த கடன்களில் அதிகரிப்பு பதிவாகியிருந்தது.
இதன் பிரகாரம் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை நிலையான வைப்பு வசதிக் கட்டணம், மற்றும் நிலையான வழங்கல் வைப்புக் கட்டணம் ஆகியவற்றை 50 அடிப்படைப் புள்ளிகளால் அதிகரிப்பதற்குத் தீர்மானம் மேற்கொண்டிருந்தது. (தி)

## நியூசிலாந்துப் பாற்பண்ணையாளர் உதவி



நியூசிலாந்தின் ஃபொன்டெரா பாற்பண்ணையாளர்கள் தன்னார்வ அடிப்படையில் இலங்கைக்கு வந்து, உள்நாட்டு பாற்பண்ணையாளர்களுடன் தமது அறிவையும் நிபுணத்துவத்தையும் பகிர்ந்து கொண்டனர். ஃபொன்டெரா பிரான்ட்ஸ் ஸ்ரீ லங்காவின் புதியப் பாற் பண்ணையாளர் தன்னார்வச் செயற்பாட்டு திட்டத்தின் அடிப்படையில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.
ஃபொன்டெரா பிரான்ட்ஸ் ஸ்ரீ லங்கா முகாமைத்துவ பணிப்பாளர் சுனில் சேதி இது குறித்து தெரிவித்ததாவது:
தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையினால் அண்மையில் வெளியிடப்பட்டிருந்த புள்ளி விவரங்களின் பிரகாரம் இலங்கையின் மொத்த உள்நாட்டு பால் உற்பத்திக் கேள்வியில் 35 - 40 சதவீதம் நிரப்பப்படாமல் உள்ளது. பாற் பண்ணைத் துறையில் 100 வருடங்களுக்கு மேலான அனுபவத்தைக் கொண்ட பாற்பண்ணைக் கூட்டுத்தாபனம் எனும் வகையில், இந்த இடைவெளியை நிரப்பிக் கொள்ள உதவ நாம் கவனம் செலுத்துகிறோம்.
உயர் தரம் வாய்ந்த பால் உற்பத்தி என்னும்போது, எமது பாற்பண்ணையாளர்கள் உலகத் தலைவர்களாகத் திகழ்கின்றனர். பாற்பண்ணைத் துறையில் பல தலைமுறையாக இவர்கள் கட்டியெழுப்பிய நிபுணத்துவத்துடன் இவர்களின் அறிவு கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக, இலங்கையின் பாற்பண்ணையாளர்களுடன் அறிவைப் பகிர்ந்து கொள்வதன் மூலமாக, அவர்களின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவது நோக்காக அமைந்துள்ளதுடன், அதன் மூலம் அதிகளவு நிலைபேறான துறையை உருவாக்குவதும் நோக்கமாகும் என்று அவர் கூறினார். (தி)


**வணிகம்**

### பங்குச் சந்தை தகவல்கள்

CSE
COLOMBO STOCK EXCHANGE

| 5/8/2016 | | | |
|---|---|---|---|
| www.cse.lk | | | |
| [illegible] | | இன்று | [illegible] |
| ASPI | 38.88 | 6,517.13 | 6,478.25 |
| S&P SL20 | 20.34 | 3,531.36 | 3,511.02 |
| வியாபாரப்புரள்வு | | 1,054,766,784 | 504,730,048 |
| உள்நாடு:- கொள்வனவு | | 636,860,224 | 401,810,112 |
| விற்பனை | | 803,875,264 | 436,369,536 |
| வெளிநாடு:- கொள்வனவு | | 417,906,560 | 102,919,936 |
| விற்பனை | | 250,891,536 | 68,360,496 |

| அதிகூடிய பங்குப்புரள்வுகள் | குறியீடு | இறுதி விலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| சிங்கர் | SINS.N | 127 | 1,903,363 | 237,972,529 |
| லங்கா செராமிக் | CERA.N | 132.1 | 1,011,151 | 131,449,613 |
| எக்ஸ்போ லங்கா | EXPO.N | 7 | 13,124,776 | 90,478,345 |
| ஹேர்மஸ் ஹோல்டிங்ஸ் | HHL.N | 92.5 | 725,344 | 66,700,807 |
| ஹற்றன் நஷனல் வங்கி | HNB.N | 218.3 | 281,303 | 61,147,504 |
| செலான் வங்கி | SEYB.X | 69 | 910,819 | 60,772,263 |
| லங்கா ஓரிக்ஸ் லீசிங் | LOLC.N | 89.9 | 511,434 | 45,214,039 |
| சம்பத் வங்கி | SAMP.N | 247.5 | 139,656 | 34,254,503 |
| ஷெவ்றோன் லூப்ரிக்கன் | LLUB.N | 163.8 | 170,727 | 27,828,975 |
| டி எவ் சி சி வங்கி | DFCC.N | 138 | 160,774 | 22,035,669 |



அறிவித்தல்கள்

பங்குலாபம்
விதுலங்கா (VLL)- பங்கு ஒன்றிற்கு Rs. 0.10
கண்டி ஹோட்டல் (KHC) - பங்கு ஒன்றிற்கு Rs. 0.25

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| கம்பனிகள் | 294 |
| பரிமாற்றத்தில் | 225 |
| விலை உழைப்பு | 13.4 |
| புத்தகப்பெறுமதி | 1.5 |
| பங்குலாப விளைவு | [illegible]3 |

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை — யாழ். கிளை
147-2/9 K.K.S Road Jaffna : 212221455

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் நிலையங்களில் பொலிஸார் பற்றாக்குறை

யாழ்ப்பாணம், ஓக. 6
யாழ்.மாவட்ட பொலிஸ் நிலையங்களில் இருந்து அதிகளவான பொலிஸ் உத்தியோகத்தர்கள் நல்லூர் ஆலய கடமைக்கு செல்வதனால், பொலிஸ் நிலையப் பணிகளுக்கு ஆள்கள் அற்ற நிலமை காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஒவ்வொரு பொலிஸ் நிலையங்களிலும் சுமார் 50 பொலிஸ் உத்தியோகத்தர்கள் பணியாற்றுகின்றனர். இதில் நல்லூர் ஆலயக்கடமைக்காக 20 பொலிஸார் வீதம் அழைக்கப்பட்டுள்ளனர். சுமார் 10 பொலிஸார் விடுமுறையில் நிற்கின்றனர். அத்துடன் தற்போது பொலிஸாருக்கான சிறப்பு பயிற்சி இடம்பெறுகின்றது. இதற்காகவும் சிலர் சென்றுள்ளனர்.

இந்த நிலையில் பொலிஸ் நிலையத்தில் சுமார் 15 பேர் மட்டுமே பணியில் இருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

பொலிஸ் நிலையத்துக்கு உட்பட்ட பிரதேசத்துக்கான பணிகள் பாதிப்படையும். இதற்கு ஏற்ப வெளிமாவட்டங்களிலிருந்து அதிகளவில் பொலிஸாரை இந்தக்காலத்தில் உள்வாங்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

(வ-101)

---

## ராணுவ

நம்பிக்கைதான் எப்போதும் கேள்விக் குறியாக உள்ளது. காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகம் உறுதியானதாக - பலமானதாக அமைக்கப்பட வேண்டும். இரகசியத் தடுப்பு முகாம்கள் தொடர்பில் பகிரங்கப்படுத்தப்படவேண்டும். அங்கு தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களின் பெயர் விவரங்கள் உடனடியாக பகிரங்கப்படுத்தப்படவேண்டும். கடத்தியவர்கள் - கடத்தலுக்குக் காரணமானவர்கள் தண்டிக்கப்படவேண்டும்.

பன்னாட்டு தரத்துடன், பன்னாட்டு நீதிபதிகள் நியமிக்கப்பட்டு உண்மை கண்டறியப்படவேண்டும். குற்றம் இழைத்தவர்கள் பன்னாட்டு சட்டபிரிவுகளின் கீழ் தண்டனைக்குள்ளாக்கப்பட்டால் மட்டுமே நல்லிணக்கம் சாத்தியமாகும். காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்கள் மீண்டும் பழைய நிலைக்கு வரக்கூடிய அளவுக்கு, அவர்களின் வாழ்க்கை கட்டியெழுப்பப்பட வேண்டும்.

உண்மை கண்டறிதல் பற்றி கதைக்கப்படுகிறது. யார் கொண்டு போனார்கள் - யாரிடம் கையளிக்கப்பட்டார்கள் - யாரிடம் இவர்கள் சரணடைந்தார்கள் என்ற உண்மை மக்களுக்கு தெரியும். இதற்கு இராணுவமும்பொலிஸாரும் புலனாய்வுப் பிரிவினருமே பொறுப்பாளிகள். அவர்கள் விசாரிக்கப்படவேண்டும்.

காணாமற்போனோர் அலுவலகத்தின் விசாரணை அதிகாரிகளுக்கு நீதிமன்ற அழைப்பாணையை ஒத்த அழைப்பாணை அனுப்பும் அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும். காணாமற்போனோர் அலுவலகத்திலும் பன்னாட்டுபொறி முறையின் கீழ் பன்னாட்டு நீதிபதிகள் நியமிக்கப்படவேண்டும்

போர் நிறைவடைந்ததன் பின்னர் இராணுவத்தினரிடம் சரணடைந்து பின் கொல்லப்பட்டவர்கள், இரசாயன ஆயுதப் பயன்பாடு, விச ஊசிக் கொலைகள் மற்றும் இன ஒழிப்பு என்பன தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும். தடுப்பில் இருந்தவர்களுக்கு ஏற்றப்பட்டதாகக் கூறப்படும் ஊசி தொடர்பில் பன்னாட்டு நிபுணத்துவத்துடன் கூடிய மருத்துவ நிபுணர்கள் நியமிக்கப்பட்டுச் சோதனை இடம்பெறவேண்டும்.

புலிகளின் பயங்கரவாதம் பற்றி கதைத்தால், அரச பயங்கர வாதம் பற்றியும் கதைக்க முடியும். நல்லிணக்கம் என்ற பெயரில் இலங்கை தேசியக் கொடியின் கீழ் ஒன்றிணைவதற்கு தமிழர்கள் தயாராகவில்லை. நீதி நிலை நாட்டப்பட்டால் மாத்திரமே, அப்படியான நல்லிணக்கம் ஏற்பட வாய்ப்புண்டு. தமிழர்கள் தங்களை தாங்களே ஆளக்கூடிய கூட்டாட்சி உரிமையும் அதிகாரங்களும் வழங்கப்பட வேண்டும். பன்னாட்டு சமூகத்தின் மூலமே இவை சாத்தியமாகும் - என்றார்.

நேற்றைய அமர்வில் 44 பேர் தமது கருத்துக்களைப் பதிவு செய்தனர்.

(வ-109)

## மக்கள்

கொடூரங்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று வலியுறுத்தினர். இலங்கை இராணுவத்தினரால் நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டு புனர்வாழ்வு அளிக்கப்பட்டதாகக் கூறி விடுதலை செய்யப்பட்டுள்ள முன்னாள் போராளிகளுக்கு தொடர்ந்தும் பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதாகவும் முன்னாள் போராளிகள் பலர் முறையிட்டனர்.

போருக்குப் பின்னர் முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடரும் இராணுவத்தினருக்கும் மற்றும் சிங்கள மக்களின் குடியேற்றத்துக்காகவும் மக்களுடைய காணிகள் அபகரிக்கப்படுவது தொடர்பில் எமது அமர்வுகளில் மக்கள் அச்சம் வெளியிட்டனர். இது போன்ற பல விடயங்களை மக்கள் தெரியப்படுத்தியிருக்கின்றார்கள். தமிழ் மக்களின் உரிமைகளுக்காக முன்னெடுக்கப்பட்ட மற்றும் முன்னெடுக்கப்படும் போராட்டங்களின் நியாயத் தன்மை புரிந்துகொள்ளப்படவேண்டும். அவை குறித்து சுதந்திரமாக பகிரப்படுவதற்கான சந்தர்ப்பமும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவேண்டும் என போரினால் பேரழிவை சந்தித்த முல்லைத்தீவு மக்கள் எடுத்துரைத்தனர். - என்றனர். (வ-21)

## நல்லூர்

பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களே அதிகளவில் கடமையில் ஈடுபடுவார்கள். வடக்கு மாகாணத்தில் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை குறைவாக காணப்படுவதனால், அநுராதபுரத்தில் இருந்தும், பெண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் வரவழைக்கப்பட்டு, சிறப்புப் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். ஆலயத்துக்கு வருகை தருபவர்கள் தங்க நகைகள் அணிந்து வருவதை தவிர்த்துக்கொள்ளுவது பாதுகாப்பானது - என்றார். (வ-106)

## நல்லிணக்க

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பு அதிகாரி நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார். கைதடியிலுள்ள, முதலமைச்சர் செயலகத்தில் விக்னேஸ்வரனைச் சந்தித்துக் கலந்துரையாடினார். இந்தச் சந்திப்புத் தொடர்பில் வடக்கு முதலமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

இலங்கையில் சமாதானம் குறித்து அரசு எடுக்கும் நடவடிக்கைகளை ஆராயவும், பன்னாட்டு உதவி எந்தளவில் இருக்க முடியுமென்பதனை அறிந்துகொள்ளவும் வருகை தந்தார் என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் அதிகாரி தெரிவித்தார்.

புரிந்துணர்வையும் சமாதானத்தையும் ஏற்படுத்துவதற்கு அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. சமாதானம் ஏற்படுத்துவதற்கு முன்னர் அடிப்படைச் சூழல் இருக்க வேண்டும். அந்த சூழல் ஏற்படவில்லை.

தென்னாபிரிக்காவில் அரசியல் ரீதியான பிரச்சினைகளைத் தீர்வுக்கு கொண்டு வந்ததன் பின்னர்தான், உண்மையும் நல்லிணக்கம் சம்பந்தமான ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. அவ்வாறு செய்தால் மாத்திரமே மக்கள் இணைந்து செயற்பட தயாராகுவார்கள்.

வடக்கு மாகாணத்தில் அவ்வாறானதொரு சூழல் இருக்கவில்லை. ஒரு லட்சம் வரையான இராணுவத்தினர் வடக்கு மாகாணத்தில் நிலைகொண்டுள்ளார்கள். மக்களின் காணிகள் இராணுவத்தினர் வசம் இருக்கின்றன. மக்கள் நலன்புரி முகாம்களிலேயே இன்னும் தங்கியுள்ளனர். வாழ்வாதாரங்கள் மற்றும் மீன்பிடி தொழில்கள் தடைப்படுகின்றன. வளங்கள் சூறையாடப்படுகின்றன. இவ்வாறு பல குறைபாடுகள் உள்ளன.

இத்தகைய சூழலில் எவ்வாறு அமைதியையும் நல்லிணக்கத்தையும் கொண்டு வரப் போகின்றீர்கள்? என்று அதிகாரியிடம் கேள்வி எழுப்பினேன். அதனை அவர் ஏற்றுக்கொண்டார். இவ்வாறான நிலமைகள் குறித்துக் கலந்துரையாடவுள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டார் - என்றார் முதலமைச்சர்.

அரசமைப்பின்ஊடாகநல்லிணக்கத்தைக் கொண்டுவர முடியுமா? என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் அதிகாரி கேள்வி எழுப்பினார். அதற்கு வடமாகாண மக்களின் சார்பாக பல முன் மொழிவுகளை வழங்கியிருக்கின்றோம். அதில சமஷ்டி பற்றி வலியுறுத்திக் கூறியிருக்கின்றோம் எனப் பதில் வழங்கினேன். அதற்கு, சுயாட்சி என்ற அடிப்படையில் தீர்வினை எட்ட முடியாதா? என்று அதிகாரி கேள்வி எழுப்பினார்.

எதுவாக இருந்தாலும், எம்மை நாமே ஆளும் அரசமைப்பு ஒன்றே எமக்குத் தேவை, அதற்கு ஏற்ற வகையில் இருந்தால், நன்மை பயக்கும். ஆனால், சட்ட ரீதியாக சமஷ்டிக்குப் பல வியாக்கியானங்களை வேறு விதத்தில் கொடுக்க முனைந்தால், அதனை ஏற்றுக்கொள்ளாமல், நீதிமன்றங்கள் வேறு வியாக்கியானங்களைக் கொடுக்ககூடும். என்று அவருக்குச் சுட்டிக்காட்டியபோது, அவர் அதனை ஏற்றுக்கொண்டார். அவர் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் மீண்டும் வடக்கிற்கு வரவுள்ளார் என்றும் கூறினார். - இப்படிக் கூறினார் வடக்கு முதலமைச்சர்.

(வ-4,106)

## சொந்தக்

பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

வலி. வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த பின்னர் இன்னமும் நலன்புரி நிலையங்களில் வாழ்பவர்களைக் கடந்த ஜூன் மாதத்துக்கு முன்னர் தமது சொந்த இடங்களில் குடியமர்த்துவார் என்று ஜனாதிபதி மைத்திரிபால வாக்குறுதியளித்தார். ஆனால் அந்த உறுதிமொழி நிறைவேற்றப்படவில்லை. எனினும் இந்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் மீள்குடியமர்வு நடவடிக்கைகளை முழுமைப்படுத்துமாறு ஜனாதிபதிசெயலகத்திலிருந்து, யாழ். மாவட்டச் செயலகத்திற்கு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

இதற்கிடையில், நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த காணிகள் இல்லாத மக்களுக்குக் காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலைக்குரிய காணியில் இடங்கள் ஒதுக்கப்பட்டன. அவர்களை அங்கு குடியேற்றுவதற்கான நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அத்தோடு பாதுகாப்புத் தரப்பினர் இன்னமும் தம் வசப்படுத்தி வைத்துள்ள மயிலிட்டி, தையிட்டியை உள்ளடக்கிய காணிகளில் ஆயிரத்து 500 ஏக்கர் காணியை விடுவிக்க அமைச்சரவைப் பத்திரம் முன்னகர்த்தப்பட்டது. காணி விடுவிப்புத் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தலைமையிலான குழுவினர் நேரடியாக வலி. வடக்குக்கு வந்து நிலமைகளை ஆராய்ந்து ஜனாதிபதிக்கு அறிக்கையிட்டனர்.

இந்த நிலையில், சொந்தக் காணி இருந்தும் நலன்புரி நிலையங்களில் தங்கியிருப்பவர்களை அவர்களது இடங்களில் மீளக்குடியமர்த்த நடவடிக்கை எடுக்குமாறு மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் கோரியுள்ளார்.

(வ-5)

## சங்கானை

நடந்தது. இளைஞரின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்ப்பிக் கப்பட்டது. சாரதி கைது செய்யப்பட்டு விசாரணைக் குட்படுத்தப்பட்டார். விசாரணைகளைத் தொடர்ந்து வருகின்றனர் என்று வட்டுக் கோட்டைப் பொலிஸார் தெரிவித்தனர்.


(வ-4,106,250)

---

## மரண அறிவித்தல்

### வைரமுத்து செல்வராசா

தோற்றம்
23 . 04 . 1947



மறைவு
02 . 08 . 2016

நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து செல்வராசா 02.08.2016 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற பாலசிங்கம் - சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மருமகனும் ஈஸ்வரி (தேவி)யின் பாசமிகு கணவரும் பாமிலா(கனடா), காலஞ்சென்ற மஞ்சுளா, மேனகா (பிரான்ஸ்), பிரதீபா, கணநாதன்(லண்டன்), வனிதா(லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயராசா(கனடா), சிவசிறி(லண்டன்) காலஞ்சென்ற கிருஸ்ணரூபன் மற்றும் ரகுராம்(லண்டன்), சிந்துஜா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கஜேந்திரா, உருத்திரா, பபித்திரா, மதுவந்தி, இளங்கீரன், கிருஷாந்தி, திசோக், சரண் ஆகியோரின் பாசமிகு பேரனும் சண்முகசுந்தரம்(செல்லமுத்தூஸ் - நெல்லியடி) அவர்களின் சகலனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (07.08.2016) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மகாத்மா வீதி,
நெல்லியடி.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணுக்காய் பிரதேசசபை அட்டவணைப்படுத்தப்படாத பதவி வெற்றிடங்களை நிரப்புதல் - 2016

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் 01.01.2013 ஆம் திகதி முதல் துணுக்காய் பிரதேசசபை அனுமதிக்கப்பட்ட ஆளணி விவரங்களுக்கு அமைவாகவும் உள்ளூராட்சி அமைச்சச்செயலாளரின் NP/05/01/GE6/UNS/RQ இலக்க 08.03.2013 ஆம் திகதிய கடிதத் திற்கமைவாகவும் வடக்குமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அவர்களின் NP/14/01/ET/ET5/Ser.min/Gen.2013 இலக்க 20.01.2014 ஆம் திகதிய கடிதங்களுக்கமைவாகவும் துணுக்காய் பிரதேசசபையின் கீழ்க்குறிப்பிடப்படும் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களை உரிய ஆள்சேர்ப்புத்திட்டத்தின் கீழ் நிரப்புவதற்காகத் தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| இல | பதவிப் பெயர் | வெற்றிடம் |
|---|---|---|
| 01 | சாரதி தரம் 111 | 01 |
| 02 | சுகாதாரத் தொழிலாளி தரம் 111 | 02 |

**சேவை நிபந்தனைகள் :-**

1. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதும் ஆகும்.
2. ஊழியர், விதவைகள், தபுதாரர்கள் ஓய்வூதியத்திற்குப் பங்களிப்புச்செய்தல் வேண்டும்.
3. நியமனம் பெறுபவர்கள் மூன்று வருடங்கள் தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள்

**அடிப்படைத்தகைமைகள் :**

1. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும். துணுக்காய் பிரதேசசபை எல்லைக்குள் தொடர்ச்சியாக 06 வருடங்கள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும். கிராம உத்தியோகத்தரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழ் பிரதேச செயலாளரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அல்லது
2. நிரந்தர வதிவிடத்தை உறுதிப்படுத்தும் வாக்காளர் பட்டியலின் மூலப்பிரதி மூலம் உறுதிப்படுத்தப்படவேண்டும்.
3. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் இறுதித்திகதியில் (17.08.2016) 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே உள்ளூராட்சி சேவையில் நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமான நியமனங்களைக் கொண்டிருப்பவர்களுக்கு உயர் வயதெல்லை ஏற்புடையதாகமாட்டாது.
4. நன்னடத்தை உடையவராகவும் சிறந்த ஆரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

**தெரிவு செய்யும் முறை :-**

1. அங்கீகரிக்கப்பட்ட நேர்முகக்குழுவினால் நேர்முகப்பரீட்சை நடத்தப்படுவதுடன் சேவைப்பிரமாணக் குறிப்பில் குறிப்பிட்டதற்கமைவாக கல்வித்தகைமை ,தொழில்அனுபவம் ,வேலை மணப்பாங்கு என்பவற்றுக்கு புள்ளிகள் இடப்பட்டு தெரிவுகள் மேற்கொள்ளப்படும். விண்ணப்பதாரி நேர்முகப் பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கமைந்து ஒழுகுதல் வேண்டும்
2. துணுக்காய் பிரதேசசபையில் அமைய,தற்காலிக, ஒப்பந்த பயிலுநர்,தன்னார்வ சேவை செய்யும் ஊழியர்கள் மீது விசேட கவனம் செலுத்தப்படும்

**விண்ணப்பிக்கும் முறை :**

1. துணுக்காய் பிரதேசசபை அலுவலகத்தில் ரூபா.50/= செலுத்தி விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப் படிவத்தினைப் பூரணப்படுத்தி தகைமைகளுக்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். இவ் உள்ளூராட்சி மன்றத்தில் கடமைபுரிபவர்களும் விண்ணப்பிக்கலாம்.
2. விண்ணப்பப்படிவத்தில் உரியமுறையில் தேவையான தகவல்கள் பூரணப்படுத்தப்படாதிருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
3. விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியினால் தெளிவாகப்பூரணப்படுத்தப்படுதல் வேண்டும். சொந்தக்கையெழுத்தில் தயாரிக்கப்பட்டு அனுப்பிவைத்தல் வேண்டும்.தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.
4. ஒன்றிற்கு மேற்பட்ட பதவிகளில் விண்ணப்பிப்போர் ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாக விண்ணப்பிக்கவேண்டும்.
5. ஆள்சேர்ப்புத் திட்ட விதிமுறைகளின்படி விண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்கு தகைமை அற்றவர் என நியமனத்திற்கு முன்னரோ,நியமனத்திற்கு பின்னரோ அல்லது நியமனத்தின்போதோ முன்வைக்கப்படும் ஏதேனும் தகவல் ஒன்று பொய்யானது எனத்தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனமும் நிறுத்தப்படும்.
6. விண்ணப்பங்கள் யாவும் விண்ணப்பமுடிவு திகதியாகிய 17.08.2016 அன்று அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கக் கூடியதாக **"செயலாளர் பிரதேசசபை துணுக்காய்"** என்னும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். முடிவு திகதிக்குப்பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

**இல 1 சாரதி**

கல்வித்தகைமைகள் :கல்விப்பொதுத்தராதர சாதாரணதரப்பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரு திறமைச் சித்திகள் உள்ளடங்கலாக ஆகக்குறைந்தது 06 பாடங்களில் சித்திபடைந்திருத்தல் வேண்டும். ஒரே தடவையில் 05 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

போதிய விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாத பட்சத்தில் தரம் - 8 கல்வித்தகைமையாகக் கொள்ளப்படும்

**ஏனைய தகைமைகள்**

1. விண்ணப்பதாரி மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளரினால் வழங்கப்பட்ட வாடகை தனியார் மோட்டார்கார் 24 அந்தருக்கு குறையாத பாரவண்டி செலுத்தக்கூடிய வாகன ஓட்டுநர் அனுமதிப் பத்திரத்தை விண்ணப்ப இறுதித் திகதிக்கு மூன்று (03) வருடத்திற்கு முன்பு பெற்றிருத்தல் வேண்டும்(வாகன வகுப்பு C.CI)
2. மோட்டார் வாகனச்சாரதியாக மூன்று வருட (3) அனுபவத்திற்கான சான்றிதழ்
3. விண்ணப்பதாரி ஆகக்குறைந்தது 5அடி2 1/2 அங்குலம் உயரம் கொண்டவராக இருத்தல் வேண்டும்
4. விண்ணப்பதாரி இரவு பகல் எந்நேரமும் சேவையாற்றக்கூடிய உடல் உறுதியைக் கொண்டதுடன் சிறந்த கண்பார்வையினைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
5. பெருந்தெரு வீதிமுறை பற்றிய சிறந்த அறிவைக் கொண்டிருக்கவேண்டும்.

**சம்பளம்** :- 2016.01.01 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல 03/2016இற்கமைய மாதாந்த, சம்பள அளவுத்திட்டம் PL3-2016(25790-10*270-10*300-10*330-12*350-38990)

**இல-2 சுகாதாரத் தொழிலாளி:**

கல்வித்தகைமைகள் :-

கல்விப்பொதுத்தராதர சாதாரணதரப்பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரு திறமைச்சித்திகள் உள்ளடங்கலாக ஆகக் குறைந்தது 06 பாடங்களில் சித்திபடைந்திருத்தல் வேண்டும் ஒரே தடவையில் 05 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும். போதிய விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாத பட்சத்தில் தரம் -8 கல்வித்தகைமையாக கொள்ளப்படும்

சம்பளம்: 2016.01.01 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல 03/2016இற்கமைய மாதாந்த, சம்பள அளவுத்திட்டம்: PL1-2016(24250-10*250-10*270-10*300-12*330-36410)

குறிப்பு :-துணுக்காய் பிரதேசசபையால் உதயன் பத்திரிகையில் 21/08/2014இல் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் காலாவதியாகியதால் இரத்து செய்யப்படுகிறது. முன்னர் விண்ணப்பித்தவர்கள் மீளவும் விண்ணப்பித்தல் வேண்டும்.

**க.[illegible]னபாலசிங்கம்,**
**செய[illegible]ர், பிரதேசசபை, துணுக்காய்.**

(A/[illegible])

# கல்விசாரா ஊழியர்களின் போராட்டம் தொடர்கிறது

கொழும்பு, ஓக. 6

சேவைக்கு நேற்று கட்டாயம் சமுகமளிக்குமாறு அரசு விடுத்த அறிவித்தலையும் பொருட்படுத்தாது பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் தொடர்ந்தும் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

சேவைக்கு நேற்று சமுகமளிக்காத ஊழியர்கள் சேவையை விட்டு சுயமாக நீங்கிக் கொண்டவர்களாகக் கருதப்படுவார்கள் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நேற்றுமுன்தினம் அறிவித்தது.

இருப்பினும், தங்களது போராட்டத்தைக் கைவிடப் போவதில்லையென பல்கலைக்கழக தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பின் தலைவர் எட்வட் மல்வத்த தெரிவித்தார். (வ)

**தேவை**

பிரபல கட்டட பொருட்கள் விற்பனை நிலயத்திற்கு. நிரந்தர வகுப்பு தொழிலாளர்கள் தேவை,நீங்கள் எதிர்பார்க்கும் மாதாந்த சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு. சிற்றி ஹாட்வெயார் அன் ஸ்ரோரஸ்,
இல 55/57 ஸ்ரான்லிவீதி யாழ்ப்பாணம்.

**தேவை**

பிரபல கட்டட பொருட்கள் விற்பனை நிலயத்திற்கு, லொறி கிளீனர் தேவை.

தொடர்பு. சிற்றி ஹாட்வெயார் அன் ஸ்ரோரஸ்,
இல.55/57, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்.

**வாடகைக்கு**

அரியாலை கனகரட்ணம் வீதியில் 5 - Rooms, 2Halls, Varanda நவீன வசதிகளுடனான வீடு வாடகைக்கு உண்டு.

076 9768142, 071 427 4690

**வவுனியாவில் வேலை வாய்ப்பு**

வவுனியாவில் சர்வதேச ரீதியாக கணினி கற்கை நெறிகளைக் கற்பிக்கும், கணனி நிறுவனம் ஒன்றில் முகாமையாளர், உதவி முகாமையாளர், உதவி முகாமையாளர், சந்தைப்படுத்தல் முகாமையாளர், அலுவலக உதவியாளர்கள், கணினி விரிவுரையாளர்கள் உடனடி வேலை வாய்ப்பு தொடர்பு:- 0777 585920

**விற்பனைக்கு**

21/2, மாதம் நிரம்பிய ஜேர்மன் செப்பேட் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 077 94 62 841

**தேவை**

நல்ல நிலையில் உள்ள 709, 713, ரக TATA அரைத்தட்டு வாகனம் தேவை. விற்க விரும்பு வோர் தொடர்புகொள்ளவும்.

077 225 0149

**வீடு விற்பனைக்கு**

இலக்கம் 40/18, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தில் நிலப்பரப்பு 01 குளி 1.10 நிலப்பரப்பில் அமைந்த 03 அறைகள், குசினி, கோல், குளியலறை, சுற்றுமதிலுடன் அமைந்த வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு:
076 88 38 116, 077 62 58 246

**கணித வகுப்புகள்**


தரம் 6 முதல் 11 வரை மற்றும் O/L Repeat மாணவர்களுக்கும் கணித பாடம் தனியாகவும் குழுக்களாகவும் யாழ் நகரப் பகுதிக்குள் இருப்பிடம் வந்து கற்பிக்கப்படும்.

077 2863768

# 31 ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும்

**இன்று (06.08.2016 சனிக்கிழமை )**

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 07. | 06. |
| 12. | 07. |
| 1930 | 2016 |



## சங்கரப்பிள்ளை நடராசா
## (மரக்காலை ஐயா)

**ஏழாலை**

நானிலம் நயந்து வியந்திடும் பெருமகனே!
நல்லவர் வல்லவருக்கு திகட்டாத அருமருந்தே!
நலமாக நாம் வாழ உழைத்திட்ட உத்தமரே!
நெஞ்சமதில் அகலாத குடும்பச் சுடர் விளக்கே!
ஒளியாகி எம்முள் நிறைந்திட்ட திருவுருவே!
உங்கள் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் ஏழாலை வடக்கு, கொக்குவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட எமது குடும்பத்தலைவர் அவர்கள் 06.07.2016 அன்று சிவபதமடைந்த செய்தி கேட்டு தமது துயரை எம்முடன் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் பல வழிகளிலும் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் நோயுற்ற வேளை நலம் பெற வேண்டி உழைத்திட்ட வைத்திய பெருமக்களுக்கும் ஊழியர்களுக்கும் இறுதிச்சடங்கு நடைபெற்ற வேளையில் உதவி புரிந்திட்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எம் சிரம் தாழ்ந்த வணக்கத்தையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

விதானையார் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவல் அறியும் சட்டத்தில் ஒப்பமிட்டார் சபாநாயகர்

## நடைமுறைப்படுத்தும் பணிகள் ஆரம்பம்

கொழும்பு, ஓக. 6
தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் சபாநாயகர் கரு ஜயசூரிய கையொப்பமிட்டார். இதனை அடுத்து தகவல் அறியும் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பணி நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.
இரண்டு நாள்கள் விவாதத்தின் பின்னர் கடந்த ஜூலை 24ஆம் திகதி வாக்கெடுப்பின்றி குறித்த சட்டம் நிறைவேற்றப்பட்டது.
சபாநாயகர் சுகயீனமுற்றிருந்தன் காரணமாக சட்டம் கையொப்பமிடப்படாமல் இருந்தது. சிங்கப்பூரில் சிகிச்சைபெற்று நாடு திரும்பியுள்ள சபாநாயகர் நேற்று முன்தினம் தமது உத்தியோகப் பூர்வ இல்லத்தில் வைத்து சட்டத்தில் கையொப்பமிட்டார். இதன்படி சட்டம் ஆறு மாதத்துக்குள் நடைமுறைப்படுத்தப்படும். ஆறு மாதத்தின் பின்னர் மக்கள் தமது தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.
அமைச்சுக்கள், திணைக்களங்கள், அரச நிறுவனங்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், தனியார் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வித் திணைக்களங்களில் தகவல்களைப் பெற்றுக் கொள்ளமுடியும். ஆனால், இராஜதந்திர தகவல்கள், வர்த்தக உடன்படிக்கைகள், வங்கிகள், திறைசேரிகளின் தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல் வரையறுக்கப் பட்டுள்ளது.
இந்தநிலையில் கடந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போது நாடாளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கயந்த கருணாதிலக்க சபாநாயகர் தகவல் அறியும் உரிமைச் சட்டமூலத்திற்கு கையொப்பமிட்டதாகத் தெரிவித்தார். அதனை நிராகரித்த கூட்டு எதிரணி அரசு பொய்யான தகவல்களை மக்களுக்கு வழங்குவதாகக் குற்றஞ்சுமத்தியது. நேற்று முதல் சகல உள்ளூராட்சி நிறுவனங்களிலும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பில் விளக்கமளிக்கும் மாநாடுகள் ஆரம்பமாகியுள்ளன.
(வ-21)

# மூதூரில் 17 தொண்டுப் பணியாளர் படுகொலை குறித்து நீதிவேண்டும்

## அக்ஷன்பெய்ம் கோரிக்கை

கொழும்பு, ஓக. 6
மூதூரில் பத்து வருடங்களுக்கு முன்னர் மனிதாபிமானப் பணியாளர்கள் 17 பேர் படுகொலை தொடர்பில் நம்பகத்தன்மை மிக்க விசாரணைகள் இடம்பெற வேண்டும்.
இவ்வாறு வலியுறுத்தியது பணியாளர்களைப் பறிகொடுத்த அக்ஷன்பெய்ம் தொண்டு நிறுவனம்.
இது தொடர்பில் ஏ.எவ்.பி. செய்தி சேவைக்கு அக்ஷன்பெய்ம் தொண்டு நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி வெரோனிக் அன்டிரிக்ஸ் தெரிவித்ததாவது:
போர்க்குற்றங்கள் குறித்து விசாரணை செய்வதற்காகப் பன்னாட்டு ரீதியில் ஏற்றுக்கொள்ளப் படக்கூடிய பொறிமுறையை ஏற்படுத்துவோம் என ஐ. நா. மனித உரிமைகள் சபைக்கு இலங்கை வழங்கிய வாக்குறுதிகளில் ஏற்பட்டுவரும் முன்னேற்றத்தை உன்னிப்பாக அவதானித்து வருகின்றோம்.
குறிப்பிட்ட பொறுப்புக்கூறும் பொறிமுறை நம்பகத்தன்மை மிக்க சட்ட ரீதியான தீர்வை வழங்கும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம். சரியான பாதையில் காத்திரமான நடவடிக்கைகளுக்காக நாங்கள் காத்திருக்கின்றோம். தற்போது செயற்பாடுகளுக்கான தருணம் வந்துவிட்டது – என்றார்.
(வ-21)



போரினால் பாதிக்கப்பட்டு வவுனியா – பூவரசங்குளத்தில் வசிக்கும் கருணாநிதி யசோதினி என்பவருக்கு வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் அவரின் வாழ்வாதாரத்துக்காக 39,575 ரூபா பெறுமதியான நீர் இறைக்கும் மோட்டார் மற்றும் அதற்கு தேவையான பொருட்களும் ரூபா 10,425 பணமும் வழங்கப்பட்டன. (வ)

# பியருக்கு வரிச்சலுகை அரசு வழங்கக் கூடாது

## மைத்திரியிடம் வலியுறுத்துகிறது அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

கொழும்பு, ஓக. 6
பியருக்கு வரிச்சலுகை வழங்கக் கூடாதென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.
மதுபானம் மற்றும் புகையிலைப் பொருள்கள் அற்ற இலங்கையை உருவாக்க முற்படும் ஜனாதிபதி இந்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்துவாரென நம்புவதாகவும் அந்தச் சங்கம் நம்பிக்கை வெளியிட்டது.
வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பியர் நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கு வரிச்சலுகை வழங்க அரசு முயற்சிப்பதாக ஊடகங்களில் வெளிவரும் செய்திகளை அடிப்படையாகக்கொண்டு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் நவின் டிசொய்சா, ஜனாதிபதிக்கு நேற்று எழுதிய கடிதத்திலேயே இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.
"அண்மையில் நாட்டில் ஏற்பட்ட வெள்ள இடரினால் இலங்கையின் பிரதான பியர் தொழிற்சாலையொன்று பாதிக்கப்பட்டது. தற்போது நாட்டில் காணப்படும் பியர் கேள்வியைப் பூர்த்திசெய்யும் பொருட்டு பாதிக்கப்பட்ட இந்த நிறுவனத்தால் கம்போடியா மற்றும் லாவோஸிலிருந்து இறக்குமதிசெய்யப்படும் பியருக்கு 75 சதவீத வரிச்சலுகை வழங்குவதற்கு அரசு தயாராகிவருவதாக ஊடகங்கள் தெரிவிக்கின்றன.
அத்தியாவசியப் பொருளாகக் காணப்படாத பியர், தொற்றா நோய்களை ஏற்படுத்தும் காரணியாக விளங்கி வருகின்றது. அத்துடன், வருமான நெருக்கடிக்கு முகம் கொடுத்துவரும் அரசு, அதனைச் சமாளிப்பதற்காக அத்தியாவசியப் பொருள்களுக்கான வரிகளை அதிகரித்துள்ளது. இந்தநிலையில் பியருக்கு வரிச்சலுகை வழங்குவதைத் தவிர்த்துவிட்டு, அத்தியாவசியப் பொருள்களுக்கு அந்தச் சலுகையை வழங்கவேண்டுமென ஜனாதிபதி உட்பட அரசிடம் கேட்டுக்கொள்கிறோம்" என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது.
(வ-21)

# மகிந்த எச்சரிக்கை

பாதயாத்திரையை நடத்துவதற்கு எந்தவித எதிர்ப்பும் இல்லையென சிறிலங்கா சுதந்திரக் கட்சி அறிவித்து, பின்னர் பாதயாத்திரையில் கட்சி உறுப்பினர்கள் கூறிய கருத்துக்களை வைத்து அவர்களுக்கு எதிராகத் தீர்மானங்களை எடுப்பது கட்சியின் எதிர்காலத்துக்கு ஆபத்தானது.
இவ்வாறு தென்கொரியப் பயணத்தின் போது மகிந்த ராஜபக்ச நேற்றுத் தெரிவித்தார்.
சனத் நிசாந்தவுக்கு எதிராக சிறிலங்கா சுதந்திரக் கட்சி மேற்கொள்ளத் தீர்மானித்துள்ள ஒழுக்காற்று விசாரணை தொடர்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.
(வ)

## புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று

# பிரதேச சபைகளுக்கான தேர்தல் அறிவிப்பை நீக்கக் கோருகிறது 'கபே'

முல்லைத்தீவு, ஓக. 6
கடந்த ஐந்து வருடகாலமாக ஒத்திவைக்கப்பட்டுள்ள புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபைகளுக்கான தேர்தலை ரத்துச் செய்யுமாறு கபே அமைப்புக் கேட்டுள்ளது.
முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைபற்று பிரதேச சபைகளுக்கான வேட்புமனுத்தாக்கல் குளறுபடி காரணமாக தொடுக்கப்பட்ட வழக்கின் அடிப்படையில், குறித்த பிரதேச சபைகளுக்கான தேர்தல் 2011ஆம் ஆண்டு தொடக்கம் ஒத்திவைக்கப்பட்டது. 2015ஆம் ஆண்டு நல்லாட்சி அரசு இந்தத்தேர்தலை நடத்த முயற்சித்தது. எனினும் 2011ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பின் அடிப்படையில் குறித்த தேர்தலை நடத்த முயன்றது. இதற்கு எதிராக மீண்டும் வழக்குத் தொடரப்பட்டு தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது.
இலங்கை அரசமைப்பின் பிரகாரம் தேர்தல் ஒன்று ஒத்திவைக்கப்பட்ட நிலையில் எந்தவொரு அரசியல் கட்சியையும் பதிவு செய்ய முடியாது. இதன் காரணமாக 2011ஆம் ஆண்டு தொடக்கம் எந்தவொரு அரசியல் கட்சியும் இதுவரை பதிவு செய்யப்படவில்லை. [illegible] திற்கொண்டு ஒத்திவை[illegible] புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைபற்று பிரதேச சபைகளுக்கான தேர்தல்களை சிறப்பு வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக ரத்துச் செய்யுமாறு கபே அமைப்பு வேண்டுகோள் விடுத்தது.
அதன் மூலம் எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல்களின் போது புதிய கட்சிகள் தேர்தல்களில் போட்டியிடும் சந்தர்ப்பம் ஏற்படும் என்றும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.
குறித்த பிரதேச சபைகளுக்கான தேர்தல்களை ரத்துச் செய்வது தொடர்பாக நாடாளுமன்றத்தில் பிரேரணையொன்றை முன்வைப் [illegible]ள்ள [illegible] மாகாண சபைகள் அமைச்சு தெரிவித்தது.
(வ-21)

மரண அறிவித்தல்

சுப்பிரமணியம் இரத்தினசிங்கம்



யாழ். நீர்வேலி இராசவீதி மேற்கு, பத்தாவத்தை வீதியை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இரத்தினசிங்கம் 04.08.2016 வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் -அன்னலட்சுமி தம்பதிகளின் செல்வப்புதல்வனும் காலஞ்சென்றவர்களான கந்தையா செல்வச்சிரஞ்சீவி தம்பதிகளின் அன்பு மருமகனும் கலாவின் பாசமிகு கணவரும் மகிந்தனின் அன்புத் தந்தையும், குணசிங்கம் (ஓய்வு பெற்ற இலங்கை சீ.கூட்டுத்தாபனம், விநியோகப்பகுதி உத்தியோகத்தர்), நவரத்தினசிங்கம்(லண்டன்), பரமநாதன்(நீர்வேலி மேற்கு விவசாயிகள் சம்மேளன செயலாளர்), தவராசா(சுவிஸ்), சுபாஸ்கரன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.
அன்னாரது இறுதிக்கிரியைகள் (08.08.2016) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

சிவன் வீதி, நீர்வேலி மேற்கு, கரந்தன், நீர்வேலி.

தொடர்பு. சு.குணசிங்கம்-0213217389, சு.பரமநாதன்-0777918073
சு.சுபாஸ்கரன்-0213217389, மகிந்தன்(மகன்-கனடா)-+14162653045
சந்திரன்-(கனடா)-+14167684295, இந்திரன்-(சுவிஸ்)-+41319924952
தவராசா(சுவிஸ்)+41788963682

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## மனோகராவின் கால்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 6
வடமராட்சி கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் நடத்தத் திட்டமிட்ட கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் எதிர்வரும் 25ஆம் திகதி ஆரம்பமாகிறது.
மேற்படி தொடரில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் தமது பதிவுகளை எதிர்வரும் 8ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர். (ம-23-108)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஓக. 6

**எவரெஸ்ட் வி.க. தொடர்**

புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடர் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை மாலை 6.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கிளிநொச்சி உருத்திரபுரம் அணியை எதிர்த்து கிளிநொச்சி சென். மேரிஸ் அணியும், இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணியும் மோதவுள்ளன.

**நவசக்தியின் தொடர்**

நவசக்தி விளையாட்டுக் கழகம் நடத்தும் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான 7 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மனோகரா அணியை எதிர்த்து மணற்காடு சென். அன்ரனிஸ் அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் டயமன்ஸ் அணியை எதிர்த்து பலாலி விண்மீன் அணி மோத வுள்ளது.

**விக்னேஸ்வராவின் தொடர்**

புதுக்குடியிருப்பு விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள், குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது அரையிறுதியாட்டத்தில் கிளிநொச்சி உதயதாரகை அணியை எதிர்த்து சென். யூட் அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் மன்னார் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து செல்வபுரம் சந்திரன் அணி மோதவுள்ளது.

**மாகாணமட்ட எல்லே**

மாகாணமட்ட எல்லேத் தொடரொன்று இன்று ஆரம்பமாகிறது. ஆண்கள் பிரிவு ஆட்டங்கள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்திலும், பெண்கள் பிரிவு ஆட்டங்கள் அராலி மாவத்தை விளையாட்டுக் கழக மைதானத்திலும் நடைபெறவுள்ளன. (ம-422-108-23)



# உடுப்பிட்டி நவஜீவன்ஸ் சம்பியன் இறுதியில் கலைமதியை வீழ்த்தி

யாழ்ப்பாணம், ஓக. 6
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் கரப்பந்தாட்டத் தொடரில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி சம்பியனானது.
சரஸ்வதி சனசமூக நிலையத்தின் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி அணி மோதியது. ஐந்து செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதலிரு செற்களையும் முறையே 25:18, 25:15 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது நவஜீவன்ஸ். மூன்றாவது செற்றையும் நவஜீவன்ஸ் கைப்பற்றினால் நேர்செற் வெற்றிபெறலாம் என்ற நிலையில் அந்த செற்றை 26:24 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது கலைமதி. நான்காவது செற்றை 25:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய நவஜீவன்ஸ் 3:1 என்ற செற் கணக்கில் சம்பியனானது.
ஆட்டநாயகனாக நவஜீவன்ஸின் வசிகரன் தெரிவானார்.
இறுதி நாள் நிகழ்வுக்குத் தலைமை விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் கஜதீபன் கலந்து கொண்டார். (ம-23-422)

## சிவானந்தா, பீற்றர்ஸ் அணிகள் வென்றன பாரதியின் தொடரில்

கரணவாய், ஓக. 6
பொலிகை பாரதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகம், பொற்பதி சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகம் என்பன வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறின.
பாரதியின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகமும் வரணி யுத் விளையாட்டுக் கழகமும் மோதின.
2ஆவது நிமிடத்தில் சிவானந்தா அணியின் இலங்கேஸ்வரன் முதல் கோலைப் பதிவுசெய்தார். 13 ஆவது நிமிடத்தில் சுரேஸின் உதவியுடன் பதிலடி கொடுத்தது யுத். மாற்றங்கள் இல்லாமல் 1:1 என்ற கோல் கணக்கில் முடிந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியின் 38 ஆவது நிமிடத்தில் யுத் அணியின் அல்பிரட்டும், அடுத்த சில நிமிடங்களில் சிவானந்தாவின் பிரதீபனும் கோல்களைப் பதிவுசெய்ய நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரு அணிகளும் தலா இரு கோல்களைப்பெற்றதால், சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.
முடிவில் 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது சிவானந்தா.
தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் பொற்பதி சென். பீற்றர்ஸ் அணியை எதிர்த்து உரும்பிராய் சென். மைக்கல் அணி மோதியது. ஆட்டத்தின் பெரும்பாலான நிமிடங்களை தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த சென். பீற்றர்ஸ் விளையாட்டுக்கழகம் 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.
(ம-108)



## ஏமாற்றினார் நெய்மர்

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரில் தென்னாபிரிக்காவை வெல்லத் தவறியது நெய்மர் தலைமையிலான பிரேஸில்.
ஒலிம்பிக் தொடரில் களமிறங்கும் ஆண்கள் அணியில் மூவர் மட்டுமே 23 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருக்க முடியும். பிரேஸிலின் கால்பந்தாட்ட அணிக்கு நெய்மர் தலைமை தாங்குகிறார். தென்னாபிரிக்காவுடன் ஒப்பிடுகையில் பிரேஸில் மிகவும் பலமான அணியாகும். எனவே இந்த ஆட்டத்தில் பிரேஸில் வெற்றி பெறும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும் தென்னாபிரிக்கா பெரும் போராட்டத்தை வெளிப்படுத்தி கோலெதனையும் பதிவுசெய்ய விடாது பிரேஸிலைச் சமன் செய்தது. (ம)

# இலங்கை அணியில் மூன்று தமிழ் வீரர்கள்

யாழ்ப்பாணம், ஓக. 6
மலேசியாவில் இடம்பெறவிருக்கும் ஆசிய பாடசாலைகளுக்கு இடையிலான 15 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவினருக்கான கால்பந்தாட்டத் தொடரில் விளையாடும் இலங்கை அணியில் மூன்று தமிழ் வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.
கொழும்பு சிற்றி லீக் மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற தெரிவு முகாமில் கலந்துகொண்ட இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி வீரன் றொக்சன், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி வீரன் கஸ்ரோ, ஏழாலை சிறிமுருகன் மகா வித்தியாலய வீரன் சாருஜன் ஆகிய மூவருமே தெரிவாகியுள்ளனர். (ம-23)


கஸ்ரோ


றொக்சன்


சாருஜன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ரியோ ஒலிம்பிக்

# ஆர்ஜென்ரீனாவை வென்றது போர்த்துக்கலின் இளம்படை

ரியோ ஒலிம்பிக் ஆண்கள் பிரிவு கால்பந்தாட்டத்தில் போர்த்துக்கல் அணி ஆர்ஜென்ரீனாவை 2:0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது. ஒலிம்பிக் இன்றே ஆரம்பித்தாலும் அதன் கால்பந்தாட்டப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் போர்த்துக்கல், ஆர்ஜென்ரீனா அணிகள் மோதின. முதல் பாதியின் முடிவு வரை எந்த அணியாலும் கோல் கணக்கை ஆரம்பிக்க முடியவில்லை. இரண்டாம் பாதியின் பின்னர், 66 ஆவது நிமிடத்தில் போர்த்துக்கல் அணியின் பசினியா முதல் கோலைப் பதிவு செய்தார். 84 ஆவது நிமிடத்தில் பிட்டே போர்த்துக்கலின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்ய முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது போர்த்துக்கல். இந்த வெற்றியின் மூலம் போர்த்துக்கல் அணி 3 புள்ளிகள் பெற்று டி பிரிவில் முதலிடத்தைப் பிடித்தது. (ம)

## ரங்கன கேரத் ஹற்றிக் சாதனை வெற்றியின் விளிம்பில் இலங்கை

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் இரண்டாம் நாளான நேற்று இலங்கை அணியின் வெற்றி கிட்டத்தட்ட உறுதியாகியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து முதல் இன்னிங்ஸிற்காக 281 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக குசல் மெண்டிஸ் 86 ஓட்டங்களைக் குவித்தார்.

பதிலுக்கு களமிறங்கிய ஆஸி. முதல் நாள் முடிவில் 54-2 என்றிருந்தது. கவாயா 11 ஓட்டங்களுடனும், சிமித் ஓட்டமெதனையும் பெறாத நிலையிலும் இரண்டாம் நாளுக்காகக் களமிறங்கினர். ஆஸியை ஆட்டிப் படைத்தார் கேரத். சிமித் ஆட்டமிழக்க ஆஸ்திரேலியா சரணடைவது கிட்டத்தட்ட உறுதியாகியது. 25 ஆவது பந்துப்பரிமாற்றததில் வோக்ஸ், நெவில், ஸ்ராக் மூவரையும் அடுத்தடுத்து வீழ்த்தி ஹற்றிக் சாதனை படைத்தார் கேரத். 106 ஓட்டங்களில் சுருண்டது ஆஸி.

இரண்டாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய இலங்கை சகல இலக்குகளையும் இழந்து 237 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக டில்ருவான் பெரேரா 64 ஓட்டங்களைக் குவித்தார். பந்துவீச்சில் வேகப்பந்து வீச்சாளர் ஸ்ராக் 6 இலக்குகளைக் கைப்பற்றினார். சுழலுக்கு சாதகமான ஆடுகளத்தில் வேகப்பந்து வீச்சாளர் ஒருவர் இவ்வாறு இலக்குகளைக் கைப்பற்றுவதென்பது தனித்திறமையே.

413 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்கு களமிறங்கிய ஆஸ்திரேலியா நாள் முடிவில் 25-3 என்றுள்ளது. இதுவரையிலுமான பெறுபேறுகளின் அடிப்படையில் இலங்கை வெற்றிக்கு மிக அருகிலேயே உள்ளதாக கணிக்கப்படுகிறது. (ம)



# மூன்றாவது தங்கத்தை வெல்வேன்; வலேரி அடம்ஸ் பகிரங்க அறிக்கை



இன்று அதிகாலை ஆரம்பமாகியுள்ள ரியோ ஒலிம்பிக் தொடரில் தங்கம் வென்று ஒலிம்பிக் தொடரில் ஹற்றிக் தங்கம் எனும் சாதனையைப் படைப்பேன் என்று பகிரங்கமாகத் தெரிவித்தார் நட்சத்திர வீராங்கனையான வலேரி அடம்ஸ்.

நியூசிலாந்தைச் சேர்ந்த வீராங்கனையான வலேரி அடம்ஸ், 2008 ஆம் ஆண்டு பீஜிங் நகரில் நடைபெற்ற ஒலிம்பிக் தொடரிலும், 2012 ஆண்டு லண்டன் நகரில் நடைபெற்ற ஒலிம்பிக் தொடரிலும் தங்கம் வென்றிருந்தார். அவர், லண்டனில் 20.77 மீற்றர் தூரத்துக்கு குண்டு போட்டதே இதுவரை சாதனையாக உள்ளது. இந்த நிலையில் நடப்பு ஒலிம்பிக் தொடரில் பெரிதும் எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகளில் அடம்ஸுக் கும் பிரதான இடமுண்டு.

"ஒலிம்பிக் தொடரில் மூன்று முறை தங்கம் வெல்வதென்பது எனது கனவு. அது ரியோ டி ஜெனிரோ ஒலிம்பிக் தொடரில் நிறைவேறும் என்பதில் உறுதியாக உள்ளேன். தங்கம் வெல்வதுடன் மட்டும் நின்றுவிடாது எனது சாதனையை நானே முறியடிக்கவும் விரும்புகிறேன்" என அடம்ஸ் மேலும் தெரிவித்தார். (ம-ரி4)

## வாவ்ரிங்கா விலகினார்

ரியோ ஒலிம்பிக் தொடரிலிருந்து விலகினார் சுவிட்சர்லாந்தின் நட்சத்திர ரென்னிஸ் வீரரான ஸ்ரியான் வாவ்ரிங்கா.

கனடாவில் நேற்று முன்தினம் முடிவடைந்த றோயேர்ஸ் கிண்ணத் தொடரின் போது வாவ்ரிங்காவின் முதுகில் காயம் ஏற்பட்டது. குறித்த காயத்திலிருந்து குணமடையாத நிலையில் அவர் ஒலிம்பிக்கில் இருந்து விலகினார்.

ஏற்கனவே முன்னணி வீரர் பெடரரும் விலகியதால் சுவிட்சர்லாந்து அணிக்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளது. (ம)



# இரண்டு பிரிவாக டெஸ்ட் இந்தியாவும் எதிர்க்கிறது



இரண்டு பிரிவுகளாக டெஸ்ட் தொடர்களை நடத்துவதுக்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தனது எதிர்ப்பை வெளியிட்டது.

டெஸ்ட் ஆட்டங்களில் விறுவிறுப்புத் தன்மையைக் கொண்டு வருவதற்கும், அதிக அணிகளுக்கு டெஸ்ட் அந்தஸ்தை வழங்கும் நோக்கிலும் டெஸ்ட் ஆட்டங்களை இரு பிரிவாக நடத்த சர்வதேச கிரிக்கெட் சபை தீர்மானித்தது.

இதன்படி தரப்படுத்தலில் முதல் ஏழு இடத்திலுள்ள அணிகள் முதல் பிரிவிலும் தரப்படுத்தலில் அடுத்த ஐந்து இடங்களிலும் உள்ள அணிகள் இரண்டாவது பிரிவிலும் விளையாடும் எனவும், இந்தத் திட்டம் சரிவந்தால், ஆப்கானிஸ்தான், அயர்லாந்து ஆகிய நாடுகளுக்கு டெஸ்ட் அந்தஸ்து வழங்கப்படும் எனவும் ஐ.சி.சி. அறிவித்தது.

இந்தத் திட்டத்துக்கு இலங்கை கிரிக்கெட் சபை, பங்களாதேஷ் கிரிக்கெட் சபை என்பவை தமது எதிர்ப்பை உடனடியாகவே தெரிவித்தன. தற்போது இந்தியாவும் தனது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது. எனினும் ஆப்கானிஸ்தான், அயர்லாந்து அணிகளை டெஸ்ட்டில் இணைப்பதற்கு தனது ஆதரவையும் தெரிவித்தது. (ம)

## ஒலிம்பிக்கில் திருட்டுக்கள்

ரியோ ஒலிம்பிக் தொடருக்காக அமைக்கப்பட்டுள்ள ஒலிம்பிக் கிராமத்தில் தொடர்ந்து திருட்டுக்கள் இடம்பெறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஆஸ்திரேலிய அணியின் நிர்வாகி ஒருவரின் மடிக் கணினிகள் திருட்டுப் போயின. இந்த நிலையில் டென்மார்க் அணியைச் சேர்ந்த வீரர்களின் கைத்தொலைபேசியும் ஏனைய சில உடமைகளும் திருடப்பட்டுள்ளதாக அந்த அணியின் முகாமையாளர் தெரிவித்தார்.

"ஒலிம்பிக் கிராமத்தில் வீரர்களின் உடமைக்கு தகுந்த பாதுகாப்பு அளிக்க வேண்டும். எமது உடமைகளை நாம் பாதுகாப்பதில் குறிக்கோளாய் இருந்தால், விளையாட்டுக்களில் கவனம் செலுத்தமுடியாது. எனவே வீரர்களின் ஓய்வறைக்கும் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும்" என டென்மார்க் ஒலிம்பிக் அணியின் முகாமையாளர் மேலும் தெரிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சமையலாள் தேவை

கண்டி, கம்பளையில் உள்ள யாழ்ப்பாண உணவகம் ஒன்றுக்கு இட்லி, தோசை, வடை செய்பவர் உடனடியாகத் தேவை.

071 924 4126

# லெய்செஸ்டர் சிற்றியை வென்றது பார்சிலோனா

லெய்செஸ்டர் சிற்றி, பார்சிலோனா அணிகளுக்கு இடையில் நடைபெற்ற நட்பு ரீதியிலான கால்பந்தாட்ட ஒன்றில் லெய்செஸ்டர் சிற்றியை வீழ்த்தியது பார்சிலோனா.

பார்சிலோனா அணியின் லூயிஸ் சுவாரஸ் முதல் பாதியின் 23 ஆவது, 43 ஆவது நிமிடங்களில் கோல்களைப் பதிவுசெய்தார். 2:0 என்று பார்சிலோனாவின் ஆதிக்கத்துடன் முடிந்தது முதல் பாதி. ஆட்டத்தின் 54 ஆவது நிமிடத்தில் லெய்செஸ்டரின் ரபா தனது அணியின் முதல் கோலைப் பதிவு செய்தார். மெஸ்ஸி 60 ஆவது, 73 ஆவது நிமிடங்களில் கோல்களைப் பதிவுசெய்ய 4:1 என்று ஆதிக்கம் செலுத்தியது பார்சிலோனா. அகமட் முசா 88 ஆவது நிமிடத்தில் லெய்செஸ்டரின் சார்பாக பிறிதொரு கோலைப் பதிவுசெய்த போதிலும் முடிவில் 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது பார்சிலோனா.

(ம)

## - வேலைவாய்ப்பு -

இலங்கையின் முன்னணி கணணிக்கல்வி நிறுவனத்திற்கு கீழ்வரும் பணிநிலை வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.கணணி ஆய்வுகூட பராமரிப்பாளர்.(Lab Assistant)

தகமைகள்
- வயது எல்லை - 18-25
- Computer Hardware தொடர்பான Diploma கற்கை நெறி பூர்த்தி
- Computer Hardware Reparing / Networking அனுபவம் உள்ளவருக்கு முன்னுரிமை.

2.அலுவலக உதவியாளர்.(Office Assistant)

தகமைகள்
- வயது எல்லை - 18-25
- GCE O/L

நேர்முக தேர்விற்கு 15.08.2016 ற்கு முன் சமூகமளிக்கவும்

ESOFT METRO CAMPUS
No. 137,K.K.S Road,Jaffna ,Srilanka
Hot Line : 077 309 9 308 | Land Line : 021 222 4142

ESOFT
Shaping Lives, Creating Futures

யாழ்ப்பாணம் ஆவரங்கால்
பர்வதவர்த்தனி அம்மை சமேத நடராஜ இராமலிங்க சுவாமி கோவில்



## பூங்காவன உற்சவம்

இன்று (06.08.2016) சனிக்கிழமை மாலை 7.00 மணிக்கு பூங்காவனத்தில் எழுந்தருளி அடியவர்களுக்கு அருள்பாலிப்பார்

விசேட கலை நிகழ்வுகளாக

* கவிதா ஞானதயாளனின் நடன நிகழ்ச்சி

புகழ் பூத்த விசேட தவில் நாதஸ்வர வித்துவான்களான

* சுதா குழுவினர் * பால முருகன் குழுவினர்
* நாகதீபன் * K.P குமரன் வழங்கும் நாத சங்கமம்

தேவஸ்தான, பூங்காவன உற்சவ, ஏற்பாட்டாளர்கள்.

தாயகம் மற்றும் புலம்பெயர் நாடுகளில் உள்ள தென்மராட்சி அபிவிருத்திக் கழகங்கள் ஒன்றிணைந்து நடத்தும்

## தென்மராட்சி விழா - 2016

இன்று (06.08.2016) - சனிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் பிரதேச விளையாட்டு விழா . மட்டுவில் வளர்மதி விளையாட்டு மைதானம்
நாளை (07.08.2016) - ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்குப் பரிசில் நிகழ்வும் கௌரவிப்பும்.
இடம் - சாவகச்சேரி நகர் பொன் விழா மண்டபம்.
தலைமை - பேராசிரியர் க.கந்தசாமி (தலைவர் - தென்மராட்சி அபிவிருத்திக் கழகம்) .
முதன்மை விருந்தினர்கள் - கௌரவ த.குருகுலராஜா - கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சர் - வடமாகாணம்.
கௌரவ வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம் - சுகாதார அமைச்சர் - வடமாகாணம்.
சிறப்பு விருந்தினர்கள் - உயர்திரு. சு.கிருஷ்ணகுமார் (வலயக்கல்விப் பணிப்பாளர்- தென்மராட்சி).
வைத்திய கலாநிதி ஆ.புவிநாதன் (தலைவர்- தென்மராட்சி அபிவிருத்திக்கழகம் - பிரித்தானியா)

பிரதேசத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட இசை நடன நிகழ்வுகள் இடம்பெறும்.

அனைவரும் வருக

தென்மராட்சி அபிவிருத்திக்கழகம்

வடமாகாண G.C.E. (O/L) (க.பொ.த.(சா/த)) மாணவர்களுக்காக

## கொழும்பு அருள் கல்வி வட்டத்தினரால் நடத்தப்படும்

முற்றிலுமான இலவசக் கருத்தரங்கு

### நேரசூசிகை

| திகதி | இடம் | நேரம் |
|---|---|---|
| 11.08.2016 வியாழன் | ஊர்காவற்றுறை பிரதேச செயலகம் | காலை 8.30 - பி.ப. 3.00 |
| 12.08.2016 வெள்ளி | வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி | காலை 8.00 - பி.ப. 3.00 |
| 13.08.2016 சனி | யாழ்.வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம் (பெண்களுக்கு மட்டும்) | காலை 8.30 - பி.ப 3.30 |
| 14.08.2016 ஞாயிறு | யாழ். வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம் (ஆண்களுக்கு மட்டும்) | காலை 8.30 - பி.ப. 3.30 |
| 15.08.2016 திங்கள் | யாழ். வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம் (இருபாலாரும்) | காலை 8.30 - பி.ப. 3.00 |
| 16.08.2016 செவ்வாய் | உருத்திரபுரம் மகா வித்தியாலயம் | காலை 8.00 - பி.ப.3.00 |
| 17.08.2016 புதன் | கற்சிலைமடு அரசினர் கலவன் பாடசாலை (அ.த.க) | காலை 8.00 - பி.ப. 3.00 |
| 18.08.2016 வியாழன் | வவுனியா நகரசபை மண்டபம் | காலை 8.00 - பி.ப. 3.00 |
| 19.08.2016 வெள்ளி | மன்னார் நகர சபை மண்டபம் | காலை 8.00 - பி.ப.3.00 |

| பாடம் | ஆசிரியர்கள் |
|---|---|
| கணிதம் | 1. வே. தேவசேனாதிபதி LLB, சட்டத்தரணி<br>2. K. வசந்தன் (Trained Teacher Colombo)<br>3. S. மணிமாறன் (Trained Teacher Colombo)<br>4. M.லிங்கேஸ்வரன் B.Sc,PGDE Teacher St. John's College Jaffna. |
| விஞ்ஞானம் | 1. வே. சுந்தரேஸ்வரன் Rtd.D.G.M, தேசிய லொத்தர் சபை<br>2. V. பிரேம்குமார். P.H.I யாழ்ப்பாணம் |
| தமிழ், வரலாறு | 1. S. நடராஜா B.A (Hons)<br>2.K. திவாகர் B.A (Hons) |

* நூல்கள் முற்றிலும் இலவசமாக வழங்கப்படும்
* அனைத்துப் பாடமும் அடங்கிய Tutes முற்றிலும் இலவசமாக வழங்கப்படும்
* புதிய விஞ்ஞான வினாவிடைக் கொத்து - இலவசமாக வழங்கப்படும்

"அனைவரும் கலந்துகொண்டு பயன் பெறவும்"

இலவசக் கருத்தரங்கின் முழு அனுசரணையாளர் :
சட்டத்தரணி வே. தேவசேனாதிபதி LLB
தொ.இல.077 113 3400, 011 232 7524

தொடர்பு :
1) பே. இளமுருகன் B.Sc. - 077 907 3593,
2) ஆ. முருகானந்தன் - 071 856 1252,
3) கே.சக்திதரன் AD - 077 842 9649,
4) எஸ். ஐங்கரன் - [illegible]

ஊடக அனுசரணை : உதயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.08.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.